26
3-80

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

26
3-80/1880/3

பூரணாநந்தோதயம்.

ஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமிகளின்

மரபிலெழுந்தருளிய,

கண்ணுடையவள்ளலார்சுவாமிகளவர்கள்

அருட்பெற்றவரும்

பிரங்தசைலம் தத்துவசாஸ்திரி தோ. அரங்கையாவர்கள்

குமாரருமாகிய

சாங்குசித்த சிவலிங்க நாயனார்

அவர்கள் சுவாநுபூதியில் உதித்தவாறு

பாடியது.

இஃது,

தஞ்சை அ. வே. ம-ா-ா-ஸ்ரீ, சஷ்டாவதானம்

வயிரக்கண் வேலாயுதப்புலவர்

அவர்களைக்கொண்டு பார்வையிடுவித்து

ம-ா-ா-ஸ்ரீ, இராமசாமி சுபுத்திரர்

ஸ்ரீகிருஷ்ணப்பிள்ளை அவர்களால்,

சென்னை:

பாஸ்ட்டர் அச்சாபீசில் பதிப்பிக்கப்பட்டது.

1879.

சாத்றுக்கவிகள்.

இஃது,

மஹாவித்வசிகாமணியாகிய

புரசை - அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள்

இயற்றிய

கழிநெடிலாசிரிய விருத்தம்

நிறையமைசச்சிதானந்தபூர்த்தி நிலவியெவ்வுயிர்க்கு மொரு
ணர்வாய், முறையமைபூதபௌதிகமான முதலதாயாவையு
ங்கடந்த, பொறையமைபொருளி னுணர்ச்சியென்றூர்வப்
பொலிவினூற்சிவலிங்கப் பெயரோன், துறையமைபூரணான
ந்தோதயநூல் சொற்றனன் றன்னநுபவத்தே.

இஃது

சென்னை இராஜதானி சர்வகலாசாலை இயற்றமிழ்ப்புலவர்

கோமளபுரம்

இராஜகோபால் பிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறனோங்கு செயனல்லன் குணனல்லனருந்தமிழ்வாய் மடுத்துநின்ற
திறனோங்கு சிற்பரத்திற் சிந்தையெலா மொருப்படுத்திச்சிவாநுபூதி
நிறனோங்கு சிவலிங்க நீடுபெயர்புனிதபுண னெடிதுதோப்
புறனோங்குமுயிர்பூரணானந்தோதயப்புதுநூல் புகன்றீந்தானால்.

சாத்துக்கவிகள்.

திருச்சிற்றம்பலம்,

இஃது

ஈச்சுர்கணக்கு

சச்சிதானந்தசுவாமிகள் அவர்கள்

இயற்றியது.

விருத்தம்.

அறமிர[illegible]டிதருவ[illegible]னின்றுஞ்த
வளங்குடும்பியாயமர்ந்துஞானத்
திறமனைத்துமுணர்ந்துதனைபுணராம
லுணர்ந்தநிலைசிரோட்டத்தாலே
நிறையுபார்பூரணன்றோதயப்
புதுநூலுலகுய்யநிகழ்த்தியீந்தான்
புறமினைவொன்றிலாத சிவலிங்க
பத்தனெனும்பெயர்கொள் புனிதன்றானே.

இஃது.

செவலைப்பொறை.

சின்னசாமிகவிராஜபண்டிதரவர்கள்

இயற்றிய

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வாரணஞ்சூழுலகசரா சரம்பு ரக்கும்
வல்லவன்பொற் கமலத்தா ளிறைஞ்சும் பக்திக்
காரணமார் கண்ணுடைய வள்ள லார்தங்
கருணைக டாக்ஷமதாற் சிவத்தின் மிக்க
நாரணஞ்சேர் சிவலிங்க மென்னும் நாமன்
நற்றமிழிற் பதுவலொன்றி யற்றி திவ்யப்
பூரண நந்தோதயமெனும் நற்பேர்ப்
பூட்டினன் உள்ளன்புக் காட்டி னனே.

இதுவுமது வெண்பா.

காரணா நந்தன் களித்தாங் சறுபவத்தாற்
பூரணா நந்தோத யம்புகன்றான் - நாரண
சாயிரங் கையன் றவச்சேய் சிவலிங்க
மாலருத் திக்கூர்ந்து மன்.

இவை

பிறிட்டிஷ்பற்மா அரா[illegible]ன மாஜிஸ்திரேட்டு
கோர்ட்டு இன்ட்டர்ப்ர[illegible]டர்
பெங்களூர்
சு. இராமசாமிபுலவர்.
இயற்றிய

விருத்தம்.

மலரினிலொழுகுந் தேனினையுண்டு
வண்டுபாண் மிழற்றிடுஞ்செந்நெல்
வயல்களிலன்னங் கண்படுத்திடவும்
வண்டிரளங்கதிர் பரப்ப
வான்றொடுசிகர முடையனவாகும்
வாகுசேர் பிங்கிசைலத்தின்
மாதவமுளவ பழனியுவாத்தியாயன்
மனதினுக்கினிய மாணாக்கன்
இலகொளிபரவுந் தர்ம்மமேசொரூப
இரங்கையர் மிகதவப்பேற்றா
விருநிலம்புகழ வவதரித்திட்டோன்
எண்குணன் சேவடிபோற்று
மி[illegible]க்கணவிலக்கிய நூற்பலகற்றோ
ரின்புறுஞ் சிவலிங்கப்பெயரோ
னெம்பிரான்றிவ்விய பத்தினைப்புகழ்ந்தே
யியம்பினன் பூரணாநந்தம
தவமதிலுற்ற ஞானிகள்வியக்க
சதாசிவம் செவிகளைச்சாய்க்க
சண்முகன்மருள வகத்தியன்றிகைக்க

சக்கரணுவாண டொடுங்க
சதுர்மறையோர்க ளுண்டகமீற
சரஸ்வதி யையுற்றுவாட
தவமுனியவர்கட் கிதுவழியாமெனச்
சாற்றியே சேடனுமடங்க
குலவுமிப்புவியின் மாந்தரைம்புலன்கள்
கூடுமாகாமியங் கெடுத்துக்
கூர்ந்தநல் [illegible] வதற்கோ
[illegible]டுத்தன்ஈ தம்மம்மாவென்றே
குவலயப் புகழ வாணர்தங்கரங்கள்
[illegible]ொட்டியானந்த கூத்தாடக்
கூறினனென்றுவிதன துசீர்மை
குறித்தெவர்சொலலுவர்மாதோ.

இஃது.

வேலூர்

கோவிந்தராஜபாகவதர்களால்

இயற்றிய

கட்டளைக்கலித்துறை.

நீர்மேவுமார்கலி நானிலத்தீச னெடியவருட்
பேர்மேவுந் தானுற்ற பூரணானந்தம் பிறரடைய
தார்மேவு மார்பனரங்கைய வேட்டவத்தாலுதித்த
சீர்மேவுநற்சிவ லிங்கமால்பாவெனச்செப்பினனே.

ஆதம்பாக்கம் தமிழ் உபாத்தியாயர் வ[illegible]கவி

செல்லக்குட்டிபிள்ளை

இயற்றிய

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

கந்தமலர்வாவிசூழ்பிறிங்கிமாநகருணை
கணத்தசாஸ்த்திர குலதிலன்

சாத்துக்கவிகள்.

காதலொடுறங்கைய னீன்றதவப்புத்திரன
கல்விப்பிரவாகக்கபுணன்
சிந்தைமிக பொங்கியே சிவலிங்கனயனார்
சிறப்பொடட்று மூன்றுசித்தர்
செய்தவேதாந்தநூல் யாவையும் முணர்ந்து
தெளிந்துச் சிவானுபூதி
அந்தமுறு அத்துவித அட்டாங்கயோகமுறை
அறுசமையங் கோட்பாடெலாம்
ஆசிரியர் கண்ணுடைய வள்ளல்திருவருளினால்
ஆனந்தமவுன சுகுணன்
சந்ததம் நித்தியாநந்தசைதன்யநிலே
தத்துவமெலாமொடுக்கி
தாரணியில் பூரணாநந்தோதையச்சுருதி
தந்தனன் மேலோங்கவே.

பிருங்குசைலம்

கி. மாரிமுத்து உபாத்தியாயர் இயற்றியது.

எண்சீர்க்கழிநெடில் விருத்தம்.

நலங்கொள் வேதாந்தமனை நாற்றிசையுமணக்கும்
நல்லொழுக்க ஞானமனை நண்ணசிவயோகந்
தலம்புகழ்சித்தாந்தமணந் தங்கும்பெரியோராற்
சந்ததமும் பரிமளிக்குந் தகைமையானப்
பலவளஞ்சேர் பிருங்குசலப் பதிவாழ்சில
பாக்யரங்கையவேட் டவத்தித்த
புலவர்புகழ்சிவலிங்க நாயன்றன்னால்
புகன்றபூரணனந்த புனிதனாலே.

சென்னை புரசை

ஜோதிஷம் ம-ா-ா-ஸ்ரீ,

சொ. முத்திருளப்பண்டிதரவர்கள்

இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

சென்னைநகர்க்கொருகாத நிருதிமூலை
சேர்பிரங்கி[illegible]ழுஞ் சுத்த
மன்னுசாங்கு சித்தசிவ லிங்கமென்னும்
வளம்பெறு நாமத்துடைய மாதவத்தோன்
தன்னுடைய பத்திசிறந் தெழுந்தமோனந்
தனையெவர்க்கும்பரிவாக விளக்கவேண்டி
நன்னயமாம் பூரணாநந் தோதயமென்று
நவின்றிட்டானெவர்க்கு மிந்நூல்நலமென்பேனே.

இஃது,

பெருங்களத்தூர்

ம-ா-ா-ஸ்ரீ, ரா. வேலாயுதப்பிள்ளை சுபுத்திரர்

[illegible]ங்காளிபண்டிதரால்

இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

வள்ளலே சர்க்குருவடிவதாயெழுந்தவள்ளலைப்பிள்ளையார்வடிவை உள்ளமேகண்டுவுணர்பிழிஞான வுயிர்பூரணாநந்த வுதயம்,விள்ளவே வெண்டமிழ்ச்செய்யுளாற்பாடி விளங்கச்செய் சிவலிங்கமெனுமான் தெள்ளறத் தெளிந்தோர் வள்ளலிருளை சேர்வது திண்ணமென் றுரைப்பாம்.

இதுவுமது.

பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திகழொளிவு பாவுபார் மிசைபுகலொணாதத்வ
தீக்ஷைபுணர் ஜீவரத்னன்

திருஞானசம்பந்தரடியாருண் ணேத்திரன்
செபத்தின்மணியாம் நற்குணன்
ஆகமதரிவாய்ந்துகுரு கண்ணுடையவள்ளலை
அனுதினமுநோக்கினைந்து
அஷ்டாக்ஷரத்து விதவகற நிலைப்பாத்திரன்
அமைபிரங்குசைலச்சேத்ரன்
தக்னரெங்கைபசாத திரதபசு[illegible]
சாங்குசித்தன னெனும்திரன்
சரசாதனச் சிவயலிங்கநற்றேத்திரன்
சற்வகலை நிறைவிசித்தன்
புகழினிய பூரணாநந்தோதயப் புதுநூல்
புகன்றன னெவர்க்குமெளிதிற்
பொக்கசஞ்சிதவினை வாய்க்கசம்பந்தருள்
பூரணப்பொருள் நிறையவே.

ம-ா-ா-ஸ்ரீ, இராமசுவாமி புத்திரர்

கரிகிருஷ்ண பிள்ளையவர்கள்

இயற்றிய

ஆசிரிய விருத்தம்.

முக்குணமொன்றாய்முடிய முப்பாழப்பால்
முளைத்தசெழுஞ்சுடராய நண் மோனஞான
விக்குணமே சமபந்த ரெனவிரஞ்சி
யெழுந்தவள்ளல் தண்ணருட்கண்டெங்குந்தோற்ற
கைக்கனியாம் பூரணாநந்தோதயை
கவிநன்னூற் பாற்றிரட்டைக் கையளித்து
மிக்கடைமாமவுன மீதேசெல்லும்
மெய்தான்ம சிவயலிங்க மெனுமாலனன்றே.

இஃது:

சென்னைபெரியமெட்டு வல்லீபுரம்

எ. நாராயணசாமி தாசர்

இயற்றிய

நிலமண்டில ஆசிரியப்பா.

சிறப்புப்பாயிரம்.

சீர்கிளர் புவனத்தெங்கினும் நிகரிலாப்
பேர்வளர்சென்னைப் பெருநகரடுத்த
தெங்குநற்கதலி திம்பலாப்பொழிலு
மங்குல்வந்துலவு மாமலர்தடமும்
விணாகமழ்கமல வாவியும்வியன்சேர்
திரைபெறிதுறையுந் தெண்ணீற்றோடையும்
நாற்கவிபுலவர் நற்றவமுனிவர்
போற்றிப்புகழும் புண்ணியர்வீதியும்
உமாபதிமாயவ னுவந்திடுபள்ளியு
மிமாசைலம்போலுறு மெண்ணிலாக்குன்றும்
விதமிதமாக விளங்கிடுசிகரியுஞ்
சததளவனசமார் சண்பகவனமும்
பைம்புனலோடும் பசியநற்பண்ணையு
மின்பாநந்தத் திருந்தவமுனிவர்
தங்குபொன்மடமும் நிறைந்திடுதண்ணகர்
புங்கவர்மதித்துவாழ் பிரங்கிமாசைலமேன்
றுறைத்திடும்பதியான் உஜித்குணாளன்
வரைத்தடமார்பனெழ் வள்ளல்குணையன்
உருவிலானெவைக்கு முன்னதவஜீறன்
கருங்குழன்மாதர் காதலிவன்றேன்
வாய்மையும்பொறையுங் குன்றுன்வளஞ்சேர்
தூய்மையிற்றூய்மையாய் தோன்றியசுகுணன்
பரமசற்குருவை பலகாற்றொழுவோ

னாரமிருந்தத்துவ முணர்ந்திடுந்தகையா
ளித்தகைவாய்ந்த விரங்கையனென்போ
னற்றவம்புரிந்து நானிலமீதிற்
காலையுமாலையும் வேலையாய்கடவுள்
ஆலயமுளத்தே அன்புடன்றொழுதே
பூசைகள்புரிந்தபல் புண்ணியஞ்செய்து
ஆசையாய்பெற்ற அருந்தவச்செம்மல்
வெற்றிசொற்கிழத்தி விரும்பிடுபுலவர்
கற்றவர்மதிக்கும் கல்வியிற்கடலன்
சத்தியதத்துவ சாகரங்கடந்தோன்
நித்தியவைபவ நிமலனையறிந்தோன்
யௌனகாலத்தி னைம்புலனொடுக்கி
மௌனநிலமையில் மாட்சிமையானோன்
சாதுசங்கத்தொடு சந்ததம்பயின்றெப்
போதுவேதாந்தப் புத்தமுதத்தை
அருந்திடுமாதவன் அத்துவநிலையை
வருந்தியேயாய்ந்தா நந்தமேமருவினோன்
வாதவூரிருடிகள் வன்றொண்டரப்பர்மெய்ப்
போதகமெல்லாம் புகரறநீந்தோன்
ஒழியாப்பிறவி யொழித்திடுநெறிதரு
மழியாப்பொருடனை யகந்தனிற்காட்டும்
புண்ணியர்கண்ணுடைய வள்ளல்புகன்ற
யெண்ணரும்வேத வேதாந்தவிளக்காம்
பழியினில்வரும்வினை பற்றறத்துலைக்கும்
ஒழிவிலொடுக்க நூலோர்ந்தசற்புனிதன்
பூரணவறிவைப் புறம்விடாமற்பறி
பூரணனடியே புகலிடங்கொண்டோன்
பாங்குறுபிரமப் பக்குவர்தன்னில்
சாங்குசித்தனெனுஞ் சிவலிங்கமால்
பாழ்ம்பிறப்பொழிந்து பரமவீடடைய
தாழ்விலாதோர்நூற் றுத்திரியதனில்

முத்தர்கள்பாடிய மூன்னூலகாமே
இத்தலந்தன்னி லிருபிறப்பாளர்
முத்தமிழ்கவிஞர் முடிவணங்கிடவே
சொற்பரப்பிரம சொரூபனைக்காட்டும்
பூரணானந்தோ தயமாம்நூலே
காரணக்கடவுள் கவினுறுதாளே
பன்னுறுமின்னார்ச் சிரினைப்பகர
பொன்னிலமடவார் புன்னசைநீத்தோர்
சொன்னயங்கண்டு சொல்லுவவொன்றே
நன்னயநற்றமிழ் நாவலர்வேதியர்
மற்றவர்தம்மால் மாளாதென்றரன்
சத்தியஞ்செய்தோறணால்கறத்தோடு
வடவணாக்குவட்டின் மறைந்தனரொன்றும்
புடவியிலெம்மாற் புகலொணாதம்மா.

தஞ்சை,

வெங்கடாசல பண்டிதரவர்கள்

குமாரரும்

வைரக்கண் வேலாயுதப்புலவரவர்களுக்கு

இளவலும் ஆகிய

அருட்கவி பாலகுமாரசாமி பிள்ளை அவர்கள்

இயற்றியது.

நிலமண்டில ஆசிரியப்பா.

பொன்னவிர்சலசப் பொருட்டாதனத்திருந்
இருந்திலமாதி யெவ்வுலகும்படைத்
திலகயன்முராரி யிந்திரன்செவ்வேள்
தலைகயானனபா சாங்குசன்விண்ணோர்
எண்ணருமுனிவ ரியாவருமறியாப்
பண்ணவன்கைலைப் பருப்பதமூர்த்தி

இடைப்பாகத்தம ரிறைவிமெய்ஞ்ஞானக்
கொடைப்பாலளிக்கக் குடித்துவளர்ந்து
சிவபெருமானைச் செய்யுளாற்பாடி
நவம்பலவியற்று நலங்கிளர்பிள்ளை
சம்பந்தமூர்த்தியின் றண்ணருள்பெற்ற
விம்பந்திகமொழி வில்ஒடுக்கத்தை
அருளியகண்ணுடை யவள்ளலென்னுங்
குரவராலடிமை கொளப்படுமென்பன்
தேனார்சோலைச் சென்னைக்கடுத்து
தானைப்பிறங்கு சைலத்தூரன்
மாலரங்கைய வள்ளன்மாதவத்
தாலீங்குதித்த சால்புடைத்தக்கோன்
ஆங்கொருநாட்டம் ஆசான்பண்பாய்ச்
சாங்குசித்தனெனத் தருமபிதானன்
தனிசிவலிங்க நாயனாரெனவீங்
கினிதுடனிசைக்கு மியற்பெயராளன்
புழுக்கொடுகுளவிப் புறப்புபோற்றுறவுக்
கிழுக்குடையோர்மீ திரங்கிபட்டணத்தார்
பத்திரகிரியார் பகர்தக்கணத்தில்
சத்தியசொரூபித் தாயுமானவர்
முதலியமுநியோர் மொழிநூலனைத்தும்
நுதற்பொருளுய நுதலினனன்னூல்
ஆரணாநந்த வமுதைத துப்பும்
பூரணாநந்தோ தயபொற்றசும்பாம்
அன்னதுவிளங்க வவதாரிகையும்
மன்சிற்சில்லுழி வாய்ப்பக்கருத்தும்
சொல்லும்பொருளுந் தொடர்வுறத்தவளைப்
புல்லும்பாய்த்தாய்ப் புகுபார்வையிட்டனன்
தேங்கார்தஞ்சைத் திருஅழகப்ப
வேங்கடாசல வேளருண்மைந்தன்
தாஅல்சட்டாவ தானிவைரக்கண்
வேலாயுதப்பே வியன்றமிழ்ப்புலவன்

தெண்டமிழ்வல்லோர் திடுக்கத்துதவு
கொண்டருளிராம சாமிக்குரிசில்
அருந்தவப்புதல்வ னளிகுணமேரு
கரிகிருஷ்ட்டிணனுங் கவினுறுநாமன்
பலர்க்குமெளிதிற் பலன்றரும்பாற்றாய்
சிலைப்பிரசினிலச் சிட்டனன்மாதோ.

இந்நூலாசிரியரது பிரதமாணாக்கராகிய
மு. முனிசாமி அவர்களால்
இயற்றிய

நிலமண்டில ஆசிரியப்பா.

வேதாகமப்பொருள் விளங்கவேயுதித்து
சாதனக்குறியுடன் றண்ணருட்பொருந்தி
பூதபௌதிகப் பொருளைக்களைந்து
காதலாய்நின்ற கடையன்முன்ஞான
நாதனேவந்து நவின்றனன்மிக்க
வாதொருகுதும் வகையறியோன்சிறு
போதனுகடுங்கிப் புனிதனைப்பணிய
பாதமேல்சூட்டிப் பரப்பொருள்விளக்கி
சாதப்றசாதமே சதுர்மறைமுடிவில்
போதமதொழியப் பொருண்மொழியொன்றினைக்
காதினிலோதக் கனைந்தனுநந்தமாய்
யோதியமொழியே யுலகெலாம்பரவ
பேதித்தமாயையும் பிரமமேதானாய்
சோதித்தொம்மசியிற் றுலங்கினன்சுடரோ
ஆதியுமின்றி யந்தமுமின்றிய
ஜோதிபூரணமா யமைசிவலிங்கமால்
பூரணானக்கோதயமென்று நூலால்
கீரணிக்கடவுள் நிர்த்தமுமெளிதிற்

கண்டுதன்னின்பக் காக்ஷிபெற்றுய்ய
தெண்டமிழ்ச்செய்யுள் செப்புமவ்வருளை
நித்தியம்பிறியா நினவிநுள்சாங்கு
சித்தனை யென்றுஞ் சிந்தைசெய்வேனே.

இதுவுமது.

கலிவிருத்தம்.

வேதமுடிவில் விளங்கிய பொருளைச்
சாதனைசெய்ே[illegible] தமக்கருள்செய்ய
போதவொழிவாம் பூரணைதபம்
காதலாய்க் கொள்வோர்கருத்துள்ளோர்வரே.

இதுவும் அது.

சூரியனுதயமாகிச் செழுங்கதிர் வீசுமாப்போற்
பூரணவுதயமான புதைப்பொருடனைக் கண்டால்
* நீரியேவினையிரண்டு நிறைசமமாகிஞான
மேருவிலருளர்ந்தவீட்டினில் வாழ்வர்தாமே.

முற்றிற்று.

* நீரி என்பதற்கு நீக்கியெனப்பொருள் வருவித்துக்கொள்க.

அவையடக்கம்.

திருவருளுருயான்மறைந்த சின்மயத்துண்
தேவியருண்வாய்மலர்ந்த தீக்ஷைமார்க்கம்
அருளுருவாயஷ்டசித்தும் பெற்றசித்தர்
அம்பலத்தினின்றசிவன் அடியார்முத்தர்
கருவறிந்தோர்குருவினது கடாக்ஷம்பெற்றோர்
கணிதமின்றிநூற்றெளிந்தோர் கவிஞர்பக்தாள்
இருளறுப்போர்முதலெவரும் மிதனையேற்ப
ரென்றருளுண்மறைந்ததனை யிறைஞ்சிசிற்பாம்.

உ

சிவமயம்.

பூரணாநந்தோதயம்.

காப்பு.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வேதமுதலாகமங்கண் வித்தாய்நின்றும்
விளைவித்துப்பயனுக்கு மெங்கோனாதன்
சாதனமேசெய்வித்தோன் றாயேயானேன்
றந்தைகுருவருண்மயமுந் தானேயானோன்
பூதபேதங்களெலாந் தானேயாகி
பூரணமாயினைந்த ·செழும்புநிதமோன
நாதகரிமுகவனாறு முகத்தோனற்றா
ளுடினர்தந்தாண்மலரெந்நாளுங்காப்பாம். (க)

இந்நூலாசிரியர் இம் முதற்செய்யுளின்கண் - சர்வமுந்தானே யாயவொப்பற்ற பிரமமென்னுங் கணபதியை வழிபட்டு அப்பிர மத்தின துட்கூறுபாடாகுஞ் சுப்பிரமணியையுநமஸ்கரித்து அவ் வேகப்பிரமத்தின் றிருவருளை யுணர்ந்து அது மயமா விளங்குஞ் சீவன் முத்தர்களது பாதகமலங்களையே இந்நூற்குக் காப்புடை மையோராக்கி நமஸ்கரித்தன ரெனக்காண்க.

இனி நிரதிசயாநந்த சொரூபாநுபவாய்க்கியாகிய இந்நூ லாசிரியர் தாம் அநுபவிக்கும் பேற்றைத் தம்முறுநர்களும் பெ ற்றுய்தற் பாலதாய விருப்பினாற்றிருவருள் கூர்ந்தியற்று மிந்நூலி னது பெயரின்ன தெனக் குறிக்கின்றார்.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்,

குளகம்.

பத்துசிறுவயதினள விறந்தசாத்ரம்
　பார்த்துபதின்மூன்றளவிற் பதினெண்பேர்கள்
சித்ததிதபோதமெலாந் தேடியாய்ந்து
　தெளிந்துபதினாறளவின் மனுவிக்கியான
சுத்தமுதுப்பனுவல்பல விருபானுள்ளே
　தோய்ந்துதள்ளி தத்துவத்துட்ப்ரயோகப்ரம்மம்
உற்றவிடம்யாங்கெனவே தேடித்தேடி
　யுளமயர்ந்துதலைமேலுங்மத்தனாகி. (உ)

பித்தனைப்போலிருந்தன் ஐயோபேதாபேதப்
　பிரமிப்பை யோர்கணத்திற் பிரிக்குநாதன்
சித்தானதின்ஒழிவி லொடுக்கஞ்சொல்லுந்
　திருஞானசம்பந்தர் மரபில்வந்த
கத்தனேகண்ணுடைய வள்ளலேகின்
　கைகாட்டிகண்ணிமைபோற் காத்தாண்டு
நித்தியமுமிடைவிடா தூதுந்தும்பி
　நெறியைப்போ லென்றனையு நிதித்தியாக்கி. (௩)

சத்தியுடன்பரமசிவந் தானேயாகி
　சாதனத்தின்குறியுடனே தமியனேற்கு
முத்தானதீக்கையது ரகஸ்யார்த்தந்தான்
　மொழிந்தாரேமுப்பதுக்குண் முடிந்தபின்னர்
பத்தானபத்துவயதுள்ளா ளாத்தாள்
　பாற்கடலையுண்டன்றே பரமஞான
வித்தாம்பூரணாநந்தோ தயப்பேர்கொண்ட
　வேதாந்தநாலெளிதின் விதித்தேன்மன்னே. (௪)

மேற்கூறிய குளகச்செய்யுளையொட்டிய சுருதி, குரு, சுகம், அநுபவம், என்பவற்றைச் சற்று விரிவுறக் கத்தியரூபமாக யாவர்க்கும் பயன்படும் ப்ரலதாய்த் திருவாய் மலர்ந்தருள்கின்றார்.

அனுபவச்சுருக்கம்.

பூரணாநந்தஸ்வரூபமே, உதயமாகிய திருஞானசம்பந்த சுவாமிகளடியார்களிலொருவராய் ஒழிவிலொடுக்கமென்னு மெய்ஞ்ஞான நூலருளிய கண்ணுடையவள்ளல் என்னுந்திருவபிதானங்கொண்ட எனதுண்மை ஞானாசிரியரது மகிமையைச் சொல்லப் புகுவேனாகிற் பெருகும் என்கினும் எனதனுபவத்திற் சிறியவோர் நுட்பத்தைமாத்திரஞ் சொல்லவேண்டிய ஆவசியகமாதலாற் சொல்லுகின்றேன்.

ஒருவனை யமன் பதைப்புற உயிரைப்பிடிப்பது போலும் ஒருபெரும்பூதம் ஒருவனைப்பிடித் தாட்டுவதுபோலும் யான் எனதறிவின் கூர்மையால் அளவிறந்த நூல்களிற்பழகி என்போற் பேரறிஞருலகுளில்லை யென்றும் யாரையுமதித்தலின்றி திரியும் என்னை-எனது-௨௨-வயதிற் கவர்ந்துகொண்டு மனம்-புத்தி-சித்தம் அகங்காரம்-ஆகிய-நான்கனையும் பேரறிவென்னுங் காலதண்டத்தினாற் றண்டித்தடக்கல் எனப்பலநூல்களிற் சொல்லியபடியே என்னை அக்கினியாற்றின் மேலாகிய மயிர்ப்பாலத்தின்மீது ஒரு காலில் நிற்கவைத்து அனேகசனனங்கடோறும் பின்றொடர்ந்தலப்பும் ஆகாமிய முளையை மெய்ஞ்ஞானாக்கினியா லெரிக்கிறபோதெனதாசிரியரை நோக்கிச்சிந்தித் துட்கலங்கி முறையிட்டலறி ஐயனே சப்த இரௌரவாதி நரகங்களினுங் குடிபுகுவேன் இவ்வணுவின்மீது நிற்கத்தரனல்லேனென ஆசிரியர் தமவிழிநோக்காகிய உண்மை ஞானாக்கினியாலெரிக்கப்பட்டு மாண்டனவாந்தத்போதமும் வீண்போகா தென்னைத்திருவருண்மயமாக்கி உன்மத்தனாத்திரிவித்து ஆமை தன்முட்டையைக் கவனித்தல்போலும் மச்சந் தன் சினையைக்கமனிப்பபோலும் குளவிபுழுவைக் கூட்டுள்ளுணர்வுபோலும் இடைவிடாதென்பா லிமையா நாட்டமாகி எனது பருவப்பக்குவகாலம் பார்த்திருந்து ௨௰-வயசுவரையில் அன்னபானாதிகுளிர் நித்திரை முதலாயவைகள் தோன்றாது கடாக்கன்றைப்போல மருட்பட்டு திக்பிரம்மை கொண்டிருந்த வென்னை அதிட்டித்து எழுப்பி ஓர்நாள் அர்த்தராத்திரியில் மகனே ? என விளித்து சாயாபுருஷனாகின்று சும்மா இரு என்ற ஒப்பற்றமோர்

மொழியைச்சொல்லி அந்நெறியில் * நிராசனம்-என்கின்ற புத்தாசனத்திற் கட்டியிருப்பித்து எனக்கமைந்துள்ள அருமொழியென்னும் ஒருமொழியின் ரகஸியார்த்தத்தை யுபதேசித்துத் திருவிழியைத் திறந்தனர். நங்குப் பாட்டிசைப்போரும் கொம்மிப்பாட்டிசைப்போரும் தாம்பாடும் தருக்கள் கண்ணிகள் - சிந்துக்களுக்குமுன் இயற்கையிலேயே சிறுவர் முதற்கொண்டு குழிப்பு ஆக்கிக்கொண்டிசைத்து உலகுவழக்காய் வழக்கிக்கொள்ளும் நானனே-என்னுஞ்சொல்-மூத்[illegible] மகான்களது உண்மைஞானார்த்தத்தில் சிற்றறிஞர்க்குப்பயன் பெறுவாறுபோலும் திரிகாலாகாரமாகிய ஈரேழுலகையும் ஆகாயவிரிவையும் கண்ணுட்கருமணியாய் பார்ப்பினி தன்னுட்சுருக்கிக்கவர்ந்து கொண்டதுபோலுங் கண்டகாக்ஷியாகிய தடையற்ற வமுதாநந்தப்பேற்றை மனவாக்குகாயமென்னுந் த்ரிகரணங்களால் அதிட்டியாதிருந்தபடியிருப்பதே மௌனம். அதனை அதிட்டித்தவர்கள் அகத்தியராதியோர். ஆயினும் யாவையுங் கௌளீகரித்துக்கொண்ட அம்முழுமௌனம தானே தானே தானே தானே யெனவும் நானே நானே நானே நானே யெனவும் நினைக்கப்படாஅ- அனுதி அத்வைதவேதாந்த சித்தாந்த முடிவாதலால் சும்மாவிருந்ததாம் அங்ஙனம் எனதாசிரியராகிய கண்ணுடையவள்ளலார் திருவடிக்கண் ஐக்கியமாக்கி பிராரத்துவத்தாலாகிய இத்தேகத்திருந்தும் எம்மோடிருப்பாயென் றாசீர்வதித்து கற்பூரதீபம்போலு மெனதாத்மதீபத் தோடைக்கியமாகினர். திருவருட்பெருக்குற்ற அவரது உத்திரவுபடி சாதனத்துக்குரிய பக்குவர்களும் அடுத்தோரும் பார்டலியைவிட் டசுத்தத்தைப்பற்றிய நெய்யரிபோலாது பாலையுஞ் சலத்தையும் பிரித்துண்ணும் விகங்கம்போல கல்விக்கடலின் கண்கவிழ்ந்த மெய்ஞ்ஞானப்பாலைப் பிரித்துண்ணுந் தேவாம்சம் போல்பவராகி பூரணாநந்தோதய மென்னுஞ் சாகரத்தளாவிய பயனாகிய சுகத்தை தன்னையாரொன்று ஊர்த்துவமுகமா யெளிதிற்றரிசித்து விதேகபதமுத்தியைப் பெறும்பொருட்டு திருவருளால் திருவாய்மலர்ந்தருளினேன் எனக்கண்டுகொள்க.

---

* நிராசனம் - கோமுகாசனமாதி தசாசனங்களுளொன்றாகாது குருதிருவருளுக்காவிருப்பித்த நாதனாசனமாம்-இதனையனுபவித்தோராலன்றிபுலப்படும்பாலதன்று.

இது

சுத்தசைதன்னிய நிரதிசயாநந்த பிரணவஸ்வரூபத்தை இந்நூன்முகத்துக்காப்புடைக் கடவுளாக்கி வழிப்படுதலாலாய பயன் கூறுகின்றது.

வெண்பா.

திருமாலறுஞ்சுடராத் தெள்ளற்கருளே
அருமாவுத்தீட்சையாலண்டி-பெருமாலா
வெம்பியெழு[illegible]ன்கள் வேரற்றுப்போகுமே
தும்பிக்கையானைத் தொழ.

(இதனது விரிபொழிப்புரை.) ஆறுதாரங்களுங் கூடுமோர் மூலமூலாதாரமாய் உள்ளும் புறமும் அவற்றுள் அந்தர்யாய் ஸ்பரிசமறியுங்கையும் கந்தமறியு நாசியுமொன்றான தும்பிக்கைபோலும்; தன்பேரை நாவென்று சொல்லுவதன்றி வேறொன்றுமின்றி நாவேயானதுபோலும் அபின்னத்துவைதக்குண்டலியாகியும், பிரகிருதியாகியும் பிரணவசுழி ஓமேருவாகியும் அசிபதஞானசூரியனாகியும் ஐந்து பூதியங்களையுந் தன்சன்னதானமாய் ஐந்துருப் படக்கியைப் போல் பஞ்சாக்ஷரங்களைத் தனக்கைந்து கரமேயாய் விளங்கும் விநாயகக்கடவுளை (மனோவாக்குக்காயம், என்னுந் திரிகரணங்களுநிர்மலக்கருவியா யிவைந்திலயப்பட்டிருந்தபடியே யிருந்து) வணங்க. (அஞ்ஞகற்பிதமாகிய காரணஸ்வரூபமே சப்தமேகங்களையெர்த்து ஒருருவாகித் தடித்த அகமாணவமலமாகிய மூலப்பிரகிருதி மனமாயா விஷ்ணுரூபமாம் பெருமிருண்டசொரூபத்தைக்கிழித்தெழு மெஞ்ஞான சூரியனை இன்னதெனப்புலப் படும்படிக்கு, (ஏதுவாகிய) திருவருளை, வேறோரிடத்துள்ள தாய்த்தேடும் போதமிறந்து அத்திருவருண்மயமாய்ப் பெரியநிழற்கண் சிறுநிழற் புறம்புகாணாதடங்குமாப்போலும், கடலின்கண் நீர்முகந்த கலசமான ததினுள்ளேதானே யடங்குமாப்போலும், விண்ணைமூடக் காரணந்தேடி அதனை நடுங்கண்ணை மூடல்போலும், அருளைத்தேடும் போதமிறந் தரைக்கணமாயினும் அருண்மயமாய்ச் சதாகர்லமுந் தன் இறப்பே பெருநோன்பா நிற்க திரு

வருட்காருண்ணியத்தால் தன்தேட்டமே திரண்டு அருண்மயரூபமாகிய ஞானாசிரியர், அதோமுகமாய்த்தோன்றி அவரது திருவருளால் அஷ்டாக்ஷர, துவிதாக்ஷர, திட்சையினால் அண்டி இவனை அருட்போதனுவுயிர்ப்பித்து அத்தீக்கை வழியேயருளைத்தரிசித்தும் தீக்ஷைமயமாய்ச் சத்திசிவமயத்தினின்றும், அருளேதிருமேனியாகி யிரண்டற்றுநின்றுந் தனது பூரணஞானசொரூபத்தைத் தெளியவேண்டி அருளறிவிப்பதாகியும் அறிவானுமாகி இருளினுமொளியினுமின்னும் பூனைக்கண் போலவும், காண்பானுங் காக்ஷியுமாகி சத்திசிவதீக்ஷை வழியேசென்று தொம்பதகாக்ஷியில் அறுபத்து நான்குவீட்டினுந் தன்னைபாரென்று நியதிகளைந்து தன்னையுள்ளபடி யறிந்து தானும்போ யெதிர்வும்போய் அனுபூதியாகிய தத்பதத்திலுதயமாகித்தானே பிரமமென்றும், தன்னையறிந்த மோனந்தானும்போய் அசிபதகாக்ஷியாகிய நிதித்தியாசன பாமே மோனாதீதமாய்த் தனக்குத்தன்னின்பே சரியாய் ஞானபானுவாகியெழுந்த அவ்வழியே சென்று அறிவானாகியும், அவ்வழிச் சென்று தன்னையறியாத துவிதபோதான்மாக்களைப் பின்னும் பூரணமே தனதழகிய திருக்கூத்தாகிக் கலந்து, அதிட்டான அந்திர்ய பிரமமாயையே பதிபசுபாசவிரிவாகி பிரதிபலித்து தனது நிஜஸ்வரூபத்தை வெளியாக்காது மறைக்கும். அப்படிமறைக்கவே, கட்டையிற் கள்ளனைப்போல், அநாதிகற்பிதமாயைய அஞ்ஞானமாகி, அநிர்வசன காரணஸ்வரூபமாய் சூக்ஷ்மபூதமே ஸ்தூலப்ரபஞ்சமாய் இடைவிடாது பம்பரம்போலிறப் பிறப்பில் வாதிப்பேயாகும். இவை எறும்புகடை யானைமுதலாய் மானிடர் முதற் சத்தி சிவபரியந்தம் வினைப்பகுதியாகிய இப்பிறவித்துன்பம ஒருங்கேநீங்கி சுகாதீதமுத்தியாகிய நித்திய நிஜஸ்வரூபத்தைப்பெறும் என்பதாம்.

அவதாரிகை.

சுத்தசைதன்னிய சாக்ஷாத்ப்ரணவஸ்வரூபமாகிய கணபதியைப்பணியவே பழவினைகள்யாவும் ஒருங்கொழிந்து ஒப்பற்ற மோக்ஷமடைவர் என்பதாம்.

இனி இதனால் தம்புடை சூழ்நராகிய பக்குவர்பாலிரங்கி, கற்றோர்களது ஓர்வும் தம் இருப்பும தன் ஞானாசிரியரா வெழுந்தருளிய பிரமத்தின் றிருக்கூத்தையும் பாரீர் என வற்புறுத்திக்கூறுதலையறிக.

கட்டளைக்கலித்துறை.

சீராமணிப்பிள்ளையாரடியாரடி சீரிருந்தே
ஆராறுந்தாண்டியசைவற்றுநின்ற வருண்மயத்தை
ஓராரொழிவிலொடுக்கத்து ளோர்ந்தறிநுண மறைந்தேன்
வாரார்திருநடம்பாரீர் நூலின்கண்வள்ளலையே.

இதனது பொருள்:- சீராம்-நன்மைப்பயப்பதாகிய சரியைகிரியை யோகம் என்னும் முப்பாதங்களுள்ளும் ஆகாயபூதம்போல் விரவிய மெஞ்ஞானம் நிர்ச்சலனமாத்தனித்து விளங்குஞ் சுஞ்ஞானப் பேற்றையுங் கடந்துபோய் ஒன்றாகின்ற அரியபெரும்பாழை யொழிவறவுணர்ந்துணர்ந்து அப்பாழையுங்கடந்து பலகோடியுகங்களை அணுத்துணைநேரமாக் கடக்குதலையுங்கைநழுகவிட்டு இன்பதுன்பங்களை வேரறச்சுட்டொழித்து இருந்தபடியிருத்தலாகிய வீடடைதலே சீராம் அணி, அச்சீராகிய வெசப்பற்ற திவ்வியாபரணத்தை அணிகலனாக அணிந்த, பிள்ளையார்; (சிவசுப்ரமண்யக்கடவுளாம் அவராயும் மூன்றுபிராய குழவிப்பருவத்திற் பராபரைத்தாய் ரிஷபவாகனரோடெழுந்தருளிதரிசனந்தந்து ஒருவள்ளத்திற் றிவ்வியாமுதமளிக்கவுண்டருளினவராயும் அப்பிராதிசைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவராயும் விளங்கிய) திருஞானசம்பந்த சுவாமிகளின், அடியார் (திருவடியர்களிலொருவரும் ஒழிவிலொடுக்கம் என்னும் பிரதானத்தையுடைய வுண்மை ஞானநூலைத்திருவாய் மலர்ந்தருளினவரும் எனது பூரணஞானாசிரியருமாகிய) கண்ணுடைய வள்ளலின், அடி (சிஷியவர்க்கத்தைச் சீர்திருத்தி பிறவிப்பெருங் கடலினின்றுந் தடுத்தாட்கொள்ளுதற்குக் காரணமாகும் அவரது திருவருள் விழிநோக்காகிய) பிரமாணவளவுகோலின், சீர்-ஒழுங்கினிடத்தில், இருந்து-(மாயையினது உசுவாசநிசுவாசசலனிப்பால் பிறழ்தலின்றிக் குடியாய்) இருந்து, ஆர் - (ஒன்றுக்கொன்று கோணத்திலுங் குணத்திலுங் காக்ஷியினும் இடவமைதியினும் வித்தியாசம்) நிறைந்த, ஆறும் மூலாதாரம் சுவாதிட்டானம்மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆஞ்ஞையென்கின்ற) ஆறுமண்டலத்தையும், தாண்டி-(ஆற்றெழுக்காயும சிம்-

மனோக்காயும் தவளைப்பாய்த்தாயுமூசாவி) கடந்து, அசைவற்று (கட்டப்படாததாய் வெட்டப்படாததாய் கொட்டப்படாததாய் ஒட்டப்படாததாய் தட்டப்படாததாய் மட்டுப்படாததாய் நனைக்கப்படாததாய் புனைக்கப்படாததாய் எப்பூதங்கட்கு முட்பூதமாகிய விட்பூதம்போல) நிர்ச்சலனமாகி, நின்ற (நிலைபெற்று) நிற்கின்ற, அருண்மயத்தை, திருவருணிறைவை, ஓரார்(சாதனசதுட்டயஅதிதீவரபக்குவர்களன்றி மற்றையோர்கள்) உணரார்கள். ஒழிவிலொடுக்கத்துள்(அத்திருவருணிறைவை யான்எனதாத்மஞானசிரியராகியகண்ணுடையவள்ளலாரருளிய) ஒழிவிலொடுக்கத்தினால் ஓர்ந்து உணர்ந்து - அதினுள், அத்திருவரு ணிறைவினுள்ளேயே, மறைந்தேன்-இறவாதிறந்தொழிந்தேன், வாரார்-(யானும் எனதாசிரியரும் ஏகமயத்தன்றி இனிபிரதிபிம்பமாகி) தரிசனந்தாரார். ஆதலால், திருநடம் (அவர்நிர்ச்சலனமாக) ஆடாதாடுமாட்டத்தழகையும், வள்ளலை (எனது) வள்ளலையும், இந்நூலின்கண் இப்பூரணாநந்தோதயம் என்னுநூலிடத்து, பாரீர்-பார்த்தடையக்கடவீர் என்றுங்கூறுதலைஅறிக.

இதனால் திருவருட்டாயைச் சேவிக்கின்று[illegible]னவறிக.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சகச்சோதியாஞ் சத்துச் சித்தாநந்தி
சர்வமுந்தா னாகியெழுஞ் சரதோங்காரி
திகம்பரி யிகம்பரவிற் பனிரீங்காரி
சிவயநம வுருக்கொண்ட தேவதேவி
அகம்பிரம மாகுமரு பானந்தாயி
யண்டசரா சரமனைத்து மானரூபி
சுகமெனுமோர் மொழிமொழிந்தே சடாக்காரத்தைத்
தூங்குவிக்குந் திருவருட்டாய்த் தூந்தாட்சேர்வாம். (௫

இதனால் பிரமசொரூபப் பேராசிரியன் சரணசரோருகந் தலைக்கணிகின்றார்.

விருத்தம்.

மாயாதிமாயையதாம் விந்தைசெய்யும்
மகிபனெங்கோன் சம்பந்தன் மரபின்மோன

சாயையுருக் கண்ணுடைய வள்ளலேகத்
சாதனத்தோ டொத்துறவென் றனைவிழுங்க
ஞாயமென்னே யென்றலறிக் கூயிக் கூயி
நானிறந்தேன் றனைக்கு ஞான சூர்யக்
காயமொடுவிமையாத சாக்ஷிதந்துக்
சழலிணையை யெப்போழ்துங் கருத்துள்வைப்பாம். (அ)

இந்நூற்றுவக்க முதலிறுதிவரையி னுமமைந்துள்ளனவாய செய்யுட்கள் இனமுஞ்சந்தமு முறையின் வைப்பாகிருவாது, இந்நூலாசிரியர் தம் நிஜசுகாநுபவகாலங்களிற் றிருவருளாற் றமக்கு நிகழும் விஷையவாசனை நிகழ்ச்சிகளில் அவ்வப்போது திருவாய்மலர்ந்தருளிய அங்கிளையே ஒருங்கடுக்கி யுருப்படுத்தி யிருக்கிற இதனை வாசித்துணருமறிஞர்க்கன்றி மற்றையோர்க்கு மூன்றும்பிறையைச் சுட்டிய வழிகுறிச்சினையையே அப்பிறையென மதிப்பவனாத் தன்வயப்படுத்திக் கொள்ளுகிற களிப்பையொத்த மனக்கிளர்ச்சியை யுற்றவர்களாவர்.

இதனால் தங்குருவாந் தலைவனைப்பணிகின்றார்.

ஆசிரியவிருத்தம்.

கருணைநிறைமுகிலனை மிகக்கருதுமறிவறிஞர்
கடாக்ஷனைப் புஷ்பாகிதக்
கதம்பனைநிரம்புமமு தின்பனைப்பழைவினை
களைந்தவனை பரிபாகநாட்
குருவாயமர்ந்தவனை குணமாவெழுந்தவனை
குறியற்ற முழுமோனனைக்
குடியாயிருந்துளங் குலவுகற்பூரனைக்
கூர்ந்தருட் டருபுநிதனை
பருவநல்லறிவையறி குருவையருளறிவினிற்
பார்த்திமையா நடனனைப்
பகரவரிதெனமறைக ளறையபறையுலகெலாம்
பரவுஞானச் சொருபனை

கருவையணுவறிவையரு ளறிவையுயிர்நாதனைக்
கங்குல்பக லறநின்றனைக்
கண்ணுடையவள்ளலைத் திரிகரணசுத்தியாய்க்
கருதியஞ்சலி செய்குவாம் (௧)

உ

சரியைகிரியையிற் றுணுஞானத்தி

னுரிமைசேரொல்லையி லுணர்த்[illegible]ணரிஃதே.

தம்மெஞ்ஞானசிரியர்பேரில்

பஞ்சாதசமணிமாலை

ஆசிரியவிருத்தம்.

மனமுருகசுனைபெருக வினைகுறுக துணைமருவ
மண்ணும்விண் ணொன்றாகியே
மகிமையுறசுகவுலகை திகழ்வுபெறபகைமையற
மகிழ்வுதரு பரகுருவருள்
நினைவினொடுமறதிகெட குணமிறுகவுணருமுணர்
நீக்கமற் றொளியையுமிழ
நிராமயமகாகிவெளி நின்றபொருளாகியிறை
நேயமீ தூரியேக
புனைநெடுகவெனைதழுவி யுணவமுதமுதவுசிவ
முக்யவாநந் தோதய
முகிவுவணுவுருவில்வா புவியேழொருங்கூர்ந்து
முரசமறை யோலமிடநீள்
கனககிரிசிகரமுதி தொனியோய்வினிர்க்குணங்
கலவுவது மென்றுபுகலாய்
கருணைவழிபரவைதிக ரறிவிலறிவாய்புளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே (௧௦)

புண்ணியமெனுநாமமில் லாதவஞ்சன்றூட்ட
போதவிருண் மூடுவஞ்சன்
புரட்டுவஞ்சன்வினை திரட்டுவஞ்சன்பூர்ண
புத்தியமை யாதவஞ்சன்
வண்மையுளநூற்படி நடக்காதவஞ்சன்வீண்
வாதாடி மகிழும்வஞ்சன்
மாறும்வஞ்சன்பவம் மீறும்வஞ்சன்விதி
வழியையறி யாதவஞ்சன்
நுண்ணிதாமாத்மவறி வற்றவஞ்சன்பொறி
நுழைந்துழலு கின்றவஞ்சன்
நுவல்கலைகடலினு ளொடித்தாடுவஞ்சனா
னுட்பமுணராதவஞ்சன்
கண்ணிருந்தும்மனக் கண்கெட்டவஞ்சன்யான்
கடைவஞ்சன் நலமடைவனோ
கருணைவழிபரவைமிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (கக)

பாடவறியாவெனைத் தமிழ்கற்றுணர்ந்தபா
வாணர்முன் னேன்படைத்தாய்
பத்மாசனத்தினி லிருந்துனைதொழாதவெனை
பக்தர்முன் னேன்படைத்தாய்
நாடிநின்றிருவருளை யடைகிலாக்கொடியனெனை
நாணுக வேன்படைத்தாய்
நத்திநடனங்காணு முத்தமர்கண்முன்னிந்த
நாயேனை யேன்படைத்தாய்
கூடாதநெற்றிவிழி சூடாதவெனைநின்
குழாங்குலவ வேன்படைத்தாய்
குருவினருளினியெனினும் வருதல்மெய்யெனின்மனக்
குரங்கொடுற வேன்படைத்தாய்
காடேகவேவளர்க் கின்றவுடலேனைநிற்
காணாக்க மனமிசைவையோ

கருணைவழிபரவைமிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (௧௨)

பஞ்சையெனினுங்கொடிய வஞ்சனெனினுஞ்சன்ம
பாவியெனினுங் கருணைகூர்
பாரமெனினும்பார்க்க தூரமெனினுஞ்சேர்க்க
பையகடை விழிகிருபைசெய்
தஞ்சமென்றண்டுமெனை யஞ்சலென்றொருமொழி
தரச்சித்தமாத் தயவுநேர்
தர்க்கனெனினுங்கொடிய துக்கியெனினும்விஷச்
சர்ப்பனெனினும் அன்புநீள்
கொஞ்சனெனினுங்கபட வஞ்சனெனினுஞ்சொற்
குறும்பனெனினும் அடிமைகொள்
குருடனெனினுங்கொலைத் திருடனெனினும்புறக்
கோளனெனினுங் கலவுவாய்
கஞ்சன்வரைபழைவிதியை நீக்கிபுதுவிதிருட்டி
கடையனைகடாக்ஷி யாயோ
கருணைவழிபரவைமிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (௧௩)

வாயாதுவாய்க்குமோ பொய்ப்போகவாரிதியில்
வாஞ்சைமன மேவாகியே
வாழுமென்வாழ்க்கையுங் கறபந்தழைக்குமோ
வகையறிய வென்றாமல
காயாத்தருக்களாய்க் கற்களாய்ப்புற்களாய்க்
காண்பெலா மெனின்மேலதாங்
கயவன்யானருளிலாப் பதடன்யானென்கினுங்
கருணைசெய்த னின்கடனலோ
ஓயாதகவலைதீர்ந் துள்ளத்தினிற்பூர்ண
வோகைமேலிட் டோங்குதற்
குனதருட்டிருவிழி மலர்ந்தென்னைநோக்கவீங்
கோர்காலம் வாய்ப்பதுளதோ

காயமோடியினைவீண் சாலத்துளாக்கிவெறி
கடைநாயில் கடையாவனே
கருணைவழிபரவைநிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (கச)

கோடாநுகோடியடி யார்நகைக்குங்கடைக்
கொடியனரு ளடைவதிலையோ
குரல்கம்மநின்றனைக் கூவியுங்கேட்கிலாய்
கூடுதற் கிடனில்லையோ
ஆடாதுமாடிமுத லாகாதவண்ணமோ
ரணுவினுக்குங் கேவலத்
தலைவனெலனையாடை குலைவனெனிலையுந்
றரும்பாவியாய்த் திரிவனே
நாடாதுநாடுமென் னுள்கள்பாழ்போனபின்
நமனுக்கு ளாருமாறு
நடியுடற்புழுதிமண் பொடியாய்ப்பறக்குமுன்
நன்குநீகருதி யென்னை
காடானவைம்புலக்காட் டினிலிருந்துனார்
கனைசோ திருவருள்புரீஇ
கருணைவழிபரவைநிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (கரு)

எக்காலமோபஞ்ச பூதங்களோய்ந்திறுவ
தெந்தநாள் சரணமொழிவ
தெச்சமயமோபொறி புலன்களோய்வினையடைவ
தெப்போழ்து கன்மமறுவ
தெக்காலமோமாயை நீக்குறுவதையனே
யெச்சணம் போதமகல்வ
தெவ்வேளையோசுத்த துக்கங்களோய்ந்திடுவ
தெத்தினம் அறிவையறிவ
தெக்காலமோவேக வறிவாகிநின்றொளிர்வ
தெந்நொடியி லெங்கெங்கினும்

எச்சமறுநீயாய்ப் புலப்படுதலென்னைநா
னெனநாட்டிறந் தொழிவதூஉம்
கக்குநாய்க்கொக்கவறி வேறுமில்லேனுட்
கலங்குவதுனக்கோ ரழகோ
கருணைவழிபாவைங்க ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (௧௬)

சென்மம்வீண்சென்மமா காமனின்றுண்டடரடி
சேர்ந்துய்வ தெந்தகாலம்
செல்லிடமெலாந்திகம் பரியாய்த்திரிந்திடத்
தீக்ஷைகொள லெந்தகாலம்
கன்மவழிநாடுங் கருத்தினதுவேரைக்
களைந்தெறிவ தெந்தகாலம்
கண்மூக்குசெவிவாய்மெ யைந்தையுமடக்குநெறி
கண்டடைவ தெந்தகாலம்
புன்மைகுடிவாழ்வைநீர் மேற்குமிழியெனவுணர்வு
போதிப்ப தெந்தகாலம்
போதமதழிந்தருட் போதமதெழுந்தகம்
பூரிப்பதெந்தகாலம்
கன்மனீமுனக்குக் கணாந்தனைக்காக்குமக்
காலமெக்கால தவலாய்
கருணைவழி பரவைங்க ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே (௧௭)

கல்லாதகீதனரு வில்லாததீதன்முற்
காமமொழி யாததீதன்
கனவினினல்லறிவை நாடாததீதன்முழு
கவலைகுடி கொண்டதீதன்
பொல்லாதவஞ்சமனை வுல்லாசமாப்பிறர்ப்
பொருளைகவர் கின்றதீதன்
புகலருஞ்சம்சனை சோரதீதன்வினை
பூரயமானதீதன்

எல்லாவகந்தைக்கு மிசைகின்றதீதனன
தேக்கமில்லாததீதன்
என்போலுமொருதீத னெங்குமில்லையப்பனே
யென்செய்வே னென்றுபேர்க்குக்
கல்லானிழற்கணுளா தேசிகாவென்னைநீ
கைதூக்குதற் கருமையோ
கருணைவழி பரவைநிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (கஎ)

பொல்லாதகேடனிப் பூமியிற்புலனைப்
புறங்கூறுகின்ற கேடன்
பூதாதிபேதமே மாயைவடிவானவோர்
பொய்த்தேகமுள்ளகேடன்
நல்லார்மனைப்புக்கி நாயினுங்கேடாகி
நல்லுணர்வுகெட்டகேடன்
நவைகிளர்புழுக்கூட்டை நானென்றகேடன்மா
நஞ்சநிகரான கேடன்
வல்லாருரைத்தவே தாந்தநூலிற்பழகி
வகைதெரிவுறாதகேடன்
வாயாற்சொலற்கிட னிலாக்கேடனுட்கபடு
வாய்கேடநூல்கள்கற்றுங்
கல்லாதகேடனு னடைவனேனுனதுபொற்
கமலமணியிணையடிகளைக்
கருணைவழிபரவைநிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடையவள்ளல்குருவே. (கஅ)

வீண்கவிகள்பாடுமொரு வீணனைச்செய்வையோ
வேதாந்தியாச் செய்வையோ
விடையவாசனைபோகி யாச்செய்வையோநித்திய
விரதியாகச்செய்வையோ
பாணரசவாதியாச் செய்வையோதுர்க்கரும
பாவியாகச்செய்வையோ

பத்தருக்காளாகச் செய்வையோ திருவருட்
  பாக்கியவானாச் செய்வையோ
சாந்தமதிப்பவர்க்கவனே யாச்செய்வையோ வென்னைத்
  தன்னையறியச் செய்வையோ
சாத்திரக்குப்பையிற் றவிராமற்செய்வையோ
  தனதாடச்செய்வையோ
சான்றுதிமுத்தனாகவுஞ்செய்வையோ
  கலைக்கியானியாச்செய்வையோ
கருணைவடிவாகிய சுதிவிலதிவாய்முளைக்
  கண்ணுடையவள்ளல்குருவே. (௨௦)

போகுமோ குமிழியுடல் பொருளென்றிருக்கும்
  புரக்குமோ போதமுறுமோ
பொய்ப்போகமாறுமோ புத்தியடைதிரள்
  புரண்டோக்கமோ பொழியுமோ
ஆகுமோ நல்லறிவருள் வந்துவாய்க்குமோ
  அம்பரவிலாசமாகி
யண்டபிரண்டமுந்தூருக்கொள்ளுமோ
  அத்துவைதானந்தமாய்
போகுமோகாதியும் போருணர்ப்பாபகம
  புண்மையாய் வெந்தழியுமோ
போக்கற்றமலமாயை நீங்குமோ நீங்கிலென்
  போதநிதி பீடேறுமோ
காகபாலிந்தியின் வழுவுமெனைக்காது
  காத்தருள்வ தெந்தக்கணோ
கருணைவடிவாகிய சுதிவிலதிவாய்முளைக்
  கண்ணுடையவள்ளல் குருவே. (௨௧)

சொன்னவிராடமையென் றுள்ளமுழுதுந்தாக்கக்
  கொடுத்தபின் னென்னுவீரோ
கோடிமேனக்கொடுமை நாடுமக்கறிபுங்
  கொடியீர் அறிவீரோ

எள்ளளவுநேரமன நினைவற்றுநிற்பதற்
கெஃகினுலை போலெரிந்தும்
இருபுறக்கொள்ளியி லெறும்புபோல் வைப்பையோ
இன்னமென் னென்செய்வையோ
கொள்ளையமனுள்ளங் குலைந்தொழிய முன்னெனைக்
கூடிக்குலா வாமலக்
கொடியனுக்கென்றனைக் கூட்டிக்கொடுப்பையோ
குருமூர்த்தமாந் தெய்வமே
கள்ளமனதோ டென்ற னுள்ளுறவுகொண்டெனைக்
கைசோர விடுவையோசொல
கருணைவழிபரவைநிக ரறிவிலறிவாய்முளைந்
கண்ணுடைய வள்ளல்குருவே. (௨௨)

அழுதழுதுகன்றியிளாகின்றதின்னுமென்
னையனிற் சென்மீத ன்
அமைவதிலையோபருவ சமயம்வலையோகால
மாவதிலையோ கொடியன்யான்
ஒருமுகதிலையோமனஞ் சுத்தமிலையோ துறவு
தோயவதிலையோ புன்னறிவு
தொந்தமற்றொழிவதிலையோ துக்ககமிருப்
சுழலிலபடுகின்றநெஞ்சம்
பழுதடைவதில்லையோ பத்தில்பதினெங்கா
பாராமரிப திலையோ
பட்டபாடியாவுநீ செய்ததலவோகிருபை
பாக்கியபோக் கிஷமில்லையோ
கழுதைபெலினுங்குணம் பெருமியான்பெறன்மிகக்
கடினமாக் காண்படுதன்னே
கருணைவழி பரவைநிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (௨௩)

காட்டிக்கமாதியிற் கூட்டியெனையெளிதங்
காட்டாதனருள்புரியவுங்

கைவிட்டுநீங்கிமலக் கன்னியாம்பாசத்தில்
கட்டுறு தருள்புரியவும்
பூட்டிபம்பரமாயை யோட்டிகிர்பைகூட்டியருள்
போதத்தை யருள்புரியவும்
பொல்லாதகாலனுங் கள்ளமனமியாதுமுன்
பொருளாக வருள்புரியவும்
காட்டியைம்பொறிவேடர் வேட்டை நாய்ப்புலனெறி
நடித்திடினு மருள்புரியவும்
நன்றுதீதென்றுநா னென்றுதானென்றுநா
டாடிடினு மருள்புரியவும்
காட்டுமான்புலியூரர் கைப்பட்ட பான்மைக்
சடாக்ஷிப்பதென்று புகலாய்
கருணைவழிபாவைநிக ரறிவிலறிவாய்முளைக்
கண்ணுடைய வள்ளல்குருவே. (உசு)

பஞ்சரத்நமணிமாலை முற்றிற்று.

அவதாரிகை.

இந்நூல் ஆசிரியர் தனது நிஜ சுகாநுபவங்களில் தன்னை மறந்தருண் மேலீட்டால அருளிய செய்யுட்களை உற்று நோக்குவோர் கறைந்ததருள் மறைவதன்றி ஊழ்வலி தொடராதெனினும் மலரெறிந்தோற்கின்றி கல்லெறிந்தோற்கும் சொல்லாற் றொழுதோற்கின்றி, வில்லாலடித்தோற்கும் மாலாய்த் துதித்தோற்கின்றி காலாலுதைத்தோற்கும் மகிழ்வுறும் பிரமமாதலான் பித்தர்சொன்னதிற் பேதையர்சொன்னதிற் பத்தர் சொன்னதிற் குற்றம் பாரியார்? கற்றுவல்ல சான்றோர் என்பது என் சித்தாந்தம்.

இது-நூலாசிரியர்
தன்னையிகழ்ந்து தலைவனொடுசாவிக்கிளத்துகின்றார்.

வெண்பா.

அரும்பனுவுமாகா வரிவையர்களின்பாம்
வெறுமபொய்மை-மெய்யென்றிருந்தோம-சாந்தமுதப்
பேறேபேர்வீட்டின் பெருங்கடலும்பொங்கபொங்கி
வாராதோவின்பம் வழிந்து.

நன்னூற்கற்[illegible]க் தந்நூல கல்லார் சிலர் இந்நூலினு மிந்நூற போலிகளினுந்தகுஞ்செங்காவசைத்து இன்னாசசொற் புகலாரென்பதெம்முள்ளியப்பு - என்னை - இலக்கணப்பறை சூத்திரம் பலக்கணப்பூரணப்பாலார்சொனூற்கிங் கிலக்கணமியைப்பதன்றி கல்வுரு ருயர்ந்தோர்.

(இதன்விரிபொருள்) பூ[illegible]தமலரின் *அரும்பத்தனைக்கு மளவுபடாதுன்னிய பழைவினைவலியால் உண்மைஞானத்தை செம்பிற்களிம்புபோன்றும், ஓர்துளிவிஷங்கலந்த கலப்பாலென்கினும் தள்ளப்படுந் தன்மையை நிகர்த்தும் இமைப்போதின்பங்காட்டி யுகப்போது துன்பப் பிறவியினை விளைவித்து ஒருகடிகைப்போதும் நில்லாதொழிகின்ற மடமாதர்களி னின்பமாகிய கானற்சலமபோன்ற சிற்றின்பத்தை நிலைபட்டபேருக வெண்ணியநுபவித்து அநந்த பிறவியாய் மாறிமாறிப் பிறந்து சுழல்விசிறியை நிகர்த்து, கருப்பாசயப்பைகளிற் கட்டுப்பட்டும் யமபாசத்தாற் கட்டுண்டும் சேத்துமத்துட்சிக்கிய ஈப்போற்சுழன்றுங் காதற்ற வூசிக்கும் வழியின்றி நெடுங்காலம் பிறந்திறந்தேன் இவ்வொழியாத் துன்பம் நீக்குமாறில்லை இதனைநீக்கும் மௌனானந்த சற்குருநாதனெவ்விடமோ அவரைத்தேடுஞ் சாதனநெறிகள் யாதோவென்றுநெட்டுயிர்த்துளமவெதும்பி மயிர்க்குச்செறிந்து அவரது திருவடி பேரின்பசாகரமாகிய மெய்ஞ்ஞானப் பாற்கடல் எக்காலத்தேதான்றதும்புமோவென்று பாதாதிகேசமும் பற்றிக்கொண்டவனாகி பாம்பின்வாயத்தேரைபோலும் இருதலைக் கொள்ளியினிடையெறும்புபோலும் விசார தீபாக்கினியினால் வெதுப்பப்பட்டுப் பெ

குழூச்செறிந்து விதினையப்பொருமி விம்மி விம்மிக்கண்ணீருதிர்த்து எத்திசையும் ஏகமாய் நிறைந்துள்ள முத்திக்கடலே நீ என்னெதிரிற் றடுத்தாட்கொள்ளக் குருமூர்த்தமா வெழுந்தருளிவரமாட்டாயோ-எ-று.

கீர்த்தனம்.

இராகம் - சங்கராபரணம் ஆதிதாளம்.

பல்லவி.

போதும்போதும் ஐயா எடுத்த[illegible]டல்
போதும்போது மையா.

அநுபல்லவி.

நாதாந்தவீட்டினில் நான்சுகித்தில்லாமல்
நானிலமீதினில் நரவுருக்கொண்டது—(போதும்.)

சரணங்கள்.

எறும்புக்கடையுயி ரென்னுதபேதமாய்
கரும்பினுலையைப்போலே காணுஞ்சிற்றின்பத்தில்—போது. (க)

கண்டுமனமகிழ்வு கொண்டுஅநேகபோக
முண்டேன்நஞ்சென்றுஅதை கண்டுணராமலே—போது. (உ)

பெண்ணுணவியனந்த பேதாபேதவுருவில
புண்ணுய்ச்செனித்துகர்மப் புகையினின்மாறிமாறி—போ. (ங)

பார்க்குள்மாயாபாசத்தில் பாய்ந்தகப்பட்டேனதை
மாய்க்கவகைதோன்றமல் மாண்டுழன்றலைந்தது—போது. (ச)

தானேதனித்திருந்து தவமிருந்தாலும்மாயை
தேனும்பிறவிதனில் சேர்ப்பதறிந்திருந்தும்—போது. (ரு)

தோனுவனந்தஜென்மக் கூறெடுத்தாலன்றேமூல
ஞானதிவோமபிறவி யொழியுமென்றுணராமல்—போது. (சா)

எல்லாமறிந்ததுவே யெங்குமிருந்தது
எல்லாமறிந்தறியா திருந்தசுகத்திராமல்—போது. (எ)

கீர்த்தனம்-முற்றிற்று.

ஐயோவென.

கட்டளைக்கலித்துறை.

ஐயோவெனச்சிந்தை யாதாரமற்றுவழிவயர்ந்து
மெய்யென்றெடுத்தவிப் பொய்த்தேகமாயையிலேவருந்த
தெய்வத்திருத்தில்லையம்பலநாயன் றிருவருளை
கையுமெய்யாகக்கண் காணுமனின்றுகலங்கினனே.

ஆய்ந்த.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆய்ந்திடுந்தொன்னூற்கோடி யகிலம்பொய்யென்
றறிந்தவழியொன்றுளவா மதுமெய்யென்று
தேர்ந்தமுறையாகாமன மனதொன்றாகிக்
தியங்கிநிற்பதொழியும்வகை தெளியாவண்ணம
மாய்ந்தசென்மமோவனந்த மறையேசொல்லும
மாயுமுடன்மாய்ந்திடுமுன் றாயாவண்ணம்
பாய்ந்தபுலியூர்க்கரசே யடிமைதன்னைப்
பட்சமுமதருளுருவாய்ப் பார்ப்பதென்றோ.

கருவாய்.

பராபரக்கண்ணிகள்.

கருவாயுருவாகிக் காலாகிநின்றவுனை
அறியாதழிகுவது மழகோபராபரமே. (௧)

வரந்தாவருவில்லேன் வந்துபற்பலப்பிறவி
பிறந்திறந்தாலுமென்ன பேறும்பராபரமே. (௨)

போதவிருணீக்கியருட் பூரணமாகிற்பதற்கு
நாதவிடெய்தும்வகை நவிலாய்பராபரமே. (௩)

எண்ணிலாவெண்ணங்களெக்கோடியாகினுமென்
அண்ணுவுமதருளே யன்றோபராபரமே. (௪)

விட்டாறகாலுன்னைவிட வேறுகதியெங்குமிலை
பட்டபலகோடிசன்மம பார்த்தாய்பராபரமே. (௫)

கல்லேன்புன்னாய்க்குங் கடையனுணர்வற்றவொரு
புல்லேன்பிழைகள் பொறுப்பாய்பராபரமே. (௬)

தொந்தமனைவாழ்க்கைதனிற் சூத்திரத்துட்புள்ளானேன்
பந்தமலநீங்கநின்கண் பாராய்பராபரமே. (௭)

வேண்டாவெல்லாம்வீணில் விட்டுவிட்டுநின்னருளைத்
தாண்டிப்பிடிக்குமியல் சாற்றாய்பராபரமே. (௮)

காட்டுக்கருக்குருவி கருவிளைவைச்சுட்டிதயக்
கூட்டிலருளொளியைக் கூட்டாய்பராபரமே. (௯)

நினைத்தாலும்பிரம்பித்து நெக்குருகும்பொன்ன[illegible]க்கே
செனித்தானனைவென்னைச் சேர்ப்பாய்பராபரமே. (௧௦)

பொன்னைமடவார் புழுக்கேணியிற்றோய்தல்
இன்னமுமேயுண்டோ வியம்பாய்பராபரமே. (௧௧)

வெந்தழலினொந்தவெனை வித்தாநின்சீறடிக்குச்
சொந்தமகனென்றழைத்தாற் சுகங்காண்பராபரமே. (௧௨)

தூங்கியிருப்பேன் சும்மாயிருந்திடுவேன்
ஏங்கிமுடியாவிருளேன் எய்தும்பராபரமே. (௧௩)

ஐயாவினைக்கூட லல்லாதுருகிமனம்
மெய்யாயழிவதுவு மேலோபராபரமே. (௧௪)

கண்ணிக்குட்புட்போல் கலக்கமுறமாதரல்குற்
புண்ணுக்குள்ளேன்புகுத்தாய் போதும்பராபரமே. (௧௫)

ஊணியெழுத்தொன்றை யோதுமனக்கென்னை
காணிக்கைதந்தேனென் கண்ணேபராபரமே. (௧௬)

கண்ணிமையாப்பேறே கதிர்முனையேசூதாக
வெண்ணரும்பேதங்களா யிருந்தாய்பராபரமே. (௧௭)

கால்மாற்றிமாற்றியுகங் கண்டபலதேகமெலாம்
மேல்போத்திக்கொண்டு மெலிந்தேன்பராபரமே. (௧௮)

பொய்யானபொய்யுடலைப் போட்டுவிட்டுப்போமுன்னம்
ஐயாவுனதருளெற் காமோபராபரமே. (௧௯)

பஞ்சபுலவேடர் பாழாய்ப்ரமேந்திரத்தில்
துஞ்சவருளென்றோ தூக்கும்பராபரமே. (௨௦)

அகம்பிரமமென்னுண்முனை யனந்தசென்மமானதுபோய்
மகனேவாவென்றழைத்தான் மகிழ்வேன்பராபரமே. (௨௧)

தாயாயுஞ்சேயாயுந் தாரமாவந்ததுவும்
நீயேயெனத்தெளிந்து நின்றேன்பராபரமே. (௨௨)

நினைந்துநினைந்தேங்கி நெஞ்சம்புண்ணாவதெலாம
மனமதுதங்காமையென்றன் மாயப்பராபரமே. (௨௩)

கண்டபலதேசமெலாங் கலந்துகலந்தெடுத்து
வுண்ட[illegible]யகைப்போதும் ஒழியாய்ப்பராபரமே. (௨௪)

அறிந்துமறியாமையினா லனந்தசன்மமானதெல்லாம்
மறந்ததெந்தக்காரணத்தான் மறைத்தாய்பராபரமே. (௨௫)

பூரணமேயென்றழுங்கிப் போற்றறியேனின்னருளின்
காரணத்தையென்றோநான் காண்பேன்பராபரமே. (௨௬)

வாரணத்துக்கப்புறமா வாழாதுவாழ்ந்துநிற்கும்
பூரணத்திலென்றோ புகுவேன்பராபரமே. (௨௭)

எண்ணரியகோடியுரு வெடுத்தாடற்கொள்ளுமுனை
கண்ணாரக்கண்டென்றோ களிப்பேன்பராபரமே. (௨௮)

நீர்க்குமிழியிவ்வுடலீ டூழியிருக்குமெனப்
பார்க்குண்ணினைந்தவலப் பட்டேன்பராபரமே. (௨௯)

ஐயையோபோய்விடுமென் றறியாதுபொய்வாழ்வை
மெய்யென்றிறப்பிறப்பின் மெலிந்தேன்பராபரமே. (௩௦)

சகலகலைக்கியானமெலாந் தாண்டிபெரும்பாழ்வெளியில்
பகல்விளக்குபோலென்றோ பதிவேன்பராபரமே. (௩௧)

தோயாதுதோய்ந்து சுகவெளியில்ரண்டற்று
வாயாதுவாழவெனை வைத்தாய்பராபரமே. (௩௨)

நினைந்துநினைந்துள்ளம் நெக்குருகின்றதுவுந்
தனிக்குமருளுருவே தாராய்ப்பராபரமே. (௩௩)

விட்டுவிட்டுத்தொட்டெழுத்தை வேதமுதலாய்ந்துமென்றன்
கட்டவிழ்த்துன்றனருளிலெனைக் காப்பாய்பராபரமே. (௩௪)

கண்ணீர்வடித்துக் கருத்தயர்ந்துகைக்குவித்து
எண்ணியெண்ணிநானழச்செய் திட்டாய்பராபரமே. (௩௫)

பித்தேறியைந்துபுலப் பேய்ப்பிடிக்கக்கூட்டிவிட்டு
கத்திகத்திநிற்பதுனக் கழகோபராபரமே. (௩௬)

தாயாகிமுன்னிருந்துந் தாரமாய்ப்பின்னிருந்துஞ்
சேயாகிப்பற்றவுநீ செய்தாய்பராபரமே. (௩௭)

விட்டேறிவெம்பாழ்பிறப்பை வேதாந்தவெட்டவெளி
பட்டணத்துக்கென்னைமுகம் பாராய்பராபரமே. (௩௮)

பிறந்துபிறந்திறந்தும் பின்கொண்டுபோவதென்னே
கரைந்துகரைந்துகண்ணீர் கலப்போபராபரமே. (௩௯)

அருளேயருளுருவாம் ஆனந்தவெள்ளத்தே
இருளற்றுநிற்கவர மீவாய்பராபரமே. (௪௦)

பாராயோநின்னருளும் பதையாதென்னைமறைக்க
வாராயோபொன்னடிக்கீழ் வைப்பாய்பராபரமே. (௪௧)

ஏதேதுமெற்கருளி யீதில்பிறப்பிறப்பில்
சூதேநீசெய்வதென்னே சொல்லாய்பராபரமே. (௪௨)

வாதுசம்பந்தனென்றன் வன்பிறப்பினேடிறப்பை
சேதித்திடாததென்னே செப்பாய்பராபரமே. (௪௩)

பேசரியவானந்தப் பேராழிவாய்மடுத்து
வாசிதனிலேறவென்னை வைத்தாள்பராபரமே. (௪௪)

சுருதிமுடிவாகுஞ் சொற்பெரியவானந்தம்
பெருகிப்பெருகவைத்தால் பிழையோபராபரமே. (௪௫)

கண்ணாரக்கண்டானின் கருணைத்திருவருளை
பெண்ணாசையப்போழ்தே போகும்பராபரமே. (௪௬)

பாசத்தாற்சுற்றிச்சுற்றிப் பையப்பிறப்பிறப்பில்
ஆசியாய்ப்போதனென்றே சொல்லாய்பராபரமே. (௪௭)

வேடிக்கையோவுனக்கு மீறும்பலவினைவு
கோடிக்கோவென்னைக் குறித்தாய்பராபரமே. (௪௮)

தானாகிநிற்கின்ற தற்பரத்திலென்றனையுங்
கோனாகிநிற்கவருட் கூறாய்பராபரமே. (௪௯)

பேசேனொருமொழியும் பேசாதிருந்தவிடம்
நாசிமுனைவழியே நற்றருள்பராபரமே. (௫௦)

சும்மாயிருக்குந் தொழிலிலெனைச்செய்வாயேல்
கைம்மாறெனையே கணித்தேன்பராபரமே. (௫௧)

பராபரக் கண்ணிகள்
முற்றிற்று.

சிவனயன்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சிவனயன்மாலாய்நின்ற தேசிகாநின்பொற்பாதம்
கவனமீதாடுஞ்சித்தைக் கண்டுய்வதெக்காலந்தான்
புவனமீதென்னையாட்டிப் போராடல்கண்டோரந்தோ
சிவயநமாவென்னுஞ்செந் தேனுண்ணத்திருக்கண்பாரே.

கீர்த்தனம்.

இராகம் கல்யாணி தாளம் சாபு.

பல்லவி.

சுமக்க வறியேன் சுவாமி பாழ்மலக் கும்பியை
சுமக்க வறியேன் சுவாமி.

அநுபல்லவி.

எமக்குமபரமுண்டோ வென்றுணர்ந் தேங்கியே
அமைக்கும் விதிவச ஆலையிற் றேங்கியே—(சுமக்க.)

சரணங்கள்.

பலகாலமும் பாழ் மனத்தாலேயே நைந்து
பரம சுகத்துக்கிடமானதிலே அசந்து

நிலையுறாத தென்கொல் நீயொழிப்பா யெழுந்து
நின்னேழை கண்ணீர்மாறு துதிர்ப்ப தழகோநொந்து—சுமக்க.(௧)

பேதையிற் பேதையிலப் பேனே மாயையைச் சுட்டு
ப்ரம்மமே சகசப்ரம் மானந்த மேவிட்டு
போதமே நிர்ம்மலப் பூர்ணவக்கினிப் பட்டு
போய்மறை வேனோதிரு வருள்வழி யினைத் தொட்டு—சுமக்க.(௨)

கேவலசகல மிருவினைத் தொட்டே மாயை
கிட்டவே கிட்டா திருந்ததுப்ரம்ம சாயை
நேர்வதிலைகாணொரு நிலையாய் குருத் தாயை
நெருங்கிப் பிறவியை நீக்கிடவே தீயை—சுமக்க.(௩)

சொந்தமோ வில்லற வாழ்க்கைக் கானல் நீரோ
சுட்டியுஞ் சுட்டா திருந்தருட் கண்ணல் நேரோ
பந்தமே யரமேபொய்த் தேர்சந்தையா மூரோ
பட்டபின் புடலைச்சுட் டப்பின்போ அருட் கூரோ—சுமக்க.(௪)

கோகாணுதிகள் கற்றென்ன மட்டிப் பாழே
குறிநெறி யற்றகுரு டர்களுறவுந் தாழே
காகம் தாகவமு தனை நோக்கியும் ஏழை
கைவிடிற் கதியில்லை யெனிலது வெகு தாழ்வே—சுமக்க.(௫)

ஓமெனுஞ் சுழியினி லேசாய்ந் தோய்ந்து நான் றூங்கி
உவ்வென் னும்விழியத் னில்சாய்ந்துமே பொங்கி
ஆமெனுங் கழியினிற் றேய்ந்துத் தேய்ந்துத்தொங்கி
யனந்த வனந்தபேத மாய்ப் பிறந்தயர்ந் தோங்கி—சுமக்க.(௬)

பெற்றதா யிலையெனிற் பிள்ளைக ளாகாதே
ப்ரம்மமே யிலையெனிற் பிரபஞ்ச மாகாதே
உற்றதொன் றெனிற்கலங் குள்ளமே யாகாதே
உருகர்துள மூமையா முளவை யெனக் கருளே—சுமக்க.(௭)

கீர்த்தனம் முற்றிற்று.

பாசத்தினுள்.

கட்டளைக்கலித்துறை.

பாசத்தி னுட்கட்டுப் பட்டோருமான்போற் பரதவித்தேன்
ஆசைபாசங்க ளகன்றிடநீக்கி யருண் மயத்திற்
பேசாதடா வெனப் பேச்சற்ற காரியம பேசசகத்
திசாவயப மென்றே னைந்து னைத்திங் கிறைஞ்சினனே. (க)

அண்டம்.

கட்டளைக் கலித்துறைகள்.

அண்டமுதலேழ் வகையோனி யாழ்ந்தி யனந்தசன்மங்
கொண்ட வடிவங்களெத்தனையோ கற்பங்கொண்டயர்ந்தேன்
பண்டைவினை யொழிவோ பரிபாசம் பரவவெனைக்
கண்டவெங்கோன் வள்ளல் சற்றேயிரக்கங்கண்ணுற்றனனே.
கண்ணுற்றதோகொடு மாயப்பிறவி கருவறுக்க
வெண்ணுற்றதோவைந் தெழுத்தாலுமர்ச்சிக்கவேதவிதி
நண்ணுற்றதோபொன் னடிக்கென் றம்யான்மூலனைக்குறை
விண்ணுற்றதேவள்ளலிங்கென் னுளத்தேயெழுந்ததுவே(அ)
இவனேயிவனே யெனநித்தகாடியென் சிந்தைநைந்தேன்
அவனேயவனே யருளாளனாகி யகத்தெழுந்தான்
இவனேயிவனே நானென்றறியாது வெடுத்தசன்மம்
புவனமீரேழுயிர் யாவும்பரவியே போனதுவே.

வெண்பா.

வந்தோம் வந்தோமெனவும் வாழ்விப்பதாமெனவுந்
தந்தோந் தந்தோமுதலோர் சாதனமே—எந்தைசொல
உன்னையறிந்தாலுவ்வா மோர்வரம்புமின்றியருட்
டன்னின்பந் தானேதானும்.

இதன் பொருள்.

பரப்ரம்மசுழி மேருவின்சிகரத்துதித்த பூரணாநந்தமே ஆகாய வாக்காகியும் அருளேயே திருமேனியாயுடைய மெஞ்ஞான சற்குருவாகியு மெழுந்துள்ளும் புறமுங் காண்பானுங் காக்ஷியுமாய் பஞ்சாக்கர ஏகாக்ஷரி மூலாதாரவைங்கரன் தாமென

சுட்டித் தன் சுசொரூபங்காட்டி, அச் சுட்டுப் பொருளாய அதனோனுப சாங்குசித்த சிவலிங்க நாயன், எனப்பெயரிட்டழைத்து தானே சாக்ஷிக்காரணனாகி என்னைநோக்கி நானே யுனக்குள்ளும் புறத்து நிறைந்தேன் ஸ்ரௌவணமுஞ்செய்தேன் நீவிட்டடைவதுநின்படிக்கெனது திருவருளேயுக்காலென்றும், உனக்குமெனக்கும் இரண்டற்ற விடமே, அருளயிக்கியமென்றும் உன்னிழப்பே போநந்தோதயமென்றும் ஊழ்வலியால் ஐக்கியங்கூடாவிடின் நிசசாதுசாம்படிக்கான என்திருவருளேதுவே காரணதண்டமென்றும், மனனவழியே நெருப்பாற்றின் மயிர்ப்பால மீதேறி அறிவாய்நின்று சர்வதத்துவங்களையும் ரூபகதரிசனஞ்செய்து, ஸ்தூலசூக்ஷுமகாரண தேகநீங்கி மஹாகாரணதேகத்தோடருள்விட்டடைதியென தன்மய உசாதிதைக்ஷயால் என்னை நவமாச் சிருஷ்டித்து, ஒருமொழி யென்னும் பிரணவத்தைத்தந்தனர் என்றவாறு.

மேற்குறித்துள்ள செய்யுட்பொருள் உரையினூற்றைக் கவர்ந்திருப்பதாக விஷயங்களை வருவித்துக்கொண்டுட்டிக் கொள்வதறிவிற் சிறந்தோர்க்கழகன்றோ.

இது-குருமூர்த்திமாச் சுதரிசனந்தந்தருளிற்கும் பிரமத்தோடு இந்நூலாசிரியர் ஆக்கித்துதித்துளத்துகின்றார்.

பஞ்சரத்னமாலை.

ஆசிரியவிருத்தம்.

பனைப்பனைத்திடவுமென தகமாதி மூன்றினும்
பரவாநிருக்கவைத்தாய்
பதற்பத்திப்பால போற்றுதி செயாதுமை
பக்ஷிபோ னிற்கவைத்தாய்
சினைந்தக நெகிழ்ந்துவிழிமழைபொழியகம்பித்து
தேம்பித்திகைக்கவைத்தாய்
திசநாடிமுகலுயிர் திடுக்கிட்டுள்ளக்கூவி
தேடிபிரமிக்கவைத்தாய்

புதைவுறுமலமாயை தனுகரணமும்புவன
போகமும நீங்கவைத்தாய்
புத்தியறியாறுமீதேறுவித்தருட்
போதகிரி யேற்றுவித்தாய்
சதவணியெனுமமவுன வொருமொழிக்கடிமைசெய்க்
கைம்மாறு நிற்கியாதோ
கவனவொளிபரவவரு மவுனகுருதேசிகா
கருணைகண்ணுடை வள்ளலே. (க)

வர்னாதிதானமாச் சுழல்திகிரிநீர்வண்டு
மயமெனவிருப்பர் சிலபேர்
மண்விண்ணுமேகமா யுன்னியமுதானந்த
ப[illegible]ர்க்கத் திருப்பர்சிலபேர்
சி[illegible]வமொழிகயற் கன்னியர்மயக்கமுந்
தெளிதலினி னிற்பர்சிலபேர்
[illegible]தய்வசெயலொன்றிசீ வன்முத்தர்தம்மினுந்
திகழ்வுற்றிருப்பர் சிலபேர்
மானகரிருந்தாக மாயமெனநின்னருளை
மறவாதிருப்பர் சிலபேர்
மந்தர்சிலர்மந்தர வந்தர்சிலர்தீவிரம்
மாதீவிரத்தர் சிலபேர்
கானல்போற்சஞ்சிதக் கருமமாமாயையை
கடக்குமூழ் சாதனர்க்கே
கவனவொளி பரவவருமவுனகுருதேசிகா
கருணைகண்ணுடை வள்ளலே. (உ)

குடங்கவிழுநீர்க்காய் மடங்குடிகொளுயினேன்
குலவலுக்கருள் புரியவும்
கூடினுங்கூட்டுற விலாவிடினும் வாடினுங்
கொள்கையுனதருள் புரியவும்
இடம்பொருளொடேவன்முத லேகநின்னருளென்று
மெண்ணலினதருள்புரியவும

இச்சைவடிவானகொடு நச்சரவமாய்கைமன
மிடர்செயா தருள்புரியவும்
திடமில்லையென் றிடைந் தேங்கிநின்றயருமெனை
திட்டமாயருள் புரியவும்
தீவிரத்துறுநெறிகள் யார்க்குள்ளதெனவே
தியங்காது வருள்புரியவும்
கடமழிக்கிடுமுனநி னடனமறிவீர மற்
கலங்குவது நிற்கொரழகோ
கவனவொளிபரவவரு மௌனகுருதேசிகா
கருணைகண் ணுடை வள்ளலே. (௯)

கான்னீர்ப்பந்தமல வாழ்க்கைதுர் வாரியில்
கரைந்துருகி மாய்வர்சிலபேர்
கைலாயதிருநடன வொளிவெளியைகண்டுளங்
களிகூர்ந்திருப்பர் சிலபேர்
திரயமெய்துமௌனி னும்வைராக்கியஞான
சித்திதனினிற்பர் சிலபேர்
சித்தந்தெளிந்துபர முத்தராகிற்பர்சிலர்
சிவமாகி நிற்பர்சிலபேர்
மோனவழியாந்திகம பரியாகியேசிவன்
முத்தியுழி நிற்பர்சிலபேர்
முக்கியமாப்பெறுபேறு யாதியர்களுனையன்றி
மூடனு னர்வீணராக்
கானகச்சருகருந் தழ்சிலருள்ராவனே
கமலதாட் காளாகியுங்
கவனவொளிபரவவரு மவுனகுருதேசிகா
கருணைகண் ணுடை வள்ளலே. (௰)

தில்லையெனுநாமமா யெல்லைதனினின்றதோர்
திருநடந்தான் கொண்டதோ
சிரமேருகிரிபதனில் கொலுவாயிருந்ததோர்
ஸ்ரீமூலகிரியிலுளதோர்

சொல்லவரிதாகாம ரூபபேதத்ததோ
　சுருதிமுடிவாமௌனமோ
குக்ஷாதிருக்ஷமமோ துரியராஜயோகமோ
　தூண்டாத சுடர்விளக்கோ
எல்லாவுயிர்க்குமோ ரருளாயெழுந்ததோ
　ஏகமாத்தானின்றதோ
எம்பிரான்றிருஞான சம்பந்தனெனவந்
　திசைந்ததோ கயிலையின்வளங்
கல்லாதவீணனடு வான்மயிலையானதோ
　காணொணாதவிடோ
கவனவொளிபரவவரு மவுனகுருதேசிகா
　கருணைகண்ணுடை வள்ளலே.　(௯)

பஞ்சரத்நம் முற்றிற்று.

இந்நூலாசிரியர் தன் சாதனகாலநிகழ்விற் றம்மெஞ்ஞானக்குரவரை யாறுமுகதேசிகவடிவாகக்கண்டு, சாதாரணகால நிகழ்வில் நினைத்துநினைத்துருகி நீவிர் என்னிருகண்கண்முன்ன ரதோமுகமாவுருக்காட்டுவதெந்நாளென வினவியிரங்குகின்றார்.

நாளென்ன.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

நாளென்னத் தானறிந்தே னனேககாலம்
　நன்கறிந்திப் போதிறத்தன் ஞாயமன்று
கோனெனவென் னிதயமலர் மீதிலாடுங்
　குமரேசவள்ளலெனக் குறிகொண் டோய்மெய்ஞ்
ஞானவருள் வாரியில்வாய் மடுத்துத்தூங்கி
　நாதாந்தத்தேயிருக்க நடனகின்றுண்
மோனவுருவாய்க்காட்டி யுணர்ந்தேனென்னுண்
　முளைத்திருந்தும் வெளிவாராய் வருவதென்றோ.

இருகண்ணும்.

பராபரக் கண்ணிகள்.

இருகண்ணைமூடி யிருந்தறிவானந்த வெள்ளக்
குழிகண்டுவாய்மடுக்கக் கூறாய்பராபரமே. (௧)

கூட்டியிழுத்தன்றோ கொண்டவருட்கோலமதை
காட்டிநடம்புரிவாய் கண்ணேபராபரமே. (௨)

தன்னையேதானறிவா னன்றோதனையறியா
வண்ணமிருப்பதென்றோ வாய்க்கும்பராபரமே. (௩)

பதையாகிருந்தும் பராபரத்தைப்பாடாமற்
கதையாலனந்தசன்மங் கடந்தேன்பராபரமே. (௪)

பேராப்பொருளாகி பேதமாகின்றதெலாம்
யாரொன்றுரைப்பே னறியேன்பராபரமே. (௫)

என்னையறியா தெடுத்தவனந்தசன்மம்
உன்னையறியுமந்த வளவேபராபரமே. (௬)

சூட்டமுடியாது சூதொன்றுகண்டபலன்
சூட்சமதுதானே துவக்கம்பராபரமே. (௭)

கள்ளமறியேன் கபடறியேனேழையையா
வுள்ளத்தினுள்ளிருந்த வோகோபராபரமே. (௮)

தும்பிக்கையோனைத் துணையாய்ப்பிறவிதொழும்
நம்பித்தொழுதிந்த நாயேன்பராபரமே. (௯)

நம்பித்தொழுதவிந்த நாயேனைப்பாழ்வீட்டில்
சம்பித்துவாடச் சமித்தான்பராபரமே. (௧௰)

தும்பிக்கையோன்செய்யுஞ் சூதையறியாமல்
வெம்பித்திரிந்ததென்றன் விதிகாண்பராபரமே. (௧௧)

தொண்ணூற்றறுவகையுஞ் சூதாய்த்தொகைப்படுத்தி
கண்வீட்டினுள்ளடைக்கக் கண்டேன்பராபரமே. (௧௨)

அடித்தானடியேனை யாருறுக்கப்புறத்தே
துடித்தோடிநின்றவிடந் தோய்ந்தேன்பராபரமே. (௧௩)

நிற்குநிலைகாணேன் நெக்குவிட்டுநிற்குமிடம்
புக்கவொருமொழியிற் போனேன்பராபரமே. (௧௪)

தாயாகிநிற்பவளைத் தாரமாச்சொல்லுமவன்
நீயாகிநிற்கவெனை நினைத்தான்பராபரமே. (௧௫)

அம்பிக்கையான்செய்த சூதையறிந்துணர்ந்து
எம்பிறவிதானே யிழந்தேன்பராபரமே. (௧௬)

பாழாம்பாழாசையினைப் பாழாக்கிவிட்டுவிட
வேழமுகனையெனக்கே விதித்தாய்பராபரமே. (௧௭)

வேழமுகன்றானே வேதமவுனவரு
வாழ்விங்கெவர்க்கு வருங்காண்பராபரமே. (௧௮)

உனக்குள்ளேயானுமென் னுள்ளுயிர்க்குள்ளேநீயாய்த்
தனக்குத்தானாவதென்றோ சாற்றாய்பராபரமே. (௧௯)

உள்ளிருந்துநீயே யுருவெளியுந்தானாகி
என்னுளெண்ணெயாக விருந்தாய்பராபரமே. (௨௦)

பஞ்சாக்ஷரமாய்ப் பரமார்த்தமாகுமரு
ணெஞ்சிற்குடியாய் நிலைத்தாய்பராபரமே. (௨௧)

எங்கெங்குந்தேடி யிளைத்தேன்பலபிறப்பில
அங்கப்புளகிதத்தை யறிவாய்பராபரமே. (௨௨)

ஏகாக்ஷரமோன வின்பத்தைக்கூட்டிவிட்டாற்
சாகாக்ஷரந்தானே தானேபராபரமே. (௨௩)

தேவாயுந்தேவர்கோன் றெக்ஷணாமூர்த்தியொடென்
னாவாயுமென்முன் னடந்தாய்பராபரமே. (௨௪)

தொம்பென்னுமலக் குறியறியவல்லாரை
யின்பேபெருகி யிழுக்கும்பராபரமே. (௨௫)

அம்மென் றுந்தீக்ஷை யடைந்தாற்சராசரமும்
எம்மதென்றேயாடி யிருப்பார்பராபரமே. (௨௬)

உம்மென் றுந்தீக்ஷை யுருப்பட்டுறைந்தாற்கால்
செம்பொனம்பலத்தே திரிவார்பராபரமே. (௨௭)

உந்திக்குமேலாகி யோர்மொழியாநின்றவுனை
யெந்தமறைதானறிவ தெந்தாய்பராபரமே. (௨௮)

தத்வமசிபதத்திற் றுணிவந்தவர்க்கு
செத்தசவமெழுந்து திரியும்பராபரமே. (௨௯)

அருளேயருளாகி யப்புறமுமேயாகி
யிருளுமொளியா யியங்கும்பராபரமே. (௩௦)

சர்க்கரையோநெஞ்சஞ் சலிக்காப்பசும்பாலோ
அக்கரையைநீந்த வருளாய்பராபரமே. (௩௧)

பாரதியண்டமெலாம் பாராதுபார்த்திருக்கும்
பேராதியோர்நின் பிரபை பராபரமே. (௩௨)

அண்டபகிரண்டமெலா மாடாதங்காடிநிற்குந்
தொண்டருளமாடுமொரு சொல்லாற்பராபரமே. (௩௩)

கோர்த்தநிலையாகுங் கூறரியமோனவொரு
பார்த்தவிழியாற் பரந்தாய்பராபரமே. (௩௪)

விதிவிருத்தியாவதெலாம் விட்டேதிப்போயிருக்க
பதிபொருத்தமொன்றெனக்குப் பார்ப்பாய்பராபரமே. (௩௫)

சிவாயநமாவென்னச் சிந்தைசெய்குவோர்க்கிங்
குவாயவெமன்மாள வுதைப்பாய்பராபரமே. (௩௬)

நமசிவயவைந்துமொரு நாதாந்தவீடாமோ
அமையதுக்கப்பாலுமறி வானாய்பராபரமே. (௩௭)

அறிவாயேயென்னையுனக் காளாக்கிக்கொண்டாற்கால்
மூறியாகியேவன் முடிப்பேன்பராபரமே. (௩௮)

தெரிந்துந்தெரியாவென் சிந்தையினுண்ணியருளைப்
பரிந்துலகெல்லாந்தேடிப் பார்த்தேன்பராபரமே. (௩௯)

அன்பேபெருக்கே யறிவாநந்தக்கடலே
யின்பேயெனைப்பிரியா திருப்பாய்பராபரமே. (௪௰)

எனக்குனக்கும்போர்தானோ வேழையைப்பார்த்திரங்க
தனக்குத்தானாகாது சகியேன்பராபரமே. (௪௧)

போனாலும்போகட்டும் போனபின்புந்தானாகி
யேனனைகொண்டேனின்ப மெந்தாய்ப்பராபரமே. (௪௨)

தெரியாதுநீண்டியெனைத் திட்டமில்லையென்பாயோ
அறியாதியானுமுனை யறிந்தேன்பராபரமே. (௪௩)

அறிவேன்பரமவச மாகாய்நீயென்பாயோ
அறியேன்பரமார்த்த ஞானேன்பராபரமே. (௪௪)

இறந்திருந்துன்பொன்னடியி லெப்போழ்தினும்மறியப்
பிறந்தபின்பெவ்வாறு பிரிவேன்பராபரமே. (௪௫)

எட்டியெட்டியானடுத்தே னென்னைக்கீழ்த்தள்ளாது
கட்டிநின்பொன்னடிக்கீழ் காப்பாய்பராபரமே. (௪௬)

சோதிப்பெருவெளியே தூண்டாச்செம்மாமணியே
ஆதியந்தமின்றியெல்லா மானாய்பராபரமே. (௪௭)

நாளைக்கோவின்றைக்கோ நானுடலைப்போடலெந்த
வேளைக்குமுன்னைவிடு வேறேபராபரமே. (௪௮)

பெருமூச்செறிந்தெறிந்து பேரின்பவீட்டைநினைந்
தொருமூச்சாய்ப்போவதுநின் னுளமேவபராபரமே. (௪௯)

தருமப்பிரானென்றுந் தயாநிதியென்றும்
பெருகுமறைபலவும் பேசும்பராபரமே. (௫௰)

பேசவுங்கேட்டேனே பேசாதொழிந்தவிடத்
தாசையும்வைத்தழுத தறிவாய்பராபரமே. (௫௧)

பூரணாநந்தோதயம்.

கோடிப்பொருள்வேண்டாங் கொஞ்சமுமேயென்னைமுகம்
வாடாமல்வைப்பதுநின் மாண்பேபராபரமே. (௫௨)

தேடித்திரிந்தழுதுந் திருவடியைச்சிந்தித்து
வாடியுமனந்தசன்மம் வந்தேன்பராபரமே. (௫௩)

எறும்புகடையானைமுத லெப்பிறப்புந்தப்பாமல்
கரும்பாலையாகிக் கசிந்தேன்பராபரமே. (௫௪)

ஐயோவென்பாழ்விதியை யாரிடஞ்சொல்லீஇ யழுவேன்
பொய்யேனுனக்கடிமைப் பொய்த்தேன்பராபரமே. (௫௫)

ஏதேதுசெய்திடுமோ வென்றனிரும்பாழ்வினைகள்
போதுமிகதிரச்சாலப் பொய்ம்மைப்பராபரமே. (௫௬)

கண்டுகண்டுசென்மக் கலக்கமெலாம்விட்டொழிக
வுண்டேயுனக்கருள்கா ணேகோபராபரமே. (௫௭)

வாராயோர்வன்னையாய் வந்ததற்பின்றந்தையாய்
சேராயோசற்குருவாய்த் தெரிந்தாய்பராபரமே. (௫௮)

கோடிசன்மங்கொண்ட குறைகளெலாந்தீரவுன்னை
நாடிப்பதமடுத்தே னையேன்பராபரமே. (௫௯)

கத்துகின்றபாவிக் கருவிகள்போய்ப்பாழாகிச்
செத்துசெத்துவந்தகுறை தீர்ப்பாய்ப்பராபரமே. (௬௦)

கோவிந்தமென்னுங் குருவின்மொழிக்குபொருள்
மாவிந்தங்காட்டும் மகத்தேபராபரமே. (௬௧)

ஏகவெனமேலோ ரியம்புபொருளெவ்வுயிர்க்கும்
வாசியெனநின்றதன்றே வாழிபராபரமே. (௬௨)

இல்லல்லவென்னுமொழி யாவுமுண்டாக்குமொரு
சொலவரியவிளைந்ததெனச் சொல்லும்பராபரமே. (௬௩)

சிவசிவாவென்றென்றன் சிந்தைக்குட்டான்மறைந்த
அவனையறியாதலைந்தேன் ஐயோபராபரமே. (௬௪)

கத்திகத்தித்தர்க்கமிடுங் கண்கெட்டவாய்வீணர்
செத்திறந்துபோனபின்பென் செய்வார்பராபரமே. (௬௫)

பிடித்தபிடிவாதம் பேசுபெருமூடர்களை
யிடித்தெமனென்செய்வானோ வெந்தாய்பராபரமே. (௬௬)

ஐயோகுதர்க்கிகள்பின் பன்[illegible]ாயமாய்ப்புவியிற்
கைதலைமேல்வைத்தழவோ கணித்தாய்பராபரமே. (௬௭)

இன்பபெருக்காகி யெழுந்தமொழியொன்றைமுனோர்
செம்பொனம்பலம்மெனத் தெளிந்தார்பராபரமே. (௬௮)

தன்னையறிந்தன்றோ சாற்றமொழியேதுமின்றி
யின்பபெருக்கா யிருந்தார்பராபரமே. (௬௯)

வாழ்விப்பதுவன்றோ வையமுழுதாகவொன்று
பாழ்வீட்டிலென்னைமுகம் பாராய்பராபரமே. (௭௦)

சூத்திரத்தினைப்பார்த்து சுத்தவெளிக்குட்புகுந்தோர்
நேத்திரமாநின்னருளி னின்றார்பராபரமே. (௭௧)

சாக்ஷிதனிற்சாக்ஷியாய்த் தன்னறிவாய்நிற்குமுன்றன்
மாக்ஷிமையைச்சொல்லதர மாமோபராபரமே. (௭௨)

போதப்பதைப்பெல்லாம் பொய்யாகிப்போகவரு
ணாதமுடிவிலென்னை நாட்டாய்பராபரமே. (௭௩)

அரியபொருளாகி யாருறக்கப்புறத்தே
பெரியபொருளனையார் பெற்றார்பராபரமே. (௭௪)

கோடியுருவெடுத்துங் கூடாதவெட்டவெளி
நாடியிருந்தோரே நல்லோர்பராபரமே. (௭௫)

பாழாகுஞ்சூனியமாய்ப் பதையாதிறந்தவர்க்கே
வாழ்வானதேனமுதம் வழியும்பராபரமே. (௭௬)

படித்தபடிகடவார் பந்தம்போமோவுடலை
யிடிக்கவெமன்பின் னிருப்பான்பராபரமே. (௭௭)

கற்றாகற்றுப்பாழாய்நின் கருணையடிமறந்தால்
செத்துசெத்துப்பின்னனந்தஞ் செனிப்பாம்பராபரமே. (எஅ)

செத்தாற்கெமன்பயமுஞ் செனித்தாற்கருமபயமும்
எத்தாலும்போகாதென் செய்வார்பராபரமே. (எகூ)

கோடிமறையாலுங் கூறரியநின்னருளை
நாடியெவ்வாறுணைப்பே னாயேன்பராபரமே. (அ0)

திடமில்லவேயில்லைத் தேடியுன்பக்கலவர
விடமெனக்குமுண்டோ விளம்பாய்பராபரமே. (அக)

வருமேபெருவாழ்வு மாசற்றநெஞ்சகத்தோர்
கருவாய்நின்பொற்றாளைக் கண்டார்பராபரமே. (அஉ)

கற்றதொருகோடிக் கலைகளெலாம்பித்தானால்
எத்தாற்றெளிவ தியம்பாய்பராபரமே. (அங)

மோசமொன்றுமில்லாது மூவாசையையொழித்தால்
வாசமுனதடிக்கண் வாழ்வேன்பராபரமே. (அச)

செற்றுத்திரிவோர்க்கே தேடரியநின்னருளின்
பித்தொன்றுதானேபிடிக்கும் பராபரமே. (அரு)

பிடித்தாற்பிழைப்பேன்காண் பேரின்பவீட்டமுதம்
வடித்தாலெமனண்ட மாட்டான்பராபரமே. (அசா)

இராகத்துவேஷ விராக்ஷதரையெல்லாமே
போகநெறியொன் றடைந்தாற் போதும்பராபரமே. (அஎ)

பழிக்கோவுருவெடுத்தேன் பாவியெனும்பேர்வாரா
வழிக்கேயனந்தமறை வைத்தாய்பராபரமே. (அஅ)

எனையேபெருவெளியி லென்செய்வாயோவறியேன்
உனையேயெப்போது முணர்வேன்பராபரமே. (அகூ)

கதைகொள்ளனந்தசன்மக் கட்டறுத்தாலென்பயனீது
அதையேமறைக ளறையும்பராபரமே. (கூ0)

தோழனெனச்சொல்லித் துணைக்கொள்வாய் வெம்பிறவி
யாழித்துரும்பானேன் ஐயபராபரமே. (௯௧)

பெருவெளியாய்நின் றவொரு பேரின்பமோனமெனும்
உருவெளியையாரே யுரைப்பர்பராபரமே. (௯௨)

அருளொளியாயெங்கு மமருந் திருக்கூத்தை
குருமொழியாலல்லோ குறித்தார்பராபரமே. (௯௩)

தேனுமமுதத்திரள்வாரி பொங்குமற்றால்
தானேதனியாய்த் தனிப்பேன்பராபரமே. (௯௪)

தனித்திருந்துதானுந் தன்னையறியக்கற்றோர்கள்
இனத்திலிருந்துமென்ன வின்பம்பராபரமே. (௯௫)

தன்னையறியாத்துறவு சதகோடிநாட்பூண்டும
உன்னையறியவச முளதோபராபரமே. (௯௬)

ஏதேதெடுத்துரைத்தும் இருக்காதியாய்நுபன
வாதைத்தவிர்த்திருக்க வருமோபராபரமே. (௯௭)

துடைதட்டிக்கொண்டு துறந்தோர்க்கேயாநந்த
மடைதிறந்துதானே மடக்கும்பராபரமே. (௯௮)

துணிவோர்க்கெதுவரினுந் தூயநிலைச்சேர்வார்
துணியார்பிறவிக்குட் டோய்வார்பராபரமே. (௯௯)

நம்பியேயன்பரன்றே நாதாந்தவீடடைந்தால
வெம்பிமுகம்வாடியன்பர் வேவார்பராபரமே. (௧௦௦)

பராபரக்கண்ணிகள் முற்றிற்று.

பட்டதொரு

இது.

சர்வசாக்ஷியாகிய தம்மெய்ஞ்ஞானாசிரியரது திருவருளுமாட்டப்படி இந்நூலாசிரியர் தம அடைவுகளைமன்னித்து தன்க்குத்தானே செட்டுயிர்த்திரங்குகின்றன ரெனக்குறிக்கின்றது.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பட்டதொருபாடுகளைப் பகரப்போகா
பதைத்தனையோபாழாகப் பரையைநோக்கி
விட்டகுறைபோய்மறைந்த வெறும்பாழுள்ளே
விதிமதியுமொன்றாகி விளங்கக்கண்டும்
இட்டபடியிருக்கவென் னெண்ணமெவரு
மிருவினையுண்டாகவதா விளைக்கிளைத்துக்
கிட்டாதுமின்னுமதைக் கிட்டும்போதுக்
கெடுமனத்தைப்பகைத்தறிவுங் கெட்டேனந்தோ.

ஈதென்னமாயம்.

இம்மொழியை முதலாகவுடைய இதனடியில்வருஞ் செய்யுளில் இந்நூலாசிரியர் தாம் தநுகரண புவனபோகங்களுக் கன்னியமாய்த் தனித்து யாவுந்தன்மயமாய் விளங்குமெல்லை, மேருவின் சிகரத்தினின்று பார்ப்பவர்க் கடிவாரத்திலுள்ள அலைநூரவோர் பட்டணத்துகோட்டைக்கொடிமரம் புலப்படு முருவத்தனையாத் தோன்றும், மனம், மாயை சம்பந்தத்தாலொழிவின்றி, தனித்த தம்மொடுசாவி போராடுகின்ற போராட்டத்தை நன்கு கவனித்து ஈதென்ன மாயமென வாச்சரியப்பட்டு அந்தோ அந்தோ எனதந்தரங்கத்தில் மெய்ஞ்ஞானாசிரியராய கண்ணுடைய வள்ளலார் சொல்லாமற் சொன்ன பிரணவசப்தமும் கட்டளைகளும் ஒருகாலும் வியர்த்தப்படாதென்கினும் திருவருளூழ்வலிப்படி அவர்செய்விக்கின்ற சூது யாதோ அறியேன் அறியேன். ஆகினும் மனமாதிகளின் பாசமொழிவுற்று நானே நானுத் தனித்து நிலைபெற்றெனவாத்மாசிரியரோடிரண்டறக்கலந்துய்தற்குக் காலஞ்சமீபிக்குஞ் சமீபிக்கும எனத் தன்னைத் தன்னுற்றேற்றுகின்றனரெனவுணர்க.

வெண்பா.

ஈதென்னமாயம் என்பின்றொடர்ந்துமனம்
போதவிழியாகிவளர் போராட்டம்—காதவொழி
வீணுகாவெங்கோன் விளைவிக்குஞ்சூதேதோ
நானுநிற்கவரு நாள்.

அழியாதால்.

என்னுஞ்சொல்லை முதலாகவுடைய வெண்பாவிற் கலித்தளை விரவி இலக்கணச்செறிவுற்றிருப்பதைப்பாராட்டி செய்யுளார்த் தப்பிரயோசனத்தையும் நூலாசிரியர் தம் நிட்டாசாதனைசெழ்வி லெழும்பி வளாவடிவில்வந்த தனிமித்தங் கொண்டுகூட்டிக்கொள் ளுதலையும் இகந்து நிர்த்தாக்ஷணியராய் வழூஉவுரைக்கப் புகாரறி வுடை யோரொன்னுந் துணிவால் இதினுமிதுபோலிய சிலவற்றி னும் புதிப்பித்தலைக்கையமர்த்தி களையவேண்டுமாவசிகம்பெற்ற சிலசெய்யுட்களுழி மாத்திரங்களைதற்கிடம்பெற்றியைகலாயிற்று.

வெண்பா.

அழியாதாற்போத மனந்தபிறப்பெய்தும்
வழியாமிதுமவுன வாக்கியம்—விழியாய
மணிப்பாம்பிருளின் மறையுமோநீமனமே
துணியாததென்ன தொழில்.

இதனுள் நூலாசிரியர் தம்மனத்தை முன்னிலைப் படுத்திவிளித்து, நீ, உருவற்றொழியாது விளைத்துக்கொள்ளு நின்போதத்தால் அனேகபிறவிகள் வாய்த்தற்கேதுவாகின்றது. இதே எஞ்சற்குரு நாதனது மௌனவாக்கியமெனவும், விரிந்தபுவன போகங்களைத் தன்னுட்சுருக்கி யமைத்துக் காட்டுந் தாப்பணம் போன்ற நேத்திரத்தையொத்த மாணிக்கத்தா லுருப்பெற்ற உயிர்ப்பாம்பொன்று இருட்கண்மருண்டு மறைதற்பெறுமோ மறையாதென்பது நிற்குப்புலப்படுகின்றதே, புலப்பட்டும் என் திருமுன்னர் நீநாமருபமற்றொழியாதின்னு முருக்காட்டித் திரிவதென்னைவித வேற்பாடென வினவினானெனவுணர்க.

என்னதான்

கீர்த்தனம்.

இராகம் புன்னாகவராளி ஆதிதாளம்.

பல்லவி.

என்னதான் படித்தாய் பாழ்மனமே ?-நீ
என்முன்னே யேனெதிர்த்தாய்.

அநுபல்லவி.

தன்னையறிவாயபின்பு தனக்குத்தானே தா னுவாய்
உலகினையொழிக்காதென்னை யுற்றுற்றிங்கேன்விழித்தாய்—என்.

சரணங்கள்.

முப்புரமெரிந்து போச்சே - இது
மீளாவக்கினி யாச்சே
கற்பூரமாமொரு பேச்சே - அதை
கண்டுகொண்டிடில் பொங்காச்சே என்ன.(௧)

கண்டுநீகொள்ளொரு பேச்சே - வெறுங்
கட்டுக்கதையல்லோ மூச்சே
பெண்டுபிள்ளைக்கூட்ட மாச்சே - அதை
பேணவேவில்லாமற் போச்சே என்ன.(௨)

பஞ்சதன்மாதனையென்னும் பேச்சே - அதை
பகர்நான்மறையேசாக்ஷி யாச்சே
அஞ்சமனம்நீபேய்ப் பூச்சே - யென்னில்
வாழ்கமறையாதென் சேச்சே என்ன.(௩)

ஆலவிடானலும் தாயே - மூனை
மூளுஞ்சுழியென்னும் ஓயே
காலவிருவான காயே - உன்னைக்
கண்டுகொள்விளையாட வாயே என்ன.(௪)

நிலவறிவாய் மனப் பேயே - என்னை
நீயினி விட்டோடிப் போயே
சொல்லுவோன் வந்தாலோ நாயே - உன்னைக
கூட்டுவான்வீட்டினி லேயே என்ன.(௫)

வேதமபடித்தென்ன பேறே - மூல
வீட்டையறிந்தினி தேறோ
நாதவொலிகேட்டில் கூறே - மோன
நாந்தாக்கென்னுமன் பேறே என்ன.(௬)

மூலவீட்டிலேங்க ரத்தான் - சுழி
முனையாயெழுந்தருப்பு ரத்தான்
காலனுவந்ததே குறைதான் - தன்னை
கண்டபின் வேதாந்த முரைத்தான் - என்ன. (எ)
எப்பாரும் போற்றவுந் தேனே - யாகி
யெழுந்து வந்தானேயெங் கோனே
ஒப்பில்லாச் சம்பந்தன் றானே - வள்ளல்
உருவாகி வந்ததும் நானே - என்ன. (அ)

கீர்த்தனம் முற்றிற்று.

அன்றமமார்.

பஞ்சாத்திநமாலை.

ஆசிரிய விருத்தம்.

அன்றமமாராடிபணிய தொண்டர் ஜயஜயவென்ன
வகிலமெழு மண்டலமெலாம்
அருள்புரிவை யென்றென்ற கிறைசப்த மொழிமுறைக
ளண்டாண்ட ரண்டமுருக
நின்றபயமென்றுகை கூப்பவும்மௌனமாய்
நிர்விஷப வானந்தமாய்
நீராழிபோலவா காயநிலைபோலுமாய்
நிறைவுகுறை வற்றபொருளாய்

என்றுமாய்நின்றதெது ஈதெனுமறிந்ததெதி
ரண்டறவிருந்த தெதுவோ
இனியொருமனப்பேயென் றென்னென்னெதிர்ப்பதே
தேதுநீ யானுவதோ
கன்றைதாய்தேடிமுலை யூட்டுவதைகண்டுமெனை
கைவிடுவதேது கண்டாய்
கருணைவிழிபாவிநிறை யறிவிலருளறிவிலெழுங்
கணைனுங்க ளுடையவளலே. (க

ஒன்றுபொருளென்றவறி வென்றுமுனையன்றியே
யுலகமிசை வேறுமுளதோ
வுளவெனவிருந்தமன மேதுன்னையல்லாது
வுயிர்விடுக்குங் காலனாய்
நின்றுமபவிந்த்ர ஜகஜாலமுமனந்தமாய்
நெறிகாட்டி குறிகாட்டவும்
நெக்குநெக்குருகிவிழி நீர்பொழியநைந்துனன்
னெஞ்சந்துடித் தலறவும்
என்றுமாய்நின்றதே தறியாதவன்மனென்
னிதயமலருதய குருவா
யேதேதுமகலவருளாழ்வாய்மடுத்ததித
வேகாந்தத் தென்றுய்வனோ
கன்றையெதிருற்றதா யென்னவுனதடிமையை
கடாக்ஷிப்ப தென்றுபுகலாய்
கருணைவிழிபாவிநிறை யறிவிலருளறிவிலெழுங்
கணைனுங்க ளுடையவளலே. (

வயிறொருபுறத்தே யிழுக்கவுந்தீச்சுழிஇ
வள்ளலே யென்றெரிகவும்
வருத்தமறியாமனப் பேயுடன்போராடல்
வாயாலுஞ் சொல்லமுடியா
துயரொருபுறத்தேயிழுக்கவும் பொறியைந்துஞ்
சூதாயெதிர்த்து நின்றும்

தோயுமோனாந்துபுலவேட்ர்க ணிமைப்போதுந்
   துலையாவழக் காடியும்
பயமொருவனிடைவிடாப் பதறிவிழுமான்போல
   பார்த்துசெக் கலித்துநின்றும்
பநிபாவிகுதனெனுஞ் சண்டாளக்கோவியோ
   பஞ்சுபோ லெனையெரித்தும்
கயவனினும்புன்மையான் பொல்லாப்புழுக்கூட்டை
   காப்பதோ நன்றுபுகலாய்
கருணைவிழிபாவிநிறை யறிவிலருளாழிவினெழுங்
   கணைனுங்க னுடையவளலே, (௬)

அறிவதுமழிந்துமனம் பகைகொண்டிருக்கவுனை
   யர்ச்சிப்பதெந்த விதமோ
அருணடங்காணுது பொருளிடந்தோணு
   தகங்குளிர்வ தெந்தவிதமோ
பொறிவிழிதிரிந்துழற் போதமுமழிந்தருட்
   புலமறிவதெந்த விதமோ
பொருட்பூலம் பூரணாநந்தமோ மெயினுட்
   புகாநின்ற தெந்த விதமோ
தறிபோலுமிண்டனே தானிலாதொன்றிலேத்
   தானுகா தெந்தவிதமோ
தமியனுட்குண்டலித் தத்தளித்தாடலுந்
   தணியாததெந்த விதமோ
கரியுரித்தாண்டவா கோடிகோடென்றவெனை
   கைவிடுவதெந்தவிதமோ.
கருணைவிழிபாவிநிறை யறிவிலருளாழிவிலெழுங்
   கணைனுங்க னுடையவளலே. (௭)

பேய்மனதினேடு* குறள் பேசாதிருக்கவும்
   பிரபஞ்சமாயையோடு
பித்தம்பிடித்துநட மாடாதிருக்கவும்
   பேச்சற்றவாநந்தமும்

* குறள் - திருக்குறள்.

தாய்போலிருந்துமெனை தாண்டாதிருக்கவுந்
தாக்கற்றபூரணமதே
தள்ளிதிரிபுடியெனவும் விள்ளாதிருக்கவுஞ்
சாதனசதுட்டயமதும்
நேயவருளாகியதை நீங்காதிருக்கவும்
நெறிபேதவிபரீதமும்
நிதியானதானநிதி களையாதிருக்கவும்
நெஞ்சும்பதைப்பற்றதாய்
காயவர்காயநிலை போலவுனதத்திதங்
கவர்வதறியாவறிவிலோ.
கருணைவிழிபரவிநிறை யறிவிலருளறிவிலெழுங்
கணைனுங்கனுடையவளலே. (௫)

பஞ்சரத்நமாலை முற்றிற்று.

நாடித்திரிந்து

இது. பரகுருவாம்பரா பரத்தொடுகிளத்தல்

பராபரக்கண்ணிகள்.

நாடித்திரிந்தறிவும் நாணிழந்ததல்லாமல்
பாடித்திரிந்தமனப் பகையேன்பராபரமே. (௧)

பித்தம்பிடித்ததொரு பேயாட்டிலென்னபயன்
சுத்தவருளென்றே சொக்கும்பராபரமே. (௨)

பட்டுபெட்டுநொந்தறிவும் பாழாகிப்பாழ்மனமுங்
கெட்டுவிட்டவென்குறையைக் கேளாய்பராபரமே. (௩)

ஆதாய்ப்புலவேடர் சுற்றிசுற்றியென்றனிடம்
வாதுபுரியுமந்த வழக்கேன்பராபரமே. (௪)

குண்டலியாய்நின்றகத்துட் கோரணியின்கூத்தாட்டை
கண்டுங்கதறிநின்றேன் கண்ணேபராபரமே. (௫)

தீரவிலையேவினையுந் தீர்ந்துசுழியாக்கினியில்
நேரவிலையேயென்றன் நிலைமைப்பராபரமே. (௬)

நன்னெஞ்சுருகிக் கனிந்திருக்க வைத்ததெல்லாம்
என்னையறிவதற்கே யென்றோ பராபரமே. (௭)

ஆட்டாதேயென்றனைநீ யாட்டியடியார்கண்முனர்
காட்டாதேவினையெனக் கண்ணே பராபரமே. (௮)

தோற்றுவித்துந்தான்றுன்னை சுற்றுஞ்சுழல்வண்டாய்
ஆட்டிவைப்பதென்னை யழகோபராபரமே. (௯)

ஏதுந்திருவருளென் றெண்ணியருளுள்ளடங்கும்
போதம்பதையாதுவைத்தாற்போதும்பராபரமே. (௧௦)

வந்தடைந்தேனின்பதமே வாய்க்கவுபதேசந்
தந்தேயெனக்கைவிடவுந் தகுமோபராபரமே. (௧௧)

தானிருந்தவீட்டினிலே தப்பாதுமாயைநிற்கும்
தேனுணர்ந்தயோகர்கட்குத்தெரியும்பராபரமே. (௧௨)

உயிரோம்பிரா யுளமூறிந்து போனாலென்
வயிற்றிறையாநந்தமுதம் வருமோபராபரமே. (௧௩)

மோசஞ்செயாமலெனை முழுதுங்கைதூக்கிவிட்டால்
பாசமொழிந்திடுங்கண் பாராய்பராபரமே. (௧௪)

ஐயாவடிமைக்கா யருளுந்தயவெற்பினின்முன்
கைவைத்திழுப்பதுநின் கடமைப்பராபரமே. (௧௫)

என்னவென்னகண்டித்திங் கேங்கிமங்கிக்குங்கிசொன்ன
அன்னதறியாத்தனைக் கழகோபராபரமே. (௧௬)

இழுத்துவினையைப்பறித்திங் கெனைவெளியில்விட்டபின்பு
அழுத்தமுளநெஞ்சமுமக் காமோபராபரமே. (௧௭)

சும்மாயிருக்காமற் சூதாயெனைப்பிரித்தால்
எம்மாதிரியுஞ்செய்வதென்னே பராபரமே. (௧௮)

கைம்மாறுனக்கொன்றுங் காணாமையினாலோ
நம்மைவிட்டுமெல்ல நடந்தாய்பராபரமே. (௧௯)

சொல்லாதெல்லாஞ்சொல்வேன் சூசியமாகினமவுனை
கல்லாதொருவழியில் கற்றேன்பராபரமே. (௨௦)

பொங்கபொங்கவாநந்தம் பொங்கியருண் மூட்டிவிட்டால்
எங்குந்தெரியாதிருப்பேன் பராபரமே. (௨௧)

ஆநந்தப்பாலதனை யண்ணாக்கி னன்மடுத்தாற்
றானந்தம்பாடித் தழைப்பேன்பராபரமே. (௨௨)

சருவபரிபூரணமாய்த் தாக்குமாநந்தவெள்ளம்
பருவம்வந்தார்தமக்கே பாயும்பராபரமே. (௨௩)

பார்த்திமையாப் பார்வைதனிற் பதினாலுலகமெங்கும்
கோர்த்திருக்குமோனவின்பங் கொடுப்பாய்பராபரமே. (௨௪)

திருவருளிற்றான்மறைந்து தெளிந்துதெளிந்தானந்தப்
பொருள்மறைக்கநீயுமெனைப் பொறுப்பாய்பராபரமே. (௨௫)

சற்றேமனமிரங்கித் தாய்மலர்த்தாட்டாண்மறைக்க
கற்றபலநூல்களெலாங் கணக்கோபராபரமே. (௨௬)

போதப்பகைப்பெல்லாம் பொய்யாக்கிப்போய்மறைந்தோர்க்
கேதுகுறையென்றே வெழுந்தாய்பராபரமே. (௨௭)

கட்டிப்பிடித்திடவுங் கண்ணேயருளமிர்தம்
எட்டிக்குடித்திடவு மின்பம்பராபரமே. (௨௮)

சராசரமுந்தானாகித் தாங்கமுடியாமலன்றே
கரபாத்திரமேந்தக் கற்றாய்பராபரமே. (௨௯)

பாற்கடலாமாநந்தப் பாற்கடலும்பொங்கிவிட்டால்
யார்க்குந்தெரியா தமர்வேன்பராபரமே. (௩௦)

கட்டிகட்டிநெஞ்சங் கனிந்துகனிந்தருளில்
எட்டிஎட்டிநான்மறைவ தென்றோபராபரமே. (௩௧)

அம்மம்மாவென்று அனந்தவுருக்கொண்டழுதேன்
இம்மாத்திரந்தெரியா தென்னோபராபரமே. (௩௨)

ஐயையோகைவிடுத்திங் கியாருமறியாதவழிச்
செய்வதென்னையானுமென்ன செய்வேன்பராபரமே. (௩௩)

பிதற்றிப்பிதற்றிமனம் பித்தாகிச்சோர்ந்துவிட
அதட்டியெனைக்கைவிடவு மாமோபராபரமே. (௩௪)

ஐயையோவென்னைநீ யறிவாயேயானுமுனை
வையமெலாந்தேடி மடிந்தேன்பராபரமே. (௫௫)

வாயினாற்பேசும் வகையறியேன்கோடிசன்மந்
தோயாதுதோய்ந்த அதைச் சொல்லாய்பராபரமே. (௫௬)

எடுத்தெடுத்து சொன்னதெலா மெண்ணுமலின்னமென்னை
தடுத்தடிமைகொள்ளத் தகாதோபராபரமே. (௫௭)

பாராயோஐயா பதையாதிறந்தசுகந்
தாராயோவுள்ளந் தணிப்பாய்பராபரமே. (௫௮)

பட்டுபட்டுநொந்துளமும் பதைத்துப்பதைத்தழுது
கெட்டுகெட்டேனென்குறையைக் கேளாய்பராபரமே. (௫௯)

பொல்லாப்புலாலாம் புழுக்கூட்டையானெனவு
நல்லாய்ச்சுமப்பித்தாய் நன்றோபராபரமே. (௬௦)

சமபிமுகம்வாடித் தகைக்கவருளின்றியுனை
நம்பியுங்கைநழுவ னன்றோபராபரமே. (௬௧)

பொங்கபொங்கவாநந்தம் பொங்கவருளுண்மறைவாத்
தங்கவுமேநிற்குத் தகாதோபராபரமே. (௬௨)

தூராதிதூரமெலாஞ் சுற்றிசுற்றிக்காணுமற்
பாராதபார்வையொன்றைப் படைத்தாய்பராபரமே. (௬௩)

பாராதுபார்த்திருக்கும் பரப்பிரமப்பேரொளியில்
வாராதெல்லாமென்கண் வருமேபராபரமே. (௬௪)

திட்டிதிட்டிப்பார்த்துந் தெருத்தோறுமேயழுதும்
பட்டதெல்லாம்புன்சிரிப்பாய்ப் பார்த்தாய்பராபரமே. (௬௫)

கேடுகெட்டபாமுடலுங் கெடுமெனவுன்பொன்னடிக்கே
பாடுபட்டுப்போட்டுடைக்கப் படுமோபராபரமே. (௬௬)

தத்திதத்திப்பார்ழ்பிறப்பிற் சராசரமுந்தன்னதென்று
யத்தனஞ்செய்தாலேம னெரிவான்பராபரமே. (௬௭)

சூதையறிவாரவரோ சோதிமணிவாசலவழி
நாதவொலியாகியுள்ளே நடந்தார்பராபரமே. (௬௮)

பாதம்பூசிப்பதுவும் பஞ்சாக்ஷரமாமென்
றோதியுணரவருளுண்டாம்பராபரமே. (௪௯)

கண்கெட்டமாடாகிக் கருவிகளிலேமறைந்து
புண்பட்டனந்தசென்மம் புகுந்தேன்பராபரமே. (௫௦)

நடந்துதிருவருளாய் நான்மறைப்பேரொளியும்
அடர்ந்துலகெலாமறைவ தாமேபராபரமே. (௫௧)

தாம்தாமெனவுரைக்குஞ் சத்தியத்துக்குட்புறம்போய்
ஆம்ஆமெனவுரைப்ப தார்காண்பராபரமே. (௫௨)

பாதியுருப்பெண்ணும் பரமார்த்தம்பாதியென
பூதியத்திலொன்றாய்ப் புகுந்தாய்பராபரமே. (௫௩)

அருட்கூத்தைத்தேடிதனை யறியாமாயைதனில்
தெருக்கூத்தாய்ப்போகவுமே செய்தாய்பராபரமே. (௫௪)

இலையோதிருவருளென் றேங்கியழுதழுது
வுலையின்மெழுகாயுள்ள மோய்ந்தேன்பராபரமே. (௫௫)

பாடாதும்பாடிப்பரமேயென் றேங்கிநின்றுங்
கூடாவாழ்வென்றோ கொடுப்பாய்பராபரமே. (௫௬)

திடுக்கமேபித்தாகித் தேடித்திரிந்தருளை
யடுக்கவகையறியே னையாபராபரமே. (௫௭)

கண்காட்டிவிட்டுக் கலங்கவுங்கைவிட்டாயே
புண்காட்டில்யானும் பொறுக்கேன்பராபரமே. (௫௮)

போதும்பிறந்துழன்றேன் பொய்ந்நீர்க்குமிழியைப்போல்
யாதுமறியாதிறப்ப தியாங்சொல்பராபரமே. (௫௯)

வாதோடுகூதின் வகையறியார்க்குட்புறம்பாத்
தாதாவுமாகியருட்டந்தாய் பராபரமே. (௬௦)

எழுதியறியாதபொரு ளென்னுமறையோலமிட
அழுதழு துனைந்தே னறிவாய்பராபரமே. (௬௧)

கைதொழுகவாய்ப்பொத்திக் கண்ணீர்வடித்துருக
மெய்யெழுரோமஞ்சிலிர்ப்பமெலிந்தேன்பராபரமே. (௬௨)

நெக்குநெக்காயுருகி நீர்க்கடலும்பொங்கபொங்கி
யெக்காலங்கண்டுய்வே னெந்தாய்பராபரமே. (௬௩)

பார்த்தா லுயிரும பறந்திடுமேயென்றேங்க
சேர்த்தாற்றிருவடிக்கீழ் திடங்காண்பராபரமே. (௬௪)

பாராதிறந்துவிடில் பரிபூரணப்பொருளும்
வாராதோஐயாநீ வாராய்ப்பராபரமே. (௬௫)

இறந்தவிடமேயருளா யெப்பொருளுந்தாங்கிக்
கறந்தமுதமூட்டிவைப்பாய் கண்ணேபராபரமே. (௬௬)

தள்ளித்தள்ளிவிட்டாலுந் தயங்காவருளமுதம்
அள்ளியள்ளியூட்டியெனை யாளாய்ப்பராபரமே. (௬௭)

அருளேயருளேயென்றும் அம்மம்மாவென்றழுதும்
பொருளமறைத்தால்யான் பொறுக்கேன்பராபரமே. (௬௮)

இடித்தாலும்போகேனே யென்புகளெலாநொறுங்க
அடித்தாலுநின்னைவிடே னையாபராபரமே. (௬௯)

போனபின்பென்செய்வேனே போனபின்பும்பத்துசென்று
ஆனபின்புமிவ்வலைச்சல் ஆமோபராபரமே. (௭0)

கடிநாயின்குட்டிகள்போற் கணக்கிறந்ததேகமெடுத்
தடிநாடார்க்கென்னபுத்தி யறைவேன்பராபரமே. (௭௧

வெரிகொண்டுபொன்மேல் வெறிகொண்டலைபவனை
நரிகொண்டுபோவதுவே ஞாயம்பராபரமே. (௭௨)

பித்தம்பிடித்துபெண்ணின் பேரழலிலேவிழுவோர்
கத்திகத்தியேமனிடங் கதறுவர்பராபரமே. (௭௩)

தடிபோலிருந்துமண்ணைத் தன்னதென் போரையமன்
பிடிமண்ணையப்போகப் பிடிப்பான்பராபரமே. (௭௪)

மக்கள்சுற்றமென்று மகிழ்வார்தலைக்கடைகள்
துக்கவிர்த்தியென்றே துறந்தார்பராபரமே. (௭௫)

ஆணாகியன்னியப்பெண் ணாசைகொளுமூடர்பின்னா
ணாணமற்பெண்ணாய் நலிவார்பராபரமே. (௭௬)

பெண்ணாகிகற்பிற் பிரிந்தவர்கண்மென்மேலும்
எண்ணாதகாமுகரா யிறப்பர்பராபரமே.

இல்லம்பொதுச்சாவடியா யெண்ணியிருப்பவர்க்கே
நல்லவீட்டின்பம் நடக்கும்பராபரமே.

சுதந்தரங்கெட்டுச்சும்மாத் தூங்கியிருப்பார்தமக்கே
அதந்திரமானவரு ளமையும்பராபரமே.

கற்றவெல்லாம்பாழாகக் கைநழுவவிட்டார்க்கே
பெற்றவருட்செல்வம் வாய்க்கும்பராபரமே.

தன்னைமறந்துபின்பு சார்ந்ததையுங்காணார்க்கே
யன்னதருள்வீட்டி லழைக்கும்பராபரமே.

பொன்னைமடவாரைப் புகழ்ந்துவுன்னைநாடாரை
என்னேசெய்வாரெனமன்கா ணைந்தாய்பராபரமே.

கத்திகத்திச்சாகுங் கழுதைச்சனனமதாச்
செத்துசெத்துப்பின் னுஞ் செனிப்பார்பராபரமே.

உன்னையறியாதவர்க ளூராண்டிருந்தாலென்
என்னமுடிவிலொன்று மில்லைப்பராபரமே.

சொல்லவனந்தமறைச் சொல்லிறந்தசூக்ஷமதா
யெல்லைவெளியா யிருந்தாய்பராபரமே.

எல்லாமறிந்தறியா தெங்குநிறைந்தவனைக்
கல்லாவழிச்சென்றே கற்றார்பராபரமே.

பார்த்தும்பலவிதமாய்ப் பல்லுயிருங்கூடுமொரு
நேத்திரமாயெங்கும் நிறைந்தாய்பராபரமே.

அறிவேயறிவின்பே ராநந்தமேமோன
முருவுருவென் னுள்ளத் துயிரோபராபரமே.

தத்துவமேதற்போத சந்தேகநீங்கவருள்
உற்பவமேயென்னென் றுரைப்பேன்பராபரமே.

பொறியேபுலனேயைம் பூதபேதத்தையும்
அறிவான்மறைந்தெழுந்த வையாபராபரமே.

சத்தேயருள்வடிவே சட்சமையத்துட்புறம்பே.
சித்தேயாநந்தச்செந் தேனேபராபரமே. (கூக)

கருவேகரு விக்கரணங் காணப்பெருவெளியின்
உருவேயுருவுள் ளொளியேபராபரமே. (கூஉ)

இந்திரியமோனத் திருப்பேவடிவனந்தம்
அந்தரியாயெங்குநிறை வானாய்பராபரமே. (கூஙு)

தூரப்பொருளேதூ ராதிதூரம் இமையாப்
பார்வைப்பொருளேநீ பாராய்பராபரமே. (கூச)

மனத்தினெடுங்கூடி மாளாவகைக்குணருள்
குனித்தோடுமென்னைக்கை கொள்வாய்பராபரமே. (கூரு)

கூட்டாயருளுதயங் கொள்ளைகொள்ளவாநந்தந்
தேட்டாயிருந்திடவே செய்வாய்பராபரமே. (கூசு)

பார்த்திமையாவாநந்தம் பாவுஞானத்தின்வழி
சேர்த்தென்னைக்கைகொடுத்தாட் டேவேபராபரமே. (கூஎ)

மரியாதிருக்கவுமே மாயாமருந்துன்னை
வரமாயெனக்கருள வல்லாய்பராபரமே. (கூஅ)

தானேதானாயிருக்குஞ் சத்தியத்துக்குட்புகுந்து
நானேநானாயிருக்க நல்காய்பராபரமே. (கூகூ)

தானேதானாகவழி தானறியாவாறமைத்து
நானேதானாகவரு- ணடத்தாய்பராபரமே. (க00)

பராபரக்கண்ணிகள் முற்றிற்று.

இது சுகோதயாதாரமாகிய-பராபரப் பிரமத்தோடிந் நூலாசிரியர் இரக்கத்தோடுரைக்கின்றதைவிளக்குகின்றது.

கீர்த்தனம்

இராகம் - தேசிகதோடி. ஆதிதாளம்.

பல்லவி.

இனி பொறுக்கேன்சுவாமி - நின்ஜோதியில்
இடந்தாரும் சுவாமி.

அநுபல்லவி.

தனித்துப்பிறந்தசன்மஞ் சதகோடியாயிருந்த
வனிதைசுகமறுக்க வந்துன்றனை யடைந்தேன் இனி

சரணங்கள்.

கண்டவெல்லாம்நீயே சாக்ஷி - இன்னம்
கண்டுமிருப்பதென்ன மாக்ஷி
பண்டைப்பழங்கதையே- தாக்ஷி - அதைப்
பார்த்துந்தாராமலிருப்பதேதோ காக்ஷி. இனி (௧)

போட்டுவிடுமுன்னிந்த தேகம் - நின்
பூரணாநந்தோதய மேகம்
நாட்டியருளுருவாம போகம் - உண்டு
நாதாந்தவீடுறுதகேவக சோகம். இனி (௨)

எடுத்தபிறவிகளிற் றத்து - அதை
யெத்தனையென்றுரைப்பேன் ஒத்து
தொடுத்தகாரணாநந்தோதய வித்து - இன்னந்
தொடர்ந்துமூடாதென்னமோ அறியேன்சித்து. இனி (௩)

கன்மமாயைக்கண்ணியிற் பட்டு - ஏழை
கவ்வுஞ்சென்மங்களை விட்டு -
நன்மையாநந்தபூரணம பட்டு - பர
நாதாந்தவாசலின்முன்படித்தொட்டு. இனி (௪)

கீர்த்தனம் - முற்றிற்று.

பஞ்சாத்தின மாலை.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

கட்டினீயொரு தரங் கதுமாண்டுவிடின்மற்றை
கரணமொடு பொறியுமில்லை
கானனீர்வாழ்க்கையது மோனநிலையாகிடிற
காணுலக மில்லையில்லை

சுட்டியேயிதுவதாச் சுட்டற்றபோதினிற்
றுணைராஜ யோகமில்லை
சோம்பித்திரிந்துநட மாடிபிணமானபின்
சொருபச்சுபாவமில்லை
பெட்டியரவாகில்பொய்ப் போகங்களேதினும்
பிழையென்பதில்லையில்லை
பேதைமடவார்மையல் கின்பாலிருந்திடிற்
பேதவிருள் போதமில்லை
கர்த்தவ்யமென்னுநின் பத்மபாதாம்புயங்
கவர்வதறிய வறிவிலோ
கமலவிழிநிமையுளரு ளுதயஞ்செயும்பரம
கயிலைகண்ணுடைவள்ளலே. (க)

சிந்தைநைந்திடுபோழ்து வந்துகைத்தரவுஞ்
சிதம்பாவி ரகசியங்கட்
டேடியுங்காணாது சித்தத் துறங்கவுஞ்
சிவஞான வொளிதீபமாய்
எந்தையறிவாகவும் பந்தவூழ்வினையெலாம்
என்றுமில்லாதேகவும்
எங்கெங்குமொளிபாவி யங்கையருளாடவும்
எண்ணுமவேபாடவும்
துங்கமொடுபுந்தியது மங்கங்கிலாதாகி
துருவவெளிதானேடவும்
துணைராஜயோகமது தொந்தித்துநிற்கவுந்
துறவுநன்னிலைகூடவும்
கந்தமலரொக்குமாறெந்தைகாந்தாமெனக்
கவர்வதறியாவறிவிலோ
கமலவிழிநிமையுளரு ளுதயஞ்செயும்பரம
கயிலைகண்ணுடை வள்ளலே. (உ)

வஞ்சமனதேர்டவும் கொஞ்சவருளாடவும்
வஸ்துநிலையுங் கூடவும்

வந்தமலபந்தமது மெந்தைகுருசிந்தையால்
  வந்தவழியே யேகவும்
தஞ்சமெனவிட்டகுறை தொட்டுமுன்காட்டவுந்
  தாயாகிதந்தையாகித்
தாக்கற்றபூரணந் தான்றானேயாகவுந்
  தத்துவப் பேய்களான
சஞ்சிதமதஞ்சியேசாகதத்போதந்
  தாரதலம் தேழடங்கத்
தாமென்னுமோர்மொழிக் கர்த்தமவேறுள்ளதோ
  சகலஜீவாத்ம நிறைவே
கஞ்சனுளாகுமுன் கெஞ்சாதெடாவெனநீ
  கவர்வதறியா வறிவிலோ
கமலவிழிநிறையுளரு ளுதயஞ்செயும்பரம
  கயிலைகண் ணுடைவள்ளலே. (௬)

புலமையெனவித்துவம் பொய்ப்பட்டுபோகவும்
  புலவேடர்கட்சாகவும்
புரையானமாமாயைப் புண்ணாகிநோகவும
  பூரணப்பொருளுண்மையே
வலமிடந்தாமேயென வந்துசுழியாகவும்
  வகைமவுனவட்ட மீதோ
வள்ளலீயாடவும் மகுடமண்டலீகர்கள்
  வாய்பொத்தி கைகூப்பவும்
நிலைமையனுபூதியது நேயத்துளாகியரு
  ணிறையுஞானபிடேகம
நிகரற்றவாநந்தபோகசுகமாமின்ப
  நிர்விகற்பத்தாழ்கவும்
கல்கமுடகாமொழிக் குழறியழுதழுதுகண
  கலங்கவறிவுள்ளாகியே
கமலவிழிநிறையுள ருளுதயஞ்செயும்பரம
  கயிலைகண் ணுடைவள்ளலே. (௭)

பாராதிபூதமுத லாதமொடுகீதமும்
பகாரியவான்கொழுந்தே
பற்பலவிடங்களுங் கற்பனையிலுற்பனம்
பார்க்கரியமௌனவடிவே
தீராதபலசமைய வாதிபலர்கூவியுந்
தேடரியஞானமுடிவே
தீவிரதரத்திலெழு மன்பர்கண்ணீரதிற்
றிடமெனவெழுந்த குருவே
போராதிமனமாயை யேதேதுசெய்யினும்
போகுமொரு சப்தமொழியோ
புகலரியபூரணவிலாசமாயெங்கினும்
பூத்தவொரு நாதவித்தே
காராதிமுகிலுமொளி பரவுமோர்தீபமே
காணரியவறிவிலறிவாய்
கமலவிழிநிமையுளரு ளுதயஞ்செயுமபரம
கயிலைகண்ணுடைவள்ளலே.

பஞ்சரத்நமாலை—முற்றிற்று.

தம்மெய்ஞ்ஞானாசிரியரோடிரந்து பாவிக்கினத்திய வீந்நூலாசிரியர் தம்மோடொத்துமைப்பட்டு வராமனத்தைக்கடிந்து இனிவற்புறுத்துகின்றனரெனவறிக.

நீயேநான்.

வெண்பா.

நீயேநானென்ற நிலைமையறிபேய்மனமே
நானேதானென்றுனென் னாதாந்தன்—றானேதான்
நீயானையென்ற நிலையறியநீஞ்ஞுதி
யானய்நீ தானேயழி.

கீர்த்தனம்.

இராகம் ஆகிரி — அடதாளம்.

பல்லவி.

மனமேமனமே? நீ தூங்கவென்றுலொரு
மருந்துண்டு சொல்வேனே.

அநுபல்லவி.

தினமதவரவொரு செய்கையதொன்றுண்டு
நினைவசையாவரு ணிலைமையில்நின்றிடே. (மனமே.)

சரணங்கள்.

பேசாதிருந்திடிற் பிழையொன்றுமின்றியே
பேறானவீட்டின்பப் பிரளயவாழ்வெய்தும். மனமே. (௧)

பாராதுபார்த்திருப் பாருணர்விழியதும்
சேராதசின்மயா நந்தத்தில்சேர்த்திடும். மனமே. (௨)

சத்துச்சித்தாமதைத் தவிர்ந்துநீயாநந்த
முத்திசொரூபத்தின் மீளாதிறந்திரு. மனமே. (௩)

பிரமத்தொருவிழி பிறந்திடுமாங்கதை
கருமனமேநீயுங் காணாதிறந்திரு. மனமே. (௪)

இறவாதிறந்திட வெங்கோனருண்மூடிற்
பிறவாவிழியதைப் பெற்றிடுமுத்தியே. மனமே. (௫)

எத்தனைசென்மத் திடைந்துந்தொம்பதமேகா
பித்தமேநீசற்றும் பேசாதிறந்திடு. மனமே. (௬)

சோதிசுகாதீதசுகியெனும் பேர்வந்தால்
ஆதிமறைப்பொருள் அருள்விளையாடுமே. மனமே. (௭)

கீர்த்தனம்முற்றிற்று.

எத்திசை.

பராபரக்கண்ணிகள்.

எத்திசையுந்தானா யியங்கவருளுண்மறைய
முத்திசைக்குமென்னை முடித்தாள்பராபரமே. (௧)

சுத்தவசுத்தமெனுந் துக்கத்தைவிட்டேறி
நித்தியமேநானெனநீ நிறுத்தாய்பராபரமே. (௨)

தடையற்றவாநந்தந் ததும்பித்ததும்பியெழ
கொடிகட்டிக்கொண்டெனைக் கொள்ளாய்பராபரமே. (௩)

பட்டுபட்டென்றோடுநீ பாசக்களிம்பவற்றை
சட்டைசெய்யாதததி சயந்தான்பராபரமே. (௪)

எட்டெட்டுந்தாண்டியே யெட்டாசித்திதனில்
விட்டெனையுநீயுமுள்ளே விளங்காய்பராபரமே. (௫)

தத்துவமுஞ்சந்தயமுஞ் சான்றோர்க்கிலையென்றே
யெத்திசையுமாமறைக ளிசைக்கும்பராபரமே. (௬)

அனந்தபிறவிக்கிரியை யனுட்டித்தயர்ந்ததெல்லாந்
தினைப்பொழுதின்மாற்றுவதுன் றீக்ஷைபராபரமே. (௭)

தேசதேசங்களெலாந் தேடியயர்சரிதை
பாசமறுக்கவருட் பார்த்தாய்பராபரமே. (௮)

எண்ணரியகோடியுக மெய்நின்றயோகநிலை
கண்கொண்டபின்னதையுங் கடந்தாய்பராபரமே. (௯)

எல்லாஞ்சகச்சாலம் இறப்பிறப்பும்போய்மறையக்
கல்லாவனுபூதி கற்றாய்பராபரமே. (௧௦)

சொல்லரியஞானச் சுகவெளியிலேயிருக்க
நல்காய்பரசொருப ஞாயம்பராபரமே. (௧௧)

கள்ளமனமொன்றைக் கட்டுவனோவெளியேன்
அள்ளித்துடித்துநின்றேன் சும்மாப்பராபரமே. (௧௨)

கடற்குத்துறையில்லாக் காரணமாமென்னிதயக்
குடலைநிறைந்தெழுந்த கோனேபராபரமே. (௧௩)

அரிமாலயனறியாக் காரணமாநின்றதெது
அரியதெதுவதுநீ யானாய்பராபரமே. (௧௪)

கற்றதனாலென்னபயன் கள்ளமனமேலாகும்
முற்றுமுணர்ந்தவர்க்கு மூலம்பராபரமே. (௧௫)

வித்தாய்முளையாய் விளைந்தெட்டெட்டுத்தொகையின்
சித்தாகியன்றோ திரிந்தாய்பராபரமே. (௧௬)

லிங்கத்தினுள்ளேயே லீலைபுரிந்தவுனை
அங்கத்தினுள்ளே யறியார்பராபரமே. (௧௭)

அண்டபுவனமெல்லாம் ஆடத்திருவருளாய்க்
கொண்டகுறியாரறிந்து கொண்டார்பராபரமே. (௧௮)

வேதமுதலாகி விளைந்தசெந்தேனமுதை
போதவொழிவிலன்றோ பூண்டேன்பராபரமே. (௧௯)

ஆறுறுந்தாண்டி யான்பதிக்குமப்பாலே
பேறாசாநின்றதுன்றன் பெற்றிபராபரமே. (௨0)

கல்லாவறிஞருளங் கற்றறியாஞானமுதல்
எல்லாப்பொருளெவையு மிருக்கும்பராபரமே. (௨௧)

தன்னையறிந்தபின்னர் தானேதானாயெழுந்தும்
என்னையறிவித்துள் ளிருந்தாய்பராபரமே. (௨௨)

எக்கோடியாயிருந்தும என்னையறியாவினையில்
அக்காலமின்றுமுத லயர்ந்தேன்பராபரமே. (௨௩)

நினைந்தாற்பெருமூச்சு நெக்குருகிநீர்வடித்து
தினந்தானழாதகுறை தெரிந்தாய்பராபரமே. (௨௪)

தாயினுமேலானவொரு தருமதயாநிதியே
வாயிலுனையாமோன வாழ்வேபராபரமே. (௨௫)

கரும்பேகனிரசமே கற்கண்டேகண்காணாப்
பெரும்பேரின்பப்பெருக்கே பேறேபராபரமே. (௨௬)

ஜோதிசேர்மணியாகித் தூண்டாவிளக்காகி
கதிவேறுதானுனைக் கண்டேன்பராபரமே. (௨௭)

என்னைமறைத்தபொருளீதென்றெனக்குரைத்த
அன்னையுனக்கென்னகைம்மா றருள்வேன்பராபரமே. (௨௮)

கிருபைக்கடலேசொற் கேழ்வியிலாப்பேரின்பே
அருமையெவருணைபா ரறியேன்பராபரமே. (௨௯)

கண்ணேகண்ணுண்மணியே கடன்மடையாநந்தமுதே
உண்ணென்றெனக்கூட்டும் உயிரேபராபரமே. (௩0)

உள்ளும்புறம்பே வுனையாப்பெருவாழ்வே
விள்ளவெழுந்தவருள் வேந்தேபராபரமே. (௩௧)

படவட்டமமன் கருத்தேபலபிறப்பின்கண்ணடிமை
திடம்பட்டதென்றோ தெரிந்தாய்பராபரமே. (கூஉ)

மலைமகளேயென்னுளமாய் வாழ்ந்தாளபிராமி.
கலைமகனுநீயுலகைக் கவர்ந்தாய்பராபரமே. (கூங)

குருவேரங்கையதந்தை கூறசசிவலிங்க
வுருவேயுலகனைத்துள் ளுயிரோபராபரமே. (கூச)

என்னென்றுதானுரைப்பே னென்னையின்றக்குள்ளமமான்
உன்னையன்றிவேறியாரென் றுரைப்பேன்பராபரமே. (கூரு)

குருவேபழனிகுரு கொத்தடிமைகொண்டநல்ல
ப்ருவமிதோநீதானே பார்த்தாய்பராபரமே. (கூசு)

ஏதென்றெடுத்துரைப்பே னெக்காலுமிவ்விவர்கள்
நீதிநற்பேர்நிலைக்க நிறுத்தாய்பராபரமே. (கூஎ)

சூதறியேன்யாதொன்றுஞ் ஜோதிவள்ளலின்னருளே
ஆதியந்தமின்றியென்னு ளமர்ந்தாய்பராபரமே. (கூஅ)

சுதந்தரந்தானுனைச் சொல்லிறந்தந்தானுனைய்
அதந்தரந்தானுகியமர்ந்தாய் பராபரமே. (உசு)

அண்ணலாய்வள்ளலா யருளாய்ப்பொன்னம்பலத்தே
கண்ணுடையாரென்றெனைக் கலந்தாய்பராபரமே. (சo)

அழைத்தாயெனையுள்ளே ஆறுறறிந்தவழி
பிழைத்தேனெனக்கேதும் பின்னேபராபரமே. (சக)

சூதொன்றுமில்லாத சுழிவீட்டிலென்னையருட்
போதனையுஞ்செய்தாய் பிழைத்தேன்பராபரமே. (சஉ)

பிடித்தேனொருமூச்சாய்ப் பேரின்பவீட்டினில்வாய்
மடித்தேனெமன்போய் மடிந்தான்பராபரமே. (சங)

பம்பரம்போலாடுமொரு பஞ்சாக்ஷரநடுவில்
எம்பிரானுகி யெழுந்தாய்பராபரமே. (சச)

சொன்னமொழியாதோ சொர்க்கமத்தியபாதாளம்
இன்னமுங்தேடவெங்கே யிருந்தாய்பராபரமே. (சரு)

மூலத்தெழுந்து முனைவிட்டுக்குட்புகுந்த
கோலத்தையார்தான் குறிப்பார்பராபரமே. (சசா)

மாகஷ்டமுன்றனுக்குமானிடனாய்நீவந்த
தேககஷ்டனென்னைத் தெரிந்தாய்பராபரமே. (சஎ)

ஆருறுங்காண்டி யறிவையருளுண்மறைத்தல்
வேறியாருங்காணு வெளியேபராபரமே. (சஅ)

எப்பாரும்பேசற்று மிருக்காதியோலமிடும்
அப்பாழ்வெளியா யமர்ந்தாய்பராபரமே. (சகூ)

சத்தியுகாரத்தின் றன்மயமாந்தீக்ஷைதந்தும்
எத்தையறிவானென் றிருந்தாய்பராபரமே. (ருo)

கொல்லாவிரதமெலாங் கொண்டுகண்டுபின்பெனக்கு
கல்லாவிரதங் கணித்தாய்பராபரமே. (ருக)

* மெள்ளமெல்லவிட்டென்னை மேடேறிப்போனதற்பின்
கள்ளமனத்தைவிடக் கண்டேன்பராபரமே. (ருஉ)

பார்த்தான்மனந்தானே பதினாலுலகமெங்குங்
கோர்த்தபடியிருண்ட கொள்கைப்பராபரமே. (ருங)

எங்கெங்கும்பார்த்தே னெறும்புகடையானைமுதல்
அங்கங்கிருந்ததட்ட வயர்ந்தேன்பராபரமே. (ருச)

எங்குநிலைகாணும வென்னையறியாவினையால்
அங்கமெரியவன லானேன்பராபரமே. (ருரு)

மெள்ளமெள்ளவக்கினியின் மீதேறிநிற்கவன்றோ
துள்ளிதுள்ளியென்பின் றொடர்ந்தார்பராபரமே. (ருசா)

மாயாமன்மாய்ந்து மயிர்ப்பாலமுங்கடந்து
தோயாதுதோய்ந்துவெளி தோய்ந்தேன்பராபரமே. (ருஎ)

வதைத்தெட்டுமெட்டா வதைந்தேன்சிவீட்டின்
சித்திவந்தோயானய நிறைந்தேன்பராபரமே. (ருஅ)

தோய்ந்தேன்சிவமயமே சுட்டறிவுங்கெட்டபின்பு
ஆய்ந்தமனமெங்கோ வறியேன்பராபரமே. (ருகூ)

---

* மெல்லவென்பது மெள்ளவெனவெதுகைநோக்கிவந்தது.

ஒருவார்த்தைகொண்டே யுலகெங்குந்தானாய்
மருவார்த்தையேமோன மானாய்பராபரமே. (௯0)

அருளாழிவாழ்க வனந்தாநின்றருள்வாழ்க
பொருளறிதல்பூர்ணப் பொருளேபராபரமே. (௯௧)

பராபரக்கண்ணிகள்முற்றிற்று.

ஆரணப்பொருள்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆரணப்பொருளைத்தானே யநுதினமோதியோதி
பூரணப்பொருளாகாமற் புலம்பிநாட்கழித்தேனையோ.

காரணக்குருவாயெந்தைகருத்தென்கணெழுந்தான்புந்தி
காரணன்செயுமாயத்தை நவில்கவாயில்லையெனக்கே.

நொண்டிசிந்து.

இராகம் நாதநாமக்கிரிகை ஏகதாளம்.

குழிப்பு.

தனதனத் தானனத் தானா தன
தானனத் தானதனத் தனதனத் தானா.

மனமெனும் பேய்க்குரங் கானான் - என்னை
  மாய்க்கவே வழிதேடி மறுரூப மானான்
சினமாமுலேவரபியெ திர்த்தான் - மூணை
  தீய்க்கண்புழுவாய்த் திகைத்துத் திரிந்தேன்
குணவதிகாரர்க ளொன்றே - அந்தக்
  குருட்டறிவென்போனுங் கூடவே சேர்ந்தான்
பணமுடிக்கப்பாலென் னையன் - என்னைப
  பார்த்தும்பாராது பதிவிருந் தானே
சொல்லமுடியாவோர் வம்பன் - முழு
  சூதனுடன்டம்பனுந் தொடர்ந் தொன்றாய்க்
கொல்லநினைந்தானே காமி - அந்தக்
  குருட்டறிவென்பவனுக் குறவான சாமி

பொல்லாப்புலன்களு மொன்றே - இந்தப்
புழுக்கூட்டையானென்னும் போதமு மொன்றே

கல்லாவிற்பால்கறந் துண்ணும் - அந்தக்
காமனேயேமனுக் காத்திருந் தானே
இல்லையெனக்கியாரு மில்லை - யானே
எடுத்தஜடலமிது வெண்ஜானு நஞ்சாய்க்
கொல்லனுலை மெழு கானேன் - யானே
கூடியிருந்ததிக் குழையுள் ளெறும்பாய்த்
கல்லாவிரதமாய் நின்றேன் - மற்றைக்
கரணங்களென்மேற்றுஜங்கட்டிக் கொண்டார்

பல்லதனைக் காட்டுகினு முண்டோ - பட்ட
பாடுகளைச்சொல்லமறை பார்த்து முண்டோ
இப்படியே யான கருவி - இது
எண்பத்துநான்குநூறா யிரமு முள்ளே
கொப்பெனவே ரூபகமானார் - அந்தக்
கோமுகனைக்கண்ட குறியத னாலே
கெற்பங்கலங்காம னின்றேன் - அந்நேர்
கெர்வமுங்கெட்டுப்பின் கேவல மானார்

பொற்படி பாதார விந்தம் - முடி
பூட்டியேயருளினில் கூட்டினது மல்லால்
பேசாதே பேசாதே யென்றான் - யானும்
பேசலாமென்றாலென் பின்னென்றுங் காணேன்
ஆசானுருவுயி ராச்சே - இந்த
அண்டபுவனங்க ளடங்கிய பேச்சே
கூசாதமேல்விழி யாச்சே - ஐந்து
கோசத்தின்வாழ்க்கையதுங் கேசா மாச்சே

நாசமாயேமனுயிர் போச்சே - ஐயன
நாதாந்தவீட்டினுள்ளே நடனமு மாச்சே
நடனவானந்தத்தைக் காட்டி - அந்த
நடுவீதிதனிலொரு கம்பத்தைக் நாட்டி

முடிமீதெழுகடலைக் கூட்டி - ஐயன்
முக்கியவாநந்த வமுதினை யூட்டி
படமானவீரோ மூலகம் - இமைப்
பார்வையில்வைத்துப் பதமதைச் சூட்டி
கடமழிந்தாலென்ன பேதம் - எங்கும்
கற்பிதமேயெல்லாக் கருநீயே யென்றான்
எல்லாஞ்சிவயகம வாச்சே - ஐயன்
எங்கேயோவென்னுமொழி யாளனும் பேச்சே
சொல்லற்றொருமொழி யர்ச்சே - அந்தச்
சூதறிந்தாலன்றோ துறவியு மாச்சே
கொல்லாவிரதத்துள் ளாச்சே - ஐயன்
கொள்ளைகொண்டானருட் கூத்தது மாச்சே
பொல்லாமனப்பேயும் போச்சே - அந்த
பூரணத்தெய்தவுங் காரண ணச்சே

கட்டிமனக்குரங்கு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கட்டிமனக்குரங்கொன்றை யென்பின்னேநீ
கைநழுவவிட்டுவிட்டாய் கலங்கியன்றோ
எட்டியெட்டிமுடியாமற் பாழ்படமனத்தோ
டிரவுபகலுலைமெழுகா யிளைத்தயர்ந்தேன்
சுட்டமனங்காணுத வருளிலாழ்த்தித்
தூங்கவைத்துப் பேரொளியின்சுடரையூட்டற
கெட்டியெட்டாவாநந்த மென்னுநந்த
மெங்குமறநின்றதெங்கோ னிச்சைதானே.

முன் - சிந்து

மயிர்சிக ராமோ வுயிர்தான் - இந்த
மகிதலமெல்லா மறைந்துபோய் நின்ற
கருவெளிகண்டவன் யாரோ - அந்தக்
காலனைக்காலா லுதைத்தவ னவேறோ

பூரணாநந்தோதயம்.

ஒருமொழியானதிக் கூறோ - அந்த
  உளவறிந்தாலன்றோ குருவெனும் பேரோ
பருவமுமில்லையோ பாரோ - அணுப்
  பறந்ததுபோற்பிறந் திறந்ததும் பேரோ
பற்பலநூல்களைத் தேடி - ஐயன்
  பதங்கிடையாமல்வீண் டருக்கங்களாடி
கற்பிதமாமனந்தம் பேடி - அந்தக்
  கணக்கெல்லாமனுநிகர் காண்பது கோடி
சற்குருசன்னிதியி னின்றான் - முன்னா
  தான்றானேமாண்டன்றோ சகலமும் வென்றான்
கற்படிகமாயிருந்து குன்றான் - அருட்
  காண்டத்திலாழ்ந்தியன்றோ கரையேறிச் சென்றான்
இப்படியென்னையென் னையன் - மெல்ல
  விழுத்துப்பரித்து விருவினைக் கூறால்
முற்பவநிஷ்காமி யத்தால் - என்றன்
  மோனசம்பந்தன் மொழிந்த மொழியை
கற்பகமென்னவே யெந்தை - யெனா
  கண்ணுடையவள்ளலே கையளித் தாண்ட
அற்புதத்தையென்னென் றுரைப்பேன் - யானே
  அறியாச்சிறுபயல் ஆநந்தத் துள்ளே
நெறியாயிருக்கவும் போமோ - அந்த
  நீச்சுநிலையில்லாத் தேன்மடை வாயில்
குறியாய்மடிக்கவும் போமோ - ஐயன்
  கூத்தேநடிக்கவுங் குறும்பே துடிப்பது
அரிக்குமுதலெழுத் தாமோ - அதின்
  அருத்தத்தையறிவதற் கோரிமை யாமோ
அக்குறியாயிருந்ததும் ஊமோ - சிவம்
  அதுசரியாயிருந்த அண்ணல்நீயாமோ தனதன

தொண்டிச்சிந்து-முற்றிற்று.

முத்தியெனும்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

குளகம்.

முத்தியெனுமுதலெழுத்தாய் மூன்றெழுத்தாய்
மூன்றிடத்து மோனவாழ்வாய்
சித்தவருணட்டங்கண்டோர்பெருங்கூட்ட
மெண்ணரிய சிதாநந்தத்தின்
மித்தையெலாந் தேனமுதாய்ப்பொழியவரு
ளாழ்கிறைவாய் விமலதேவாய்க்
குத்திரமேதொன் றிலாப்பேரிமையாய்ப்
பெரும்பேறாய் பேறாநந்தச்
சுத்தவமுதுண்ணமடை திறந்தொழுக
வாய்மடுத்துத் துய்த்துத்தேக்கி
பித்தனெனும் பேர்பெற்றார் பெரும்பேறே
பிறப்பறுக்கும் பேணுமாந்தர்
சற்றேனும்ாயமன மழியகுருநாயனெதிர்
தங்குங்காலை
எத்திசையுந்தானாகி யிருக்குமரும்
பெருவாழ்வு மெளிதிலாமே.

தத்துவவிளைவை.

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

குளகம்.

தத்துவவிளைவையெல்லாம்
தனித்தனிப் பிரித்துப்பார்த்தேன்
சித்தமுமொடுங்கியன்றோ
திருவிளையாடலாச்சே
உத்தமபுருடன்கோடிக்
கொருவனய்ஞானயோக

சுத்தனைப்பிறந்து மேலுந்
துறவையுந் தோய்ந்தகாலை
சித்தனுங் கணேசனுந்தி
தீக்ஷையோர் மொழியும்பெற்றால்
கத்தனுங்கயிலையானே
காரணக்குருவாந்தானே
முத்தனும் மோனதீத
மூர்த்தியாம்பஞ்சபூதப்
பித்தனையிருந்துஞ் சித்தைப்
பேசுவானேசுவானே.

தியாகி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குளகம்.

தியாகியீன்றுமூலை கொடுத்தமாது
தாரமெனுஞ் சிற்பரைக்குளுருவமாறி
சேயெனவுமித்தையதாய் பூமிமீது
தேடரியசத்தியரு ளுருவமாகி
நாயகத்திரிந்துமன்ப ரறியாவண்ணம்
நானிலமெல் லாம்பரவிநாதாந்தத்திற்
றோயாதுந்தோய் வதிலோ துரியாதீத
சூதானவெட்டவெளி தாண்டாத்தீப
...ணையாயிலுமமாமாயை மூலாதார
வ...ன்னிடுவான் பொருளாய்வளையொணாத
காயமெ... திமுத லெங்குந்தானுக்
கலந்தசித்தேசத்தாகிக் கருணாநந்த
பாயசமேசுரந்தெழு கடலும்பொங்கப்
பரமசுகமுத்திபெரும பாழுக்கப்பால்
ளேயவருண் ஞானவிழிபரவமோன
நிலைப்புமறைப்பற்றதெது வதுதானுமே.

கீர்த்தனம்.

இராகம் தனியாசி ஏகதாளம்

பல்லவி.

மூன்றெழுத்தான ஓ   மிந்த - மூம்
மூர்த்தியைமறவாதே
பாழ்மனமே   கோவிந்த - (மூன்)

அநுபல்லவி.

தானேதானுவார்   நம்பு - எல்லாந்
தணிந்துமே போவார்   பின்பு - ஒரு
கோனெனவாவார்   அன்பு - அண்ட
கோடிகளாள்வார்   பின்பு - பர   மூன் (க)

சரணங்கள்.

ஓமெனுமைங்கர   வத்து - அதில்
ஊனுருவாமெனுஞ்   சித்து - நடு
நாடுயிருமெனுஞ்   சத்து - இதை
நன்மையாய்ச் சேர்த்தொரு   மித்து - பர   மூன் (உ)

மூணெழுத்தாலே   பக்தி - முறை
முடியறிந்தாலோ   முத்தி - சிவ
ஆணெழுத்தாலேயே   சத்தி - இந்த
அகிலமுமானதே   தத்தி - பர   மூன் (ங)

ஆணும்பெண்ணற்றது   ஓமே - யெழுத்
ததிலுருவானது   நாமே - அதில்
தோணசத்திசிவகாமி   யாமே - இந்த
தொல்லுலகானதுங்   தாமே - பர   மூன் (ச)

ஊமையப்பனே   யுந்தி - யிதை
யொருவருமறியார்   நந்தி - குரு
ஆமையப்பனுஞ்   சிந்தி - தின
மடியவர்க்கடிமையாய்   வந்தித் - திடு   மூன் (ரு)

சொல்லவுமைந்தெழுத்   தாமே - அதைச்
சோதிக்கவோரெழுத்   தாமே - கிட்டிப்

புல்லவுமீரெழுத் — தாமே - பின்னும்
  பூரணமானதுந் — தாமே - பர மூன் (சு)
பேசவும்வாசிய — தாமே - நீ
  பேசாச்சுழியூசி — யாமே - சுடர்
கூசாவிழியதில் — போமே - ஐயன்
  குதிக்குங்கூத்தாங்கை — யாமே - பர மூன் (எ)
நாதாந்தவீட்டினில் — நின்றோம் - மறை
  நால்வந்துமறைந்ததுங் — கண்டோம் - அதில்
போதாந்தமானதை — விண்டோம் - பரி
  பூரணாநந்தத்தில் — சென்றோம் - பர மூன் (அ)

கீர்த்தனம் முற்றிற்று.

வாசியை.

கலிவிருத்தம்.

வாசியையுண்டு வளர்ந்தவுமையினைப்
பேசலாமென்னிற் பேச்சற்றுமோனமாங்
காசியைநாடிக் கலங்கிடுமானிடர்
தேசிகுண்டலியைத் தெளிந்திடாநந்தமே.

ஊவொன்று.

ஊவொன்று என்னுஞ் சொல்லை முதலாகவுடைய இதனடியில்வரும் வெண்பாவுக்கு இந்நூலாசிரியர் கருத்துப்பெருமிதத்தை [illegible]றுவல்ல சான்றோர்க் கினிமையுற விரிவின்றி ஏகதேசமாய்ப்புக[illegible]ணிபுமழி (சிவவாக்கியம்) "அகாரகாரணத்துளே யநேகநேகரூபமாய் [illegible]காரகாரணத்துளே [illegible]ருத்தரித்து நின்றனன்." ஆகிய சீவன்தான்சார்ந்துள்ள தேகமென்னு மட்பாண்டத்துக் கருவிகளிலொன்றாய் நாசிவழியாய் நிசுவாசப்பூரக மார்க்கத்தால் இடைபிங்கலைக்கண் மாறிநிருத்தஞ்செய்து சுழிமுனைக்க[illegible]டுஞ்சாமற்றஞ்சி நிற்பன். அவனை சாதனசதுட்டய முத்தர்களன்றி மற்றையோர் தெரிந்துக்கொள்வதொருபோழ்துமில்லை. அவ்ஆன்மஸ்வரூபனை யறிந்தவர்களுக் கியாதுகுறையுமில்லை என்னும்பொருளை யுள்ளடக்கிக்காட்டுகின்றது.

வெண்பா.

ஊவொன்றெழுந்த துருவாகும்பூதலத்தில்
ஆவொன்றிருக்க வலைவானே - னுவால்
இருபுறமுமாடி யிருப்பான்றெரியார்
குருவழிவார்க்கென்னே குறை.

அநுபவிக்கு.

வெண்பா.

அநுபவிக்குத்தான்சரியா மனந்தமறையோலமிடும்
தநுபவிக்குத்தான்சரியதாமே - என்வெனினும்
விப்பிரட்டனுனேன் வேந்தன்முன்னஞ்சென்று
தப்படித்தற் போலெனவேதான்.

(இ-ள்.) வேதாகம புராண இதிகாசங்கள் முறையிடுமெனில் அவைகளெல்லாம் உதயவொடுக்கமே சுவானுபவமெனில் அவைகளைப்பெறாது அபக்குவராகி மலபந்தத்துண்மூழ்கி அம்மலபந்தமே தானெனமயங்கி சந்தேகவிபரீத அசம்பாவனையை வெட்டியெறியும் நிதித்தியாகிய தன்னைத்தானென்றறியுங் குருமொழியே யொருமொழி. அஃதற்று எத்தனைக்கேயோதியும், பிரசங்கித்தும் அதனாற்பயனென்னையுளது? மதகர்வங்கொண்ட யானைமுன் சிம்மமெதிர்ப்படில் மருட்படுவதுபோல் சன்னிதானத்திற்கண்ணெதிர் நின்றோர், கற்றதெல்லாம்பாழாய்த் தன்னையறிந்து அழுதுஞ் சிரித்து மறிவாநந்தத்தெய்துவர். அவற்றைப்பெ[illegible] அபக்குவர்கள், அநுபவியைப்போல் ஞானாநந்தத்தைப் [illegible]சங்கித்தலெவ்வாறெனில், விப்[illegible]னும் கார[illegible]க்காரன் ஒரு அரசனெதிர்ச்சென்று தான்முன்க[illegible] காரடிநடவாது கின்னரிவாசித்ததுபோல் பக்குவர்களது நால்கலையாய்ந்துந் தங்களால் அநுபவங்கூடாமற்போய், காரடிசெய்யாது பேரிகைகொட்டுவான்போல், ஞானாநந்தத்தைப்பெறாதிருந்தும் பெற்றவன்போற்பிரசங்கித்து, வேடமாதிபூண்டலும இச்செய்கையையொப்பாவர் எ - று.

பஞ்சரத்திநமாலை.

ஆசிரிய விருத்தம்.

விண்ணனந்தங்கோடி யெனினுமொருசிவலிங்க
வீடென்பதறிய வசமோ
வேதவேதாந்தமும் நாதாந்தவீட்டினில்
விளைந்தவா றறியவசமோ
புண்ணார்மயக்கமுந் தான்றானேமாயையுட்
பொருளென்ப தறியவசமோ
பூதாதிபேதமுந் தானன்றிவேறன்றும்
பூரணத்தெய்த வசமோ
எண்ணாதவெண்ணங்க ளேதேதுமொன்றான
வேகநிலை யறியவசமோ
எத்திசையும்பேதமாய்ச் சித்தாகிநிற்குமோ
ரிந்த்ரனுள வறியவசமோ
கண்ணனந்தங்கொண்டுங் காண்பரோவுனதருட்
கண்ணாடிதிப்ப தெவர்காண்
கருணைவிழிபரவிநிறை யறிவிலருளறிவில்வரு
கண்ணுடைய வளல்சின்மயமே.

பாடவருமோபொருளை நாடவருமோவருளை
பக்திவருமோ கன்மனம்
ப[illegible]வருமோபொறிகள் கதறவருமோநெறிகள்
பலி[illegible]வருமோ வ[illegible]
கூடவருமோவிழியை நாடவருமோமொழியை
குறிக்கவருமோ தானதாய்க்
கொள்ளவருமோவமுத மெள்ளவருமோவெளியில்
குறிநிராசனமீதினுங்
தேடவருமோகுருவை கூடவருமோகருவை
தெளியவருமோ சிவமெனுஞ்

சிந்தையுறுமோமோன முந்தவருமோகியானந்
  திருவருள்சொரூபமாமோ
காடுடலமேகுமுன் விடதிதஞானங்
  கதிக்கவருமோ புகலுநூல்
கருணைவிழிபரவிநிறை யறிவிலருளறிவில்வரு
  கண்ணுடைய வளல்சின்மயமே. (௨)

புலைமையாஞ்சமையசம ணர்கடம்மைஞானவாள்
  பூட்டிவாய்த் தாண்மாட்டுவீர்
பூதங்களொருகோடி யாகநாதத்தினிற்
  போக்கி நிர்த்தூளிசெய்வீர்
நிலவதிதமெனுமோன குருவதிதமெனுஞான
  நேத்ரமாம் வீடிருப்பீர்
நீராழமாதாந்த சூதாகவேதாந்த
  நிலவறையிலே யுலவுவீர்
குலவவருநெறியாள்ர் கற்பையபிடேகமாய்க்
  கொண்டுவருள் விடுதவுவீர்
குடிநிற்கவேமோனங் கூடாதெழுந்தாடக்
  கூறும்வாய் மூடகிற்பீர்
கலையிலெழுசித்தெலாம் வல்லநீயடிமையுங்
  காணெணு சிற்றறிவினிற்
கருணைவிழிபரவிநிறை யறிவிலருளறிவில்வருங்
  கண்ணுடையவளல் சின்மயமே (௩)

சித்தாகியெங்கினும் பார்க்கும்விழியொன்முகி
  திருநடன தேசியாகி
தேஜோன்மயாநந்த வீட்டிற்றதும்புமோ
  சிதாநந்த ரூபமாகி
முத்தானவித்தினிற் சத்தாகித்தாண்டவ
  மூன்றெழுத தொன்முகியே
முக்கியபரப்பிரமம் யார்யாரெனத்தேர
  மூதண்ட தூயவெளியாய்

எத்தகைப் பேதவுருவத்தனையுமுவ்வாகி
யெண்ணுமோர் மணிமந்த்ரமாய்
ஏகமதகாரநிலை யோகவருளாகிவர
வேகசலதாரை யமுதாய்
கத்துமறைவிர்த்தியுற வெற்றிதருமௌனமே
கனதையா நந்தமூறுங்
கருணைவிழிபரவிநிறை யறிவிலருளறிவில்வரு
கண்ணுடையவள்ளல் சின்மயமே. (௪)

தேகத்தைவிட்டுவெளி திருநடனமாடுவீர்
திரும்பவுந் தேகத்தினுட்
டிசையெங்குமோரிமையி லசைவுற்றிருக்கவுஞ்
சித்தமொரு மௌனமாவீர்
போகத்தையாநந்த மேகத்தையமுதமாய்ப்
பூட்டுவீ ரவரிமாமுதற்
பூதபௌதிகமுத லேவலொருபாயமாய்ப்
போதகிரி நாதராவீர்
நாதத்தைய திவிசித வுருவங்களாக்குவீர்
நாதாந்த வீடிருப்பீர்
நான்மறையுமறிவரிய தாகுமொருமொழியதாய்
நாடிநிற்பீ ரம்பலம்
காதற்றவூசியினையகிலங்கள்செய்குவீர்
கடையனறியாவறிவினிற்
கருணைவிழிபரவிநிறையறிவிலருளறிவில்வரு
கண்ணுடையவள்ளல்சின்மயமே. (௫)

பஞ்சரத்நமாலை

முற்றிற்று

—— ——

ஞானிமார்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஞானிமாரெனச்சொல வனேகம் பேரை
நானறிந்தேன் பூமிமிசை நடனங்காணேன்
தேனெனவாநந்தமுத மணிநாவுண்ணச்
சிவயவநுபூதிதனிற் றெளிந்தமுத்தர்
மோனமெனுங் கண்டதையு நீங்கிமேலும்
முக்கியவாநந்தமய மாவரல்லால்
ஈனசுக மமுதையற விந்நூற் றேர்ந்தோர்
ஏகபத முத்தியெனும் வீடுளாரோ.

உ

இனி.

பூரணாநந்தோதயமாலை.

மூலமும் உரையும்.

வருமாறு.

வெண்பா.

ஆருமறிந்ததறிவாகு மன்றியருட்
பேருவிருந்த பெரிமையி - லாருமோர்
நித்தியமேதானாய்நிறைந்துதமைக்கண்டோர்கள்
பித்தருமாய் நிற்பர்பிரிந்து.

பிரமாதியைவரும் பிராணாதி தசவாயுக்களும் மனமாதி நாற்கரணங்களும் வாக்காதி கர்மேந்திரியங்களும் சுரோத்திராதி ஞானேந்திரியங்களும் சத்தமாதிவிடயங்களும் வசனாதிகளும் இவைகளொடுக்கமாகிய காரணசொருபமெனும் அநாதிமாமாயையை யொன்றும் ஆகதத்

துவம் ௬௦-க்குள் தசேந்திரியங்கட்கு தசவிஷயங்களாய் அந்தர்பூதமா நின்றமையால் ௫-ம் போக நின்றதத்துவம் ௩௫-ய் இவைகளையறியுஞ் சாக்ஷியாகிய தத்போதனோடு தத்துவ ௩௬-ம் காந்தமுன்னர் அயங்கள்சேட்டித்துந் தானறியாவாறுபோ லறியாமையாய் நின்றதெ துவோ அதேவாழையையுரிப்பவன் முடிவிற்றண்டைக்காண்பான் போல தத்துவ ௩௬-ம் ஆசிரியரால் தத்துவங்களை ரூபதரிசனஞ்செய்து தன்னையறியத்தான் வேறின்மையால் சுட்டற்றுச்சும்மாவிருந்த விடமே ஆறுமறிந்தறி வென்றும் அப்பேரறிவெறிமையாநாட்டமாகிய வருண்மூடிக்கொள்ளலி னருளென்றும் அருளேவடிவாகி பரையின்மறைதலி னிறந்திடமபரையென்றும் பரயோகமேபேரிமையென்றும்அருள்பரையோகத்திற்பரையுமறைதலில் ஆநந்தமென்றும் அதேதானென்றும் கண்டவெல்லா மின்மையாத்தோன்று மித்தயே தஞ்சொரூபமெனவும் கண்டதான் தன்னைமுக்காலத்து மிருப்பதென வருளறிவிக்கவறிந்து சிதாகாசவெளியாநின்று பித்தனைப்போலிதாகி தங்களின்மையால் தூலாதிகள்ஞானக்கினியாலெரிந்து எங்குநிறைந்திரண்டற்றுவியாபியாய் நிற்பானென்றும் அவ் அருண்மேலிட்டால் கூறியவாறுகாண்க. எ-று. (௯)

உவ்வென்றெழுந்த வொலியம்பலத்தினின்றும்
அவ்வென்றமர்ந்தனந்தமானதே - எவ்விதமும்
ஓராருண்மயமே யோரிலொழிந்தவிடம்
வாராரோ பூரணமாய் வந்து.

(இ-ள்.) ஏகமயத்தினின்றும் உகாரகாரணமாகிய வருட்டதும்பியமொழியே ஓமசிவயவென்றும் ஸ்தூலபஞ்சாக்ஷரதிருவருளே அந்தர்யாமியாய் மகாரமணிபூரகநடுவே உவ்வெனமறைந்த பூரணனில்நின்றும் அவ்வருளே அவ்வென்றெழுந்து பரத்திற்குச்சிவமாகி அண்டரண்டங்களு நிறைந்து சர்வபுவன சராசரங்களாகியதிருவருண்மயமே யெத்தனைவேதாகம புராணவிதிகாசங்களைக்கரப்பரகரப்பங்களா யோதியும் ஆராய்ந்து தேடியும் தெளியார்களோ ஓ நமசிவாயவென்றும் அவற்றை உணர்த்த வெறுவெளியிற்றதும்பிய வருளே திருமேனிகொள்ளும் ஞானசாரியரா அறிவிக்க வறிந்து தற்போதமற்று அவ்வருட்போத முத

யமாக அவ்வருளிடந்தேடி வந்தால் ஆனந்தோதயந் தானேதானென்றும் கூறியவாறுகாண்க. எ-று. (உ)

சும்மாவிருத்தல் சுகமாமிறந்தவிடத்
தம்மாவெழுந்ததுபேரானந்தம்-எம்மால்
உரையாவுரையொழிவா மூமையது மோனத்
துரைப்பாரு முண்டோவுரை.

(இ-ள்.) சுட்டுபோதங்கெட்டுக்காற்றற்ற தீபம்போல்சும்மாயிருந்தபடியேயிருபப தருண்மயமன்றோ அவ்வருளின் மறைந்துநிற்றலே சுகாநந்தமென்றும் சகசாநந்தமென்றும் பிரமாநந்தமென்றும் எவ்வகைப்பட்ட ஆநந்தங்களும் அவ்வருளடைந்தோர்க் கெளிதில் ஆகுமென்றும் அதனையின்னும் பற்பலவாய்க்கூறினும் அம்மோனாநந்தம் அனுபவியன்றி மற்றையர்க்கிதென்றறியப் படாதென்றுங் கூறியவாறுகாண்க. எ-று. (ங)

அறிவாரோவருளா லானந்தம்பொங்கப்
பிறியார்உடம்புவாயினும் - வறிதிரார்
தேரார்சிவபெருமான் றீக்ஷைவழிதேர்ந்துவிடில்
வாரார் பிறப்பில்மகிழ்ந்து.

(இ-ள்.) அருண்மேலிட்டா லருட்போதராகி ஆநந்தநடனம் பண்ணும் மெய்யன்பரின் மாக்ஷிமைதங்கிய நிலைமையையாவராலறிந்து கூறப்படும் அந்தக்கரணங்களுக்கு மெட்டாது பூருவத்திலிருந்து பிறந்தவர்கள் சிவபெருமான் அனுக்கிரகம்பெற்று வந்தவர்கள் இவர்களுக்கே அவ்வருணடையுடையோர் நடைகள் கிஞ்சித்துப்புலப்படும் இவர்களும் அவ்வருள் வீட்டையடைந்து இவர்கள்பிறப்பு மொழிந்தாநந்தோதயமாய் நடனம்பண்ணுவரொன்றும் கூறியவாறுகாண்க. எ-று. (ச)

வந்தானிலையதுதான் வாராப்பிறவிகடாந்
தந்தாய்நிலையதனைச்சாரா-னெந்தாய்
புருவநவிளக்கைப் போதவொழிவிற்
குருவாகி வந்துரைத்தகூறு.

(இ-ள்.) வினைக்கூறெறுத்து சாதன அவயவங்களைத் தரித்து இந்நெறிவந்து தற்போதமற்றார்க்கே முத்தியுள தென்றும் துவிதத்தால் கற்பகாலம் நிட்டைகூடியும் முத்திக்கேதுவன்றென்றும் என் தந்தையாகிய வள்ளலார் போதமொழித்தற்குவகை புருவமத்தியத்தைச் சுட்டிக்காட்டியும் யாணிறவா திறந்தவிடத்திமையா நாட்டமாகிய சிவந்தானே பேரொளியாகி நின்றும். என்புன் சென்னிமீது திருவடிசூட்டி ஞானத்தீக்கையுஞ் செய்து அனுபவமேதானாகி நின்றனனென்றும் கூறுதல் அறிக. எ-று. (ரு)

கெட்டாற் கிருபையருட் கேள்வியற்றார் கூட்டமதை
விட்டாற்பரமே விளங்கிவிடும்-தொட்டாலும்
கூடாப்பெருவெளியிற் கூட்டுங்குருவடைய
நாடாருக்கென்றே நவில்.

(இ-ள்.) திருவருளுதய மெய்ஞ்ஞான நூல்களின் விசாரணையற்ற கன்மசஞ்சிதகுதர்க்கிகள் அவனமபிக்கையால் அருட்கிருபையைநீக்கிக்கொண்டு பிறவித்துன்பக் கடலாகியபஞ்சமலங்களினும் அமிழ்ந்திக் கிடந்துகோடிகோடியாய் கூட்டங்கூடி தாமரையினது தேனுண்ணவறியாத் தவளைகள் போன்று கத்திக்கதறி தர்க்கித்துத் திருவருளை நீங்கி நரகிற் கேதுவாகுங் குதர்க்கிகள் கூட்டத்தைச் சேராது நீங்கித்தன்னிலையில்நின்றுதன்னைத்தெரிவிக்க அருளையுருக்கொள்ளும் ஆசிரியரை யுள்ளபடி சிந்தித்து இமையா நாட்டமாய்ப்பாராது பார்த்து வேதாகமப்படி மாறாது தமது தவகற்பைப பத்திரப்படுத்திநிற்கப்பேரறிவாகியவநுள்மூடிக்கொள்ள ஆனந்தந்தானே உதயமாம், அப்பெரு வெளியைக் கூட்டுவிக்கும் ஞானசாரியரைத்தேடும் தேற்றுறவாளராகிய அதிதீவரர்களோ நைந்துமுதன்மையான அன்னபானாதிகள் விடுப்பாரென்றும் கூறிய வாறுகாண்க. எ-று. (சு)

நையும் விரதமதை நாமெடுக்கிற்கிட்டுமே
பொய்யாம் புவிமாயப்போக்கு-வையாய்
பொசிப்பால்விருப்பம் பொருந்தாய்விசாரம்
வசப்படுத்திக் கொண்டால் வரும்.

(இ-ள்.) திருவடிநாடிய அதிதீவரர்கட்குநித்தியவிவேகம் உதயமான அக்கணமே அன்னபானாதிகள் நீங்குமென்றும் அதுநீங்கவேபிராணமயம் விரியமற்று ஒடுக்கத்தில் நிற்கும் அது ஒடுங்கவே மனோமயம் பித்தமேற்கொண்டு விரவும் அதுவிரவவே அஞ்ஞான அபிவிர்த்தியின் உண்மைகெடும் அதுகெடவே அகங்காரதற்போத மொடுக்கமாய் அதற்குரிசிப்பித்துநின்ற ஆணவ, மாயை, காமியம், திரோதை, மாமாயை யென்னும் சத்திகள் நீங்கும் நீங்கவே பொய்யாகிய பிரபஞ்சம் பொய்யாகவே கானற் சலம்போல் நீங்கும் அப்படிநீங்கவே மெய்யாகிய ஞானமென்னும் ஆத்மா ஆத்மவிசாரமே ஞானாகாரமாய் நிற்கும் அந்தவிசாரஞானமே ஆசிரியராதலின் உள்ளிருந்தும் தெரியாது, உயிருள்ளிருந்த ஆசிரியர் உன்னை அறிவிக்கும் பொருட்டுத்திருமேனி கொண்டு உன்னையறிவித்து அருட்போதனுக்கித்தீக்ஷைமுதலிய வனுபவத்தில் தானாகி நிற்பனென்றுங் கூறியவாறுகாண்க. எ-று. (எ)

வழிவிசாரந்தான்வரிலவருஞான
விழிவருமே குண்டலியின்வீடு-பழிசொல்லேன்
புசிப்புருசிநீங்கார் பொருந்தாருணையம்
கசிந்துருகலெங்ஙனேகாண்.

(இ-ள்.) அவ்வழியாகிய நித்தியவிவேக விசாரஞானமேலீட்டால் உதயமாகிய திருவருட் போதம் அவ்வருள் ஞானவழியாய் மூலாதாரத்தியங்கிக்குண்டலியின் மறைந்துந் தெரிந்து ஆறுதாரங்களும் ஊடுருவி வியாபியாய் நின்றும் தன்னையறிந்தும் பரையோகத்தில் சமாதியாய் நிற்கும் அவ்வழிச்செல்லாது அவிதான்மாக்களின் மலபோதத்தால் அவ்விரதத்தை அறிய ஒட்டாது மறைக்கும் திரோதசத்தியே அவ்வான்மாக்களை பஞ்சமலங்களினும் கற்கு போலாய் சஞ்சிதாகாமிய தற்போதத்தோடுபிறப்பிறப்பாகிய துன்பத்திற் சுழல்விரிசிபோலாய் ஆட்டிவிக்குமென்றே வென்றுங்கூறுதல் அறிக. எ-று. (அ)

பெரும்பொருள்யாது பேணுமவராரோதான்
கூறிவற்கொள்ளுங் குணம்யாதோவுரில்

பதியறிவிக்கப் பசுபாசம்போக்கில்
விதிவிலக்குதானேவிடும்.

(இ-ள்.) உருபாரூபமாகியும் பேதாபேதமாகியும் விளங்கும் சர்வ சுதந்தர போதமாகிய பசுவையும் இதற்குரிய பாசமாகிய புவனபோகங்களையும் போக்கி உன்மத்தனாக்க முன்னம்ஆணவமாகிய கேவலவிருளின் மறைபட்டிருந்த அன்பனைக்காருண்ணியத்தாற் சிருட்டித் தருட்போதனாக்கி முன்னனந்தம் பேதத்தில் மறைந்தபசுவையும் பசுவினால் பதியை அறியவொட்டாத பாசத்தையும் ரூபகதெரிசனமாய்த்தரிசிப்பித்தும் பின்னர் தன்னோடுகண்ணொளியும் ஆதித்தனொளியும் பிரிபடாதவாறு சாட்சிமாத்திரமாய் தன்னைத்தானாக்கிக் கொண்டபதியே அனந்த கோடியிலுந் தானாகியிருந்த தறியாமையால் பிறவித்துன்ப மயமாகியும் யிப்போதாசிரியர் காருண்யத்தால் தன் நிஜஸ்வரூபத்தை யறிவித்துந் தெரிந்தும் அனந்தகோடியுந் தாமேயிருந்து நடத்தலில் ஆனந்தமே பேறிவாகிய பதிக்குத் தானே வினையென்றும் கூறியவாறுகாண்க. எ-று. (௬௰)

வினைக்கூறுதன்விளைவின் வேரறியாமாந்தர்
தனதுமனத்தாலென்று சாற்றி - எனைக்கூற
வெழுந்தார்பரமே யேகவெளியூடே
விழுந்தேன் பரமேவினை.

(இ-ள்.) நால்விதயோனி எழுவகைத்தோற்றம் எண்பத்து நான்குநூறாயிரம்லெக்ஷஜீவபேதத்தினும் ஆண்வடிவமாகியும்பெண் வடிவமாகியும் அலிவடிவமாகியும் மாறிமாறி சுழன்றஆகாமியசஞ்சிதவினைகள் வேரேடறும்படி வினைக்கூறொத்தத் திருவருள்நேர் நிற்கப்பரம்பராசாதனனாகிச்சற்சாதனனாகியகாலத்தில் மலபரிபாகத்தெல்லையில் மயிர்ப்பாலமீதிருப்பது சு ச-ம் அவஸ்தை யினும் சஞ்சிதங்களை வேரோடறும்படி ஞானாக்கினியால் சுட்டெரித்துத் தன்னை அறிவித்துப் பின்னர் தன்னையறியா வறிவாகிநிற்க சிவயோகமாகிய விதியிருக்க ஆன்மாக்களின் மலபோதங்களைப்பாரீர் தனது தற்போதத்தால் வஸ்துவைவெதிரிட்டறிய வெத்தனிப்ப

தாகாயவெளியை அளப்பதேயாம் யான் உன்மத்தனுகித் திரிந்தக் காலென்னை அறிவிக்க எனதாசிரியர் எழுந்தவண்ணமே போதந்தேய்ந்து வெறுவெளியாகி நிறைந்தசிவமயமே யெப்பொருட்கும்வினையென்றும் கூறுதல்அறிக. எ-று. (கo)

தேனுவடிந்துந் திகம்பரியாய் நின்றமர்ந்துந்
தானுவறியாத்தகமையதே - ஞான
விழிபரவமோன வெளியாகிநிற்கும்
வழியார்க்கருளேவாம்.

(இ-ள்.) எவ்விடமு நிறைந்துள்ள பூரணனந்தப்பாரல்வாரி மேன்மேலும் பெருகி வந்து வந்து மறிதலில் பிரமாநந்த சொருபியாய் நிற்றலின் திகம்பரியென்றும் ஆநந்தத்தை யனுபவித்தோமென்னும் போதமுமிறந்து தன்னையறியாது ஆநந்தாதீதமாய் நிற்றலின் மோனியென்றும் மோனுதீதமே ஞானவிழியாகி சிதாகாசவெளியாய் நிறைதலில் ஏகசொருபாநந்தச்சுடரென்றும் அவ்வழியைநாடிய அன்பர்கள் சற்குரு சன்னிதானத்தில் உடல்பொருளாவிமூன்றையுந் தத்தஞ்செய்து உள்ளபடி சத்தியமாய்த் தன்னைவிழுந்தவர்க் கெளிதில் திருவருளுதயமா மென்றும் ஐயமின்றிவற்புறுத்திக் கூறுதலே அறிக. எ-று. (கக)

தத்துவமுமாண்டு சதாக்கியமும் போய்மறைந்து
சித்தமிறத்தல் திகம்பரமாஞ் - சுத்தமும்ாம்
காணுர்தமையறியார் கண்டாரைப்பித்தனெனில்
நாணேவவர்க்கேதுநாடு.

(இ-ள்.) சத்தமாதிச் சதாக்கிய மீருகியதத்துவந் தொண்ணூற்றாறும் ஆசிரியர் அறிவிக்க அறிந்து தூல சூஷ்மகாரணம் நீங்கி அவற்றைக்கண்ட அறிவே அறியாமையாகி தானெனன்பதற்ற அத்வைத பூரணஞான சூரியோதயமே இமையா நாட்டமாகிய பேரறிவாகி நிறைந்தவர் சுத்தப்பிரமமே யிவராம் இவரைதன்னைத்தானறியா சிலர் இகழ்ந்து கூறியும் சிலர்புகழ்ந்து கூறியும் அதனுல் குற்றுகுற்ற மிவருக்குயாதுமின்றி அவரது சன்னிதானத்தின்கண் பொசிப்பற்று விரவிநின்ற பிராரத்துவ கன்மசஞ்சிதங்கள் நன்மை

செய்வார்க்கு நன்மையும் தீமைசெய்வார்க்குத் தீமையும் பொருந்தி அவரை விட்டொழியும் முறைமையிதுவேயாமென்றுங் கூறியவாறு காண்க. எ-று. (௧௨)

சொல்லாதுசொல்லிச் சுருதிமுடிவாக்கி
நில்லாது நில்லென்றார் ஞேயகுரு - கல்லா
வினையேற்குந்தானே விளைந்தசுகமோன
முனையே முனையா மொழி.

(இ-ள்.) சுருதிகுருசுவாநுபவப்படி அங்கங்கு அவ்வண்ணமாயென்னைப் பரிட்சித்தும் அநுபவப்படி ஆகாய்வாக்காகி யென்னைவிட்டுப் பிரியாது சந்தேகவிபரீத அசம்பாவனை முதலியவற்றைத்தானாகி நின்று நீக்கியென்னை ஆண்டுகொண்டவரும் அறிவிற்கறிவாகியும அனந்தசெனனங்களில் வினைக்கூறுத்த சாதனகாலநிகழ்விற்றற்போதம்போய் ஒழிந்த நிட்டையின்கண்ணெழுந்தருளிய ஆசிரியராகியவள்ளலார் எங்கும்பூரணமாய்நிறையும்படி சொல்லாதுசொன்னஓர்மொழியேயான்பாராதுபார்க்கவும்அநுபவமே திருமேனியாய் விளங்கும் மாட்சிமையானது சொல்லப்புகுவேனாகில் சுட்டற்ற சுகாதீதமே மௌனமாக்கிக் கொள்ளும் அம்மௌனாதீதசற்குரு நாதன்பால் ததும்பியமொழி அவ்வருண்மேலீட்டினதென்று கூறியவாறு காண்க. எ-று. (௧௩)

தனையேகமாக்கிப்பின் சாதனநான் கொன்றா
யெனையேபெருவெளிக்கா வெண்ணினார்—நினைவறவே
மாறாக்கருணைவெள்ளம் வந்தகிளையதெனக்
கூறாரருளின் குறி.

(இ-ள்.) தத்துவமுப்பத்தாறையும் இகந்தென்று அருளாலறிவித்து நீக்கித்தன்னையும் அவ்வருளாலறிவித்துத் தாமே அவ்வருண்மயமாய் நின்றும் சற்சாதனமே ஏகமாகிய ஓர்சாதனமாய் நில்லென்றும் நிருவிகாரியாக்கிப் பெரும்பாழ் வெளியாகி நிறைந்தாரோ ஏதுமறியாதென்னை அப்பெரும் பாழினின்றும் உதயமாகிய பேரானந்தாமுதமே பெருகி மூடிக்கொண்ட வதிசயத்தையவராற் கூறப்படும அநுபவமே உதயமாகிய அவ்வருணடையார்

அறிவரன்றி மற்றையோராலறியப்படாத வருணிலையென்றும்
கூறியவாறு காண்க, எ-று. (௧௪)

தானென்று தன்னதென்றுஞ் சாற்றித்தனையறியார்
கோனென்றுதமமைத்தாங்கூறியே - போன
இறந்தும் பிறவிக்கே யேகாயருளை
மறந்து மாணுக்கரொடு மாண்டு.

(இ-ள்.) தானென்றும் பிறரென்னுங்கோள் நீங்கித்தன்னையுமு
ந்நிலையையும் அறிவிப்பதருளென்றும் அவ்வருளின் கண்மறைந்து
அவ்வருளா லுதயமாம் தற்றெரிசனமுதலியபணாயோகவானந்தசு
கசொரூபத்தைப்பெறாது துவிதத்தால் மனத்தின்கண்ணெழுமல
போதத்தை நம்பிப் பிறவித்துன்பசுகங்களை மெய்யோற்கருதி நடி
க்கும் அனுசாரியர்கள் எக்காலம் தற்போதமாண்டு அவ்வருள்
வீட்டைப்பெறுவா அவர்களின் கிரியாயோகஅனுட்டானங்களும்
மேற்பிறவிக்கு வித்தாகுமன்றி நிரதிசயசுகசொரூபக் கைவல்லிய
முத்தியைக்கொடாவென்றும் கூறியவாறுகாண்க, எ-று. (௧௫)

மாண்டுதிரிய வருண் மார்க்க மறியாயோகம்
வேண்டித்திரிவர் வினையொழியார் - தோண்டி
உடையாமுன்றுமே யுடையிலொழிவை
யடைவீரருள் வழித்தாணும.

(இ-ள்.) விட்டகுறையின்படி தற்போதமாண்ட விடத்திற் றோ
ன்றும் அவ்வருட்போதராகி அம்மெய்ஞ்ஞான வீட்டைப்பெறாது
தற்போதத்தால் யோகசமாதிகளைப் பழகியுமுலும் பழவினைமார்க்க
சஞ்சிதத்தை அறியார்கள் இப்பொய்த்தேகம் மண்ணின்மறையுமுன்
னம் செத்தாரைப்போற் செத்து தற்போதமற்றுத்திரிந்து உள்ளபடி
யருட்போதமுதயமான அக்கணமே அனுபவதற்றெரிசனை முதலிய
பணாயோகமும அவ்வருளறிவிக்க அறிந்து அனுபவித்த சுகமாகிய
ஆநந்தமே திருமேனியாகி அவ்வருட்போதமுஞ் சுட்டற்ற விமையா
நாட்டமேயெக்காலமும் நிறைந்தவாநந்தாதீத நிட்டையாகிய சிவயோ
கமாமென்றும் கூறியவாறு காண்க, எ-று. (௧௬)

ஆமேற்பெருவாழ் வனந்தவடிவாய் நிகழுந்
தாமேயருட்டாஞ்சகவடிவம்-நாமோ
ஒருமுதலுமாகோமே யோகோமுடியில்
வருமனந்தசாகரவா நந்தம்.

(இ-ள்.) சகலபுவன சராசரங்களும் ஏகமயமாய் ஜகஜ்ஜோதியாகி யெவ்வுயிர்க்குமுயிராகி நிறைவது அருளன்றோ ஜகமயம் அவ்வருளை விட வேறில்லாமையால் நாமென்பதொரு முதலுமின்றி யருண்மய மாநின்று அவ்வருளுதயகாலத் தாநந்தமயமேஆவாய் ஆநந்தமேலீட் டா லெவ்விடத்திருப்பினும் தனக்கியாதோர் பொய்க்கருவிச் சேட் டைகளின்றி யாவுந்தன்மயமாய்விளங்கி மேன்மேலு மாநந்தமேலீ ட்டால் மௌனியாயத்திரிவாரொன்றும் சிலர்தடைமீறிச் சென்றவிட மெல்லாஞ் சிதாகாசவெளியினடனம் பண்ணுவரொன்றுஞ் சிலர்பித் தனைப்போல நின்றுஞ் சிலர் ஆனந்தநித்திரையினின்றுஞ் சிலர் அவ் வாநந்தம் ஓர்விதமின்றி அனந்தானந்தமயமாயுமெங்கும் பிரகாசியா நிற்பரென்றும் கூறியவாறுகாண்க. எ-று. (கஎ)

ஆனந்தந்தானு யருள்வடிவந்தானுகி
மோனந்தரும்பி மொழிந்ததுவே-ஞானநிலே
கண்டாற்பிறவி கடந்தாரெனமறைகள்
விண்டாரனந்த விதம்.

(இ-ள்.) எவைக்குந்தாரகமாய் நிறைந்துள்ள மௌனாதீதசற்குரு நாதன் தேனையுண்டு உமிழ்வதுபோல் ஆநந்தாதீதமே மென்மேலும் பொங்கிஅருண்மயமே ஆகாயவாக்காகியும் மௌனமே ததும்புங்கால் பக்குவர்கள் தாரதன்மியப்படி அவ்வருள்வடிவை நெருங்கியகாலத் ததும்பு மொழி கற்பகாலத்தைக்கடக்கவிடும் ஞானசூரியனென்றும் கர்ம்மமலத்தை நிருமலமாக்கும் பிரமோபதேசமென்றும் ஆகாமிய சஞ்சிதவினைகளை சுட்டெரிக்கும ஞானக்கினியென்றும் இவ்வதிசய சப்தத்தையே அனந்தமறைகள் கோஷ்டிக்குமென்றும் அவற்றை அடைந்த சீவன்முத்தர்களது மான்மியத்தை அரிபிரமாதிலுங் கூறப் படாதென்றும் அவையே வேதாந்தமுடிவுக் தவத்தினதுமுடிவு மிம் மொழியே யாமென்றுமகூறியவாறு காண்க எ-று. (கஅ)

நின்றதுவுமென்னோ நினைவுநீ நீயேயா
னென்றதுவுமென்னென் றிருந்தேனே — அன்றே
அருளுதயங்காண யழிந்ததுலக
மிருண்மனத்தைக் காணேனினி.

(இ-ள்.) அருளே திருமேனியாகிய வெம்மெய்ஞ்ஞானாசிரியர் நில்லென்ற ஓர் ஒப்பற்ற மொழியை உரைத்தகணமேகருவிகள்மாண்டு பொய்ப்போதமாகிய மனப்பேயுமாண்டு தன்மயமாக்கி அவ்வருளின் மறையும்படி செய்வித்த மான்மியத்தைச் சொல்லப்புகுவேனாகில் சுட்டும் மனவாக்கே ஆனந்தம்நிறைந்து சொல்லமுடியா உண்மை மௌனமாக்கி விடுவதென்கொலோ வென்றும் யாங் கூறியவாறுகாண்க எ-று. (௧௯)

எந்தாய்லலாட மிமையாவடிவாக
வந்தார்க்கடிமைகொண்டே வாழ்த்தினேன் — தந்தார்
மொழியைமொழிமுதலே மூகையானந்த
வழிபோய்மறைந்த தருள்வாழ்வு.

(இ-ள்.) மூலாதாரத்தினின்றும் சுவாதிட்டானம் மணிபூரக அநாகதவிசுத்தி ஆக்கினைமுடிவி லிமையாவடிவாகின்றும் உட்புறம்பாய் வெறுவெளியாகின்றும் அருளேதிருமேனியாய் தோன்றியவள்ளலை யானும்பாராது பார்த்துக்கேளாது கேட்டவாக்கியம் தானென்றும் பிறனென்றுஞ் சுட்டுபோதங்கெட அநுபவமே தானாகிற்கு மதிசயமேசுட்டற்ற மௌனாதீதமென்றுங் கூறியவாறு காண்க எ-று. (௨௦)

வாழ்தலருள்வடிவாம் வந்துபரைதானாகி
யாழ்ந்தபரைப்பாழுகடந்து — போழ்ந்துதனை
வந்தசுகாநந்தமுந்தான மாண்டவொழிவிடமே
சொந்தசுகா தீதசுகம்.

(இ-ள்.) யாதொருகருவிப் போகச்சேட்டையுமற்று இருந்தபடிசும்மாவிருக்கத்திருவருணடப்பிக்கும் அதிசயத்தை யெழுதிமுடியாதென்றும் அவ்வருண்மயமாகிய சுகத்திருந்தும் சிவோகநிட்டாபானுமின்றும யாதுவன்னங்களைக் கவர்ந்துந் தனதொளிவீசும் மாணிக்கமணிபோல் யாதுவிடயங்களைப்பற்றியும் பற்றற்று அருண்மய

மாய்நிறைந்தும் பரயோக முதலிய சத்திசிவப்பெரும் பாழுங்கடந்து ஆநந்த மயத்தையும் அறிந்த வருட்போதமு நழுவிநின்றசுகாதீதமே நிருவிகற்பசுகமா மென்றுங் கூறியவாறுகாண்க. எ-று. (உக)

சும்மாவிருந்த சுகம்பாழ் விளைந்தசுகம்
அம்மா வுரையற்றமர்ந்ததே - எம்மால்
உரையற்றருள்வந் துரைக்குமருளுங்
கரைப்பற்றி நிற்பரார்காண்.

(இ-ள்.) வெறுவெளியா யெங்குநிறைந்த பூரணானந்தஸ்வரூபமே இரண்டற்ற சுகாதீதமயமாய் சும்மாயிருந்தும் அவற்றையிதென்றுந் திருவருளறிவிக்க அவ்வருள்வாக்கு ஈதென்றும் உணர்பவர் கோடிக் கொருவ ரெனினும் அதுமயமாய் விளங்கு முத்தர்களே அநுபவிய ன்றி அறிபவரின்றென்றுங் கூறியவாறு காண்க. எ-று. (உஉ)

கருணும்பரத்தினிடை சாணுககாட்சி
வருநாள்குருநாளாய் வந்த - தொருநாள்
வெளியம்பலத்தே விளையாடிநின்றும்
ஒளியாமுயிரானருள்.

(இ-ள்.) பாராது பார்த்திருக்குஞ் சின்மயானந்த பாவெளியில் தோன்றிய மின்னொளியே அனந்த ஜெனனங்களின் காமிய நிட்காமி யதபாக்கினி சிவசிவாவென்றும் விட்டவினைக் கூறொருத்ததோ அறி யேன் அந்த ஒரு நாளெனக்கென்றுஞ் சற்குருநாளாயிருந்ததோ அ றியேன் பேரம்பலத்தினின்றும் பஞ்சாக்ஷரமேருவின் சிகரத்தினின் றும் எழுந்தென் உயிருள்ளொளியாய் அமர்ந்த எனது ஆற்றலின்மா ன்மியத்தை யேதென்றுரைப்பேன் உடற்பேதங்களுள்ளும் உயிரொ ன்றாகி நிறைந்து நின்றன ரென்றுங்கூறியவாறு காண்க. எ-று. (உங)

உள்ளும்புறம்பாயுருவருவ ரூபமொன்றாய்
எள்ளிலெண்ணெய்யனிருந்தெங்கும் - கள்ளமதா
யாடுந்திருக்கூத்தறியாரே கோடிமறை
தேடுமருளாலதனைத்தேர்.

(இ-ள்.) உள்ளும் புறம்பாய்க் காண்பானுங் காட்சியாகி யெள்ளி னுளெண்ணெயைப் போல வெங்குநிறைந்த பிரமஸ்வரூபமே அறிவாகியும் அவரதமுகிய திருக்கூத்தே மனமாகியும் வினையின்படி ஆன்மகோடிகளிடத்து ஆங்காங்கு வூட்டியுறக்கிடும் சத்திசிவமயமாகியும் வினைக்கூறுத்த சாதனர்களின் பஞ்சமலங்களை நீக்கித்திருவருளைக் கொடுக்கப்பட்டவரும் மற்றையருக்கம்மனத்தையே விபரீதப்பேயாக்கிவிடுப்பவரும இவ்வஸ்துவாகிய சற்குருநாதனையே கோடிவேதங்களும் கூவியறியா மௌனாதீதஸ்வரூபமென்றும் அவ்வருள்மேலீட்டால் கூறியவாறு காண்க. எ-று. (உச)

ஒன்றேபொருளென் றுணர்த்திய துநாமானே
மென்றேயெனைத்தாமா யெண்ணியே-நின்றும்
அருளாலுனைநீ யறிவாய துநாம்
பொருளாகும் பூரணமாம்போது.

(இ-ள்.) பேதம்அபேதபேதா பேதரூபங்களாகிய அனந்தபிறவிதோறும் எனதுநிஜஸ்ரூபத்தைஅறியா தாணவமாயாமலத்தில் ஜெனனமரணபட்டிருந்தவென்னைகிருபாநோக்கத்தால் இப்பிறவியின்கண் அறிசிற்சறிவாகிநின்றேகிபுணர்த்த உணர்ஞான விழியாகிநிறையும் போறிவே நீ தற்போதமற்ற விட்டகநட்போதமென்றும் அவ்வருட்போதமே நாமென்றும் அவ்வருளாலுன்னை நீயறிந்தகாலத் துனக்குள்ளே நாமென்றும் அவ்வனுபவானந்தோதயமே பரிபூரணமென்றும் அப்பூரண ஸ்வரூபமே நீயென்றும் என்னையு நினைந்த உன்னையே மறந்து இரண்டற்று நில்லென்றுமோதிய ஓர் அம்பரச் சொல்லே உணர்த்தியவா றென்னையும் விழுங்கியெழுந்த வெள்ளவின் பிரமாநந்தசாகரத்தை யேதென்றுரைப்பேன் எனக்கருளிய நிலையிதென்றுமறிவித்தவாறு காண்க. எ-று. (உரு)

போதமொழியவருட் பூரணமாம் பூரணத்தில்
நாதாந்தவீடேநடுவானர்-பேதம்
பிறந்தாலுக்காமே பெரும்போனந்தவெள்ளம
சுறப்புத்தாமேயாஞ்சுகம்.

(இ-ள்.) தற்போதமற்று சிவமயமாய் நிற்றியென்றும் நாதாந்தமயமாய் மகார மணிபூரக நடுவிலமர்ந்து ஜகமயமாய் நிறைந்தும் இச்செகமும் சொற்பனம்போற் றோன்றியும் முன்போல் பிறவித் துன்பமயமாய் மறையாது தன்மயமாய் தாமாகிப் பொங்குமனந்தானந்தசாகரமாகியப்பாற்கடல் மென்மேலும் பொங்கி அதுமயமாக்கிக் கொள்ளவும் வினைப்பேதப்படி யெவ்விடத்திருப்பினும் அவ்வழியை திருவருள்விழியால் மறைத்து அவ்வருண்மயமாய் நிற்றலும் அவரதழகிய திருக்கூத்திவ்விதமென்றும் கூறியவாறுகாண்க. எ-று.

(உசு)

எத்தனையோ ஜென்மத் தெடுத்தாய்ந்த நூல்கள்பல
அத்தனையு நீயென்றகற்றியே - சுத்தநிலை
பாராய்பராபரமாம் பாராதுபார்த்திருக்கத்
தேராய்திருவருளிற் றேய்ந்து.

(இ-ள்.) அனந்தசாத்திரங்களை யெடுத்தாய்ந்த நான் யென்னை யாரென்று பாராதனந்த பிறவிதோறும் இவ்வண்ணமே வீணாட்கழித்து இளைத்து விடுத்தவினைக்கூறுரைத்ததோ இப்போதென்னை யான்பார்க்குமுன்போற் சுட்டற்கிடமின்றித் தற்போதந்தேய்ந்து சிவமயமாகிப்பாராதுபார்த்துப் பரப்பிரம்மவெளியாகி அருட்போதமே தோன்றும் இச்சுத்தநிலையே யீதென்றறியா வறிவையிப்போதாசிரியரால் அறியவந்தெங்கும் பிரகாசியாய் விளையாடிநிற்கின்றேன் என்றுங்கூறுதலை அறிக. எ-று.

(உஎ)

சேர்ந்தேனேவள்ளல் திருவடியைநம்பியே
ஓர்ந்தேனுலகெங்கும் ஒன்றுருகி - நேர்ந்தேன்
திடந்தானெமக்கருளே தீர்ந்தநிலையாகும்
மடந்தானே ஐயர்மனே.

(இ-ள்.) திருவிழி ஜடாதாரமூர்த்தியாகிய பரமசிவமே வள்ளலெனத் திருவுருக்கொண்ட வாசிரியனைகட்கிமையாய்ப் பாராது பார்த்து உடற்குயிராய் பொருந்தி அவரதுபொன்னடிகளே கதியென்றுநம்பி உடலபொருளாவி மூன்றும் விடுத்தென்னையுமிழந்தொழியாதொழிந்தேன் பின்னர் கிருபாநோக்கத்தால் என்பாழ் பிற

ப்பே பொய்யெனவறிவித்து நீக்கிச்சின்மயவெளியாகி யெங்குமோ ருருவாகிநிறையும் அவ்வருளேஇடமன்றி ஆசிரியனை வேறுகாண் கிலேன் அவ்வருளே திருமேனியாகி தோன்றியவாசிரியர்முன் பேரிமையா நாட்டமாகி யென்னையுமறிந்திலன் அவ்வேகமயமாய் நிறையுமவ்வருளே ஆசிரியனெனவுங் கூறுதலை அறிக. எ-று. (உஅ)

மடந்தானேயைந்தெழுத்தின் மாறுநிலைக்குத்
திடந்தானேயைந்தைச் செபித்தான் - கடந்தானே
அறிவோர்திருவருளா லாறுறைக்கிட்டிப்
பிறிந்தார்பெறும் பிறப்பின்பேர்.

(இ-ள்.) இத்தூலதேகத்தின்கண்ணின்ற ஆன்மஸ்வரூபனாகிய ஓர் அக்கரமே ஐந்துபஞ்சாக்கரமாகிச் சிருட்டி, திதி, சங்கார, திரோபவ அனுக்கிரக ஐந்தொழிலாய் போய் தத்துவங்களை மெய்யோற் றோற்றுவித்து இருட்கேவலசகலமாகிய பிறப்பிறப்பைநடத்தி அவற்றுள் அந்திரியாமியாய் ஐந்துருவாகி நிற்கும் அப்பூரணனை மாறு தவ்வைந்தெழுத்தாலேயே அவனைநினையாமல் நினைந்துசொல்லாமற் சொல்லி அர்ச்சித்து இத்தூலத்தை அவ்வான்மஸ்வரூபன் பிரிகிற பரியந்தம் உள்ளபடிசாதனைசெய்து அவற்றைஅடைந்த அடியார்களுக்கும் பணிவிடைசெலுத்திநிற்கவேபேராநந்தமாகியசுகாநந்த போகம் தனக்குத் தானாய் ஓர்கணத்தில் மறைத்துக்கொள்ளாதோ தன்னையறிந்தன்றோ பிறப்பற்றொன்றும் வற்புறுத்திக்கூறுதலை அறிக. எ-று. (உகூ)

போற்றூர்பூதம் பிறப்பற்றூர்பேர்முடிந்த
ஊற்றூர்பாழி னுருவெளியே - பேரில்
திகம்பரியாயடுந் திருக்கூத் தறிய
அகம்புறந்தன்னையறி.

(இ-ள்.) சிவமென்றுந் தானென்றும் இரண்டற்றவிடத்தே எண்பத்துநான்கு நூறாயிரலக்ஷபேத உருவும் வெறுஞ்சாலப பொய்யாய் தோற்றுமோர் அகமாணவமாயையே அச்சொரூபத்தில் சொற்பனகற்பிதமென்றும் அவையே முப்பாழாய்விரிந்து மோர்சொரூபாநந்த சிதாகாசவெளியாய் நிறைந்தும் சின்மய திகம்பரி

யாகி தாம்தாமென்றும்திருநடம்புரியும் ஈசுராது அழகிய திருக்கூத்தை அறியவெனில், உன்னை நீயே அறியென்றும் உன்னை அறியாதனந்தசாத்திரங்களை ஆராய்ந்து பசுங்கிள்ளையைப்போல் சொல்வதறிவதன்றி அவனை அறிய முடியாதென்றும் அவனை அறிந்தால ஆனந்தலாபமென்றும் அவைகளை அறிந்த நீஉன்னைநோக்கி திருவருண்மயமாய் அசைவற சும்மாயிருந்தபடியே நில்லென்றும் அவ்வினையேஉன்னைவீடடைவிக்குமென்றும் கூறியவாறுகாண்க எ-று.

அறிந்தாரோதன்னை யறிந்தோரறிவாய்
பிறிந்தாருருவருவப் பேற்றை - அறிதல்
பிறவாநெறியாம் பிறழாவிமையே
குறிதானறியாக்குணம்.

(இ-ள்.) தன்னைத்தானறிந்து பிரம்மமயமாய் விளங்கும் மெய்ஞ்ஞானிகள் பேறறிவாய்நிறைந்து ரூப அரூப ரூபா ரூபமாகிய தூல சூக்ஷமகாரணங்கள் நீங்கி அவ்வறிவே அருள்ஞானபானுவாகி யெவ்வுயிர்க்கும் இர்தயகமலத்தில் ஆடிநிறைந்தும் இமையாநாட்டமாகிய சிவயோகமே சிவமயமாய் நிற்பான்றி துவிதபாவனை தோற்றுவதின்றென்றும் அவ்வேசவறிவாய் சுட்டற்று சும்மாவிருப்பாரென்றும் தன்னைத்தானறிந்த அத்வைத நிலையீதென்றும் கூறியவாறுகாண்க. (ருக)

தெரியாதுதன்னைத் திகைத்திருந்தேனை
நிருவாணமாக்கிநிறைத்துத் - தெறிவாய்ப்
பிறியாதுவைத்தநிலை பேசாதமோன
மறிவார்பிறப்பே தவர்க்கு.

(இ-ள்.) தத்துவங்களை அறிந்த அறிவே அறியாமையாகி நின்ற நிலையே அருளறிவாகி யாவையுங்கவர்ந்து ஞானசூரியனாகியும் அவ்வருளறிவே சத்துசித்தானந்தமயமாய் தோன்றியும் அவற்றை அவ்வருளாலறிந்து அதுமயமாய் சுட்டற்று யெங்கும் வியாபியாய்பெரிய பாற்கடல் எதிர்த்து தன்னை மூடிக்கொண்டதுபோல் பேரானந்தமே தோன்றுமெனில்,அவ்வானந்தத்தையும் அறிந்த வருட்போதமும்போய் ஆனந்தாதீதமாயிரண்டற்றடங்கும் பேரறிஞருக்கு பிற

விக்கேதுவாகிய ஆகர்மியசஞ்சிதம்யின்றென்றும் தோன்றியும் தனதுமித்தையென்றும் தாம் தாமாகி நடனம்புரிவரொன்றும் கூறியவாறு காண்க (எ-று.) (௫௨)

பிறப்புமிறப்புமற்று பேருருமற்று
மறப்புநினைப்பும் போய்மாண்டு - இறக்குமிடம்
ஆனந்தமென்பதா மண்ணுக்கடைவீட்டு
தானந்தந் தாமே சரி.

(இ-ள்.) ஓர்காலத்துதித்து ஒடுங்குவதின்றி என்றுமுள்ளதாகி ஈரோமூலகுக்கும் பகுத்து ஊட்டுவிக்குஞ்சாயுச்சியப்பெருங்கடல் கயிலையங்கிரியினின்றும் இவருக்கு நேரே மடைதிறந்து பாயுமெனின், இன்னம் எந்த முத்திசுகத்தைத் தேடுவதொன்றும் சகல யின்பமெல்லாம் திரட்டிஒன்றாய் தானே ஓரின்ப சொரூபாதீதரொன்றும் சகல புவனசாராசரங்களுக்கும் நேர்வழியாகியமூலாதாரத்திலின்றும் ஞானகாண்டத்திற்கெழுந்தருளும் பூரணாநந்தஞானசூரியனொன்றும் ஆங்காங்கு அவ்வண்ணமே நிறையும் அனந்தானந்த சொரூபியென்றும் சிவனே யிவனென்றும் வேதாகமங்கள் கோஷ்டிக்குமெனின் அவ்வானந்தமயபூரணார்த்தத்தை பஞ்சகர்த்தாக்களின் இன்பத்தைக்கூறினும் யிவற்றைக்கூறமுடியா மவுனாதீதமாய் திரிவரென்றுங்கூறுதலைகாண்க. (எ-று.) (௫௩)

தானேயண்டாண்டந் தானாகித்தானமெங்
கோனையறியாமாயக் கோட்பிறவி - தானே
மறைத்ததருளை மறந்தார்மறையுள்
குறித்தமொழி யென்றேகுணம்.

(இ-ள்.) அணுவிற் கணுவாகியும், அண்டாண்டங்களும் நிறையுமோர்ஸ்வரூபராகியும் உடற்குயிராய் நின்ற ஆத்மஸ்வரூபனை அறிய ஒட்டாது அனந்தபேதத்தாலும் மறைத்து, அவற்றைக் கடந்து அறிவோமெனில் சூக்ஷ்ம தேகத்தாலும் மறைத்து அவற்றையும் நீக்கி அறிவோமெனில் காரணமாயையால் மறைத்தும் யிட்படி அனந்தப் பிறவித் துன்பத்தாழ்ந்த வினைக்கூறொத்த விடத்து காருண்ணியத்தால் திருவுருக்கொள்ளும் பூரணரை வேதாகமங்

கள் கூறுமல்கூறும் அவ்வேத முடிவினது ரகசியார்த்தத்தை அருளே உருவாகி அவ்வருளாலறிந்து. பிறவியையும் பிரபஞ்சத்தோற்றத்தையும் கானற்சலம்போலும் சொற்பனகற்பிதம்போலும் ரூபக தரிசனஞ்செய்து நீங்கி அதுமய்மாய்விளங்கும் சிவன் முத்தியினிற்பான்றி ஓர்கால் மறந்து மறுபடியும் அவற்றை அறிந்துக்கொண்டிருப்பரோ வென்றும் கூறுதல் அறிக, எ-று. (௯௪)

ஓர்ந்தாரனந்த முருவெளியாப் போவதனைத்
தீர்ந்தார்வினைப்பேதச் சென்மங்கள் - தீர்ந்ததால்
தானேதானாகித் தானந்தமானார்க்கிங்
கூனந்தானுண்டோவுரை.

(இ-ள்.) அனந்தபேதத்தில் வஸ்துவை உபாசித்தவினைக் கூறெருத்து தன்னை உள்ளபடி அறிந்து அதுமயமாகி தீர்ந்தாரன்றோ இப்பிறவிப்பெருங்கடல் முன்விட்ட குறையால் சஞ்சிதகன்மபிராரத்வம் தொடர்ந்தாலும் சுத்தாசுத்தமென்றும் பகுப்பின்றி காட்டுத்தீய்ப்போல பற்றியும் பற்றற்று சூரியனொளிபோல் யாவையும் பூரணத்திற்கூறாக்கி அப்பூரணத்தில் மறைந்துகிடப்பரன்றி அதனைப்பற்றவேண்டுமென்ற சிந்தையும் விடவேண்டுமென்ற சிந்தையும் இன்றென்றும் இத்தேகாதியால் நேரிடும் இதாகிதங்களையின்னதென்றும் அறியாஅத்துவிதியென்றும் கூறுதலை அறிக, எ-று. (௯௫)

உறப்பால்வினையி னொழிவுண்டோமாயப்
பிறப்பாகியெங்கும் பிணிக்கும் - அறத்தால்
துறவார்துறந்தெவையுந் தூயநிலையாகார்
உறவாமோ ஞானமெனுமூர்.

(இ-ள்.) துவிதாகாமியமாகிய சுட்டுப்போதமும் மேற்பிறவிக்கு மூலையாயிருந்து துன்பசாகரத்திற்கு இழுக்குமெனில் அப்போதத்தால் யெத்தநிட்டையைக்கூடி அதனைநீக்கவல்லர் அச்சுட்டுப்போதமே கணப்போதேனுமில்லாபிறப்பிறப்பென்றும் திருவருளை அடைந்தமெய்யடியார் உரைத்த உபதேசவாக்கியங்களை உட்கொண்டவர்களுக்கு வீடென்றும் அவற்றை நம்பா துவிதபாவனையால் கெடுத்து பகுத்தமனமே மேல்பிறவிக்கு வித்தாகுமென்றும் அறி

னவற்றை பகுத்தறிந்து விடுசேரவேண்டாவோ வெனில், அனுபவஞானமின்மையால் கூடாவென்றும் தற்போதமாண்டு செத்தவரைப்போல்கிடந்த நின்மலாவத்தையில் தற்றெரிசனமுதலியனவருளறிவிக்க அறிவதே அன்றி மனவாக்குக் கெட்டாதென்றும் கூறுதலை [illegible]க. எ-று. (௬௯)

குறை[illegible]லருளுங் குறையாகுஞானம்
மறையாதியும்மறியாமார்க்கந் - திறவா
தருளேயுருவாகு மாசாரியன்முன்
பொருளானார் தாம்பூரணம்.

(இ-ள்.) தற்போதமாண்டு உன்மத்தனாய்க்கிடந்து திருவருளை அடையாத தபக்குறைவாலன்றே அநந்தவேதங்கள்கூறியும் அவற்றையின்னதென்று அறியப்படாத மெய்ஞ்ஞானமார்க்கம் புலப்படாமல் தடையாய் மறைத்ததன்றே தற்போதம் அத்தற்போதமாண்ட சுத்தநிலை அனந்தகோட்டியின் பரிபாகத்தால் வாய்க்குமெனின் அருளே உருவாகும் ஞானாசாரியர்முன் னிலையில் இரண்டற்றுப் பூரணமயமாய் நிற்பரென்றும் கூறியவாறுகாண்க எ-று. (௬௭)

பூரணாநந்தப் பொருளமைந்தவாறேதான்
காரணமாம்வள்ளலருட் கண்ணோக்கு - காரணன்றா
னென்னைய்நேர்தற்கோ வென்முனெழுந்தருள
தன்னையறிந்தே னதனாற்றான்.

(இ-ள்.) இப்பூரணாநந்தோதயமென்னும் பேரறிவாகிய ஞானசூரியனை யாதோவெனில் காரணசற்குருவாகிய வள்ளலார் அருள்நோக்கே விஷ்ணுமயமாகிய மனமாதியால் ஆட்டிவிக்கும் திருக்கூத்தை ரூபகதரிசனம் செய்வித்து அவற்றைத்தானன்றென்று நீக்கி சுட்டற்றிருந்தபடியே எழுந்தருளிய அம்மெய்ஞ்ஞானசூரியனை பின்னும் சுட்டற்கு மனமாதிதத்வம் ஞானாக்கினியால் எரிந்து மருட்ப[illegible]மனில், அறிவதெங்ஙனமென்றும் அறியமுன்போல் மனமாதி[illegible]விப்பதின்றென்றும் அருணோக்கன்றி அறியாவறிவாகி நிற்ப[illegible]த்தநிலையென்றும் அவற்றால் உதயமாகிய பூரணாநந்தோதய சாகரமே தனது சொரூபமென்றும்கூறுதலை அறிக, எ-று.

(௬௮)

தலநுழிந்தார்க்குத் தடையிலர்நந்தம்
மலபரி பாகக்காலம்வாரார்க் - கிலகு
வீணாய்மனத்துழல்வோர் மேலோர்விழற்கிறைப்போர்
காணார்பிறப்பொழிவைக் காண்.

(இ-ள்.) மெய்ஞ்ஞானசாரியனை அடைந்து தொ[illegible]க தற்பத அசிபதார்தயிக்கியப்படி அனுபவம்பெற்று அவ்வ[illegible]வாநந்த நடையுடையார்க்கு மென்மேலாநந்தமேவீடே தடையற்றுதோன்று மென்றும் அவற்றையடையாத அபக்குவர்களுக்கு மனமடங்குவதின்றென்றும் மலபரிபாக காலத்தன்றி பிறவித்துன்பம் நீங்குமாறின்றென்றும் கூறியவாறுகாண்க எ-று. (கூகூ)

சத்தியமேயெந்தாய் சகஜோதியானவருண்
முத்தியன்றோயான் மறைந்த மோனம் - நித்தம்
அகப்பேரருட்குநா மனந்தபாநந்தச்
சுகப்பேர்முடிவே சுகம்.

(இ-ள்.) ஜநஜோதியாகிய நித்தியயேகபிரமஸ்வரூபநிரதிஜயாநந்தவருண்மய சத்தியத்தில் இரண்டறக்கலந்திருந்தபடியே சும்மாயிருக்கும் மௌனமுத்தியாகிய நிலையை யிமைப்போதும்மாறுதனுள் மறைந்தொழிந்தேன் என்னைவிழுங்கி யச்சுத்தத்தி நின்றுமெழுந்த திருவிழி ஜடாதார மூர்த்தியாகிய பரமசிவத்திருநடனம் அநந்தாநந்தமும் சத்துசித்தாய் கண்டசுக போதமும் நழுவிக்கண்டறியா சுகாநந்தாதீதமயமே உண்மைமுத்திநிலையென்றும் அவ்வருண்மேலிட்டால் கூறியவாறுகாண்க. எ-று. (சo)

வெண்பா மாலை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

வேதாகமப்பொருள்.

வெண்பா.

வேதாகமப்பொருளாய் மேவியசெந்தேன[illegible]ந்தி
நாதாந்தவீடுகற்[illegible] நாம்வாழ்வோ[illegible]க்கக்
கூட்டிலமனக்குரங்கைக் கொல்லாமறகொல்லவருள்
வீட்டிற்குடியாய் விடு.

வள்ளலெனும்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய

விருத்தம்.

வள்ளலெ[illegible]சோனே வந்தார்வந்தார்
 வகையறியா[illegible]னென்மேல் வைத்தார்பாதம்
துள்ளிதுள்ளித்திரியு மந்த[illegible]பாதப்பிராந்தி
 தொல்லையெல்லாமிருளற[illegible]வ சுட்டெரித்தும்
உள்ளபடியெனையறிவித் தோங்கு[illegible]மென்ற
 னுள்ளமதையறியவெ[illegible]ரு வுளவதாகக்
கள்ளமனதொன்றை யென்பின்விட்டார்விட்டுக்
 கைவல்யநிதித்திலெனை கலந்தார்தாமே.

பஞ்சரத்தினமாலை.

அறிவினிலையெவிடமென் றறியவேபாழ்ம்மன
 மடங்காது வறிவினின்றும்
அருளினிலையெவிடமென் றறியவெனில்பாஷ்பமது
 வதிகமாம் பொங்கபொங்க
குருகுநிலையெவிடமென் றறியவோவெட்டவெளி
 குறியாகும் வெளியினின்றும்
கூடவோநாதாந்த[illegible]பீடமீதம்பலக்
 கூத்தனந்தம்பேதமே
நெறிவேறிலாவ[illegible]யாற் சுழிமேவிநின்றுநா
 னிலையாதென்றென்றெண்ணவோ
நீக்கமறவிறைவருளி னிலைமையாநந்தமே
 நெக்குருகமன[illegible]யையும்
கருவியும்பின்றொட[illegible]ன்றவற்றறியாமை
 கலங்கவறிவுள்ள[illegible]
கவனவொளிபரவவரு மவுனகுருதேசிகா
 கருணைகண் ணுடைவள்ளலே,

தந்தைமதிநைந்திட வமைந்தவருட்சிந்தையோ
சராசரத்துட் சுடரதாய்
தானுத்தகர்ந்தொருக் கோணுவெழுந்தெவையுந்
தாமெனவே வந்தபொருளாய்
எந்தமலபந்தமூழ் வந்தகுறைசந்தையை
யெட்டியுதைப்போமென்றதா
யேகமயமாகியொரு பாகமுறவாகியும்
எண்ணரியபேதவுருவாய்
சொந்தமுடலாவிபொரு ளெல்லாகர்த்தெழுந்
சோதியாநந்த சொருவாய்
சுகக்கடன்மடுக்க சனனக்கட்றுலைக்கவுஞ்
சூக்ஷமெய்ஞ்ஞானசுடராய்
கந்தராயாறுவனா யாகியருளாயறிவின்
கண்ணாடிருந்தகுருவாய்
கவனவொளிபரவவரு மவுனகுருதேசிகா
கருணைகண்ணுடைவள்ளலே. (உ)

உள்ளபடியென்றுநா னூர்த்வமூகமாகியென்
னுணர்விழியைநாடிநாடி
யுறுகசடவென்பெலாம் பருவமிலைகூர்மையா
லுருவினுளவான பொருளை
விள்ளவேஆறுறு மீதிலறிவாக்கியும்
வெட்டவெளி தன்னினின்றும்
வேதாந்தசமரசச் சித்தாந்தமுத்திநெறி
வீட்டிலெனை கொண்டுசென்றுந்
துள்ளவேயாநந்த நிதமயனுகஅத்
துவைதவிழி தன்னில்வைத்துந்
தூங்காததூங்கியே சும்மாயிராநின்ற
சூக்ஷமெல்லாம் புகன்றும்
கள்ளமன தா[illegible]
கலங்கவறிவுள்ளாகியே
கவனவொளிபாவவரு மவுனகுருதேசிகா
கருணைகண்ணுடைவள்ளலே, (ந)

ஆத்மதீபப் பரஞ்சோதியா யெங்குமரி
ஓமநமசிவாவென்பதாய்
யருளுருவிலாசமா யுருவைந்துகோசமப்
பாலுமாய் யனுகாமமாய்
சோற்று[illegible]நத்தியி லிருந்துமறியாதவொரு
சோதிமனோசொருபவெளியாய்
துலங்குமறிவைந்தாலும் யாராலுமறியாத
துரியவாழ் வப்பாலுமாய்
ஏற்றுமொருகோடிமறை யாலுமறியாதவொரு
வேகமொழி யோகவொழிவில
ஈதெனுமுணைக்க குருநாதனுமுநிக்கிலோ
யேதெனுமுணைப்ப துளவோ
கரற்றுமனமாயையொடு தூற்றியெனையாண்டகுரு
கங்குல்பக லற்றவிடமே.
கவனவொளிபரவவரு மவுனகுருதேசிகா
கருணைகண்ணுடைய வளலே. (சு)

அண்டபகிரண்டமு மடங்கவொருவிழியினு
ளடங்குவது நிருவிகற்பம்
யாருமறியாமலுரு பேரறிவதாகிவெளி
யாடுவது நிருவிகற்பம்
கண்டபலபொருளெலாங் கைக்கனியதாகமுன்
காண்பதே நிருவிகற்பங்
கலைகளரண்டோடாமற் சட்டுமோருமையைக்
கலப்பதே நிருவிகற்பம்
உண்டுண்டுலகிரண்டு துண்ணமடையோடவா
யுண்பதே நிருவிகற்பம்
ஒருமூன றுகாலமிமையாதவிழியொன்றிலே
யுளவறிதல நிருவிகற்பம்
கண்டவுருவெளியெலாந் தானாகிநிற்குமொரு
கங்குல்பக லற்றவிடமே

கவனவெளிபரவவரு மௌனகுருதேசிகர
கருணைகண்ணுடைய வளவே. (௫)

பஞ்சரத்னமாலை முற்றிற்று.

ஆநந்தக்களிப்பு கண்ணி.

இராகம் நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

குறிப்பு.

தான்றானே தான்றானே தானே தானே
தான்றானே தான்றானே தான்றானே தானே

பல்லவி.

சத்தியமாம்பொருட் டானே தன்னைச்
சாற்றியநான்மறை முடிவிற்போனே (தான்றானே)

சரணங்கள்.

கலைாண்டினாலொன்று ஆணி - மூனைக்
கயமேறிக்கொண்டமுதுண்டிரு ஞானி
நிலையறியார்மலக் கேணி - கண்ட
நிலையருளாய்முடிநின்றதே வாணி - சத்தி (௧)

என்னபடித்தாலும் வீணே - அதில்
எய்தாதெங்கோனருளின்ஞமுங் காணே
சொன்னதாழ்வினையிருந் தோனே - வந்து
சொக்கினாற் பின்னுஞ்சிவமேது தானே - சத்தி (௨)

தோணுமோநாதாந்த வீடு - தன்னை
தாண்டியிழுப்பதுரையெங்கோன் பாடு
காணுமோகற்றுமென் கேடு - குண்டலி
கைகாட்டினாலன்றோ சாணவாம் வீடு - சத்தி (௩)

குண்டலியேதுதி தானி - கொண்ட
கோரணிகூத்தின் குறிகண்டோன் ஞானி
சண்டனுமானதுவே நீ - வேறோர்
சண்டன்வராமுன்னர்செத்திரு மோனி - சத்தி (௪)

எல்லாமுடிந்தது வாமே - ஐய
னென்றுவுரைப்ப திறந்திரு தாமே
சொல்லாவனுபூதி யாமே - அதை
சோதிக்கத்தான்வேறு சூதாகிப் போமே - சத்தி (ரு)

பஞ்சாக்ஷரமாய் விளங்கும - பர
மார்த்தசொரூபத்தைப் பாராது பார்த்து
துஞ்சாமற் றுஞ்சிக் கிடந்தேன் - அந்த
தூயவெளியருடிதிருமேனி கொண்ட - சத்தி (சு)

நில்லும்நில்லென றெந்த னுச்சி - [illegible]
நேரிருபெற்றுளே நேரேயிருத்தி
சொல்லாமற் சொன்ன மொழியே - கலை
சொக்கமூலச்சுழி புக்கிக்கிடந்தேன் - சத்தி (எ)

அங்கென்றெழுந்ததும் வாசி - குண்டலி
அவ்வீடுறைந்தழகா புரிக்குள்ளே
சிங்கொன்றிருந்த தறிய - சிவ
சிதமபரக்கூத்ததின் றில்லையி னின்ற - சத்தி (அ)

நின்றேநீயார் சுவாமி யென்றேன் - ஐயன
நீயேயறியது நீயோநே யென்றுஞ்
சென்றுன்றிருக்கோவி லுள்ளே - யானுஞ்
சென்றுப்பின்னின்றச் [illegible]வமயவீட்டில் - சத்தி (கூ)

ஆத்தாளுமப்பனு மாங்கே - அவர்
ஆடாமலாடு ம[illegible]கை யறிந்தேன்
பார்த்தால் சுழிமே லாதாரம் - அந்த
பரிபூரணாநந்த பரசிவ சாரம் - சத்தி (௧௦)

சென்றதும் நாதாந்த வீடு - அந்த
சிவகயிலையான சிதம்பரவீடு
வென்றதும்மாமாயைக் கூடு - உச்சி
வெளியொளியாகி விளங்கிடுமநாடு - சத்தி (கக)

செல்லாமல்சென்ற மடத்தில் - ஐயன்
செந்தண்மலர்பதஞ் சென்னியிடத்தில்

வல்லோரு மெல்லோரும் போற்ற - வள்ளல்
வாசிவழிச்சென்றேன் தேசிகனென்ருன் - சத்தி (கஉ)
தர்க்கஞ்செய்வாரொரு கோடி - அந்த
சண்டாளர்க்குஞ்சத்தி தானுண்டா மோடி
வற்புறுமெங்கோனை நாடி - பொருள்மூ
வைத்திடிலருள்விளையாடலாங் கூடி - சத்தி (கங)
ஏதுபிறந் திறந்தாலும் - கழுதைக்
கெடுத்துபதேசத்தை யீய்ந்ததி னாலும்
வாது கோழி மயிலாமோ - அருள்
வாயமலற்றேனுகர் வண்டெனுமாமோ - சத்தி (கச)
ஆயர் தநூல்களை யாய்ந்து - மூடர்
அருள்குருவாக்கினை யறியர்மன் மாய்ந்து
ஓயாப்பிறவியிற் சாய்ந்து - துன்பால்
உருவாகியுருவாகி யழிவதோ வாழ்ந்து - சத்தி (கரு)
ஏதேதுரைத்திடி லாமோ - தர்க்க
வீனர்க்குமைய னிரங்குவர் தாமோ
வரதொருசூதொன்று மில்லா - அன்பர்க்கு
வாய்த்திடுமாநந்த வாழ்வெளி தாமே - சத்தி (கசு)
எல்லாருமீசையுள் ளோரோ - அரு
ளெண்ணுர்களோர்கோடி மயிர்நிகப்பாரோ
பொஷ்லாக்குதர்க்கத்தி னோரோ - நாளைப்
பிடித்தெமன்கட்டையில் பேசுவ ரியாரோ - சத்தி (கஎ)
பொல்லாதிருமூட வஞ்சர் - நாளை
புழுமயமாகிடும் பொய்ம்மலக் கூட்டை
வல்லாருணைப்படி தேர்ந்து - தன்னை
வழிப்படேல்கிட்டுமோசற்குருப் பாட்டை - சத்தி (கஅ)
போதவொழிவினி லென்ருன் - அந்த
பூரணமானப்பொருணிலை யொன்றும்
நாதாந்தவீடறி யென்ருன் - அங்கே
நானேநீயொன்ருகும் நாட்டமே யென்ருன் - சத்தி (கசூ)

சொல்லவுஞ் சொல்லற நின்றான் - அந்தத்
தூய்வெளியாகவே றூங்கி யிருந்தும்
இல்லையனாதியே யென்றான் - பின்னு
மெழுந்தருளாகி யியம்பினா னன்றோ - சத்தி (௨௦)

எந்தைசம்பந்த ரருளால் - எனக்
காகவெழுங் கண்ணுடை வள்ளலார்தம்
பந்தமாகின்றதெல்லாம யார் - என்ற
பரமிதியாநந்தம் பரவினதே தேர் - சத்தி (௨௧)

ஆறுறுக்கப்புற மாங்கே - யானே
அறிவாயிருந்தருளுனது மாங்கே
சீறுமுகவள்ள லெங்கோன் - வந்து
திருவடியொன்றாக சேர்த்தது மாங்கே - சத்தி (௨௨)

ஆநந்தக்களிப்பு முற்றிற்று.

5346

எறும்புகடை.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

குளகம்.

எறும்புகடையானைமுதற் பேதாபேதம்
வெண்பத்து நான்குமுதலெல்லா மொன்றாய்ச்
சுரும்பினனுவாகி சுழிமுனையிலாடுஞ்
சூக்ஷமதேதானாகி துரியாதீதக்
கரும்பமுதமுண்டு வருட்கண்ணான்மூன்று
காலமெலாஞ் சமாதிதனிற்கண்டுகொண்டே
யிருந்தபிரானெங்கோனே யென்னுளாக
வெழுந்தவொரு மொழியதத்திலிருந்ததாலே
அறிவறிந்தோம் திருஞானசம்பந்தர்பொன்
னடியறிந்தோம் சர்வாகமமதுதானனக்
கருவறிந்தோம் காரணமேபூரணாநந்தக்
காக்ஷியறிந்தோம் கனகசபையைநாடி
திறையறிந்தோம் சிவபாஞ்செழுவான்சோதி

தீபமறிந்தோம் மமுதமுண்டோம்வாழ்வின்
குறியறிந்தோம் திருவருளுண்மறைந்தோ மூலக்
கூத்தறிந்தோம் தனையறியார்க்கூறறிவதன்றே.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பாருங்கள்பூரணா நந்தம்பாரும்
பரமகுருவள்ளலருட் பாலிப்புண்டாம்
யாரப்பாவனுபவா நந்தோதைய
வாச்சரியஞ் சம்பந்தாருளாற்சொல்ல
தேரப்பாநூலையருட் டே வியாலே
தெக்ஷணாமூர்த்தியிடந் தெரியும்பாரு
கேரப்பாகயிலையிடம் நீயேயாவாய்
நீடூழிகற்பங்கோள் நினவிலாகும்
சாரப்பாபூரணமே சாரநீயும்
சத்துசித்துந்தன்மயத்துட் சர்வாநந்தம்
வேரப்பாவேறாகி வேதாந்தத்தின்
வெளியாகியொளியாகி வீடுமாகி
பேரப்பாபெற்றவற்கே பிறவியேது
பேசாதவிடமாமே பேரா[illegible]தக்
கூரப்பாகுருமொழியா[illegible] குறித்[illegible]குக்ஷங்
கூறினேன் குரு[illegible]ரு[illegible]ல் கூர்ந்துப்பாரே

இதுவுமது.

பாரப்பாபத்தருண்டு சித்தருண்டு
பண்பானபரசிவன் முத்தருண்டு
காரப்பாஅவர்கள்சொல்லைக் கருத்திலு[illegible]
கயிலாயபிடமுனக்குக் காணியாகும்
யார[illegible]பாவெனவுமதை யகங்காரத்தால்
அறியாமல்யெதிர்த்துமிக வநாத்[illegible]தடிச்
சேராதேபாழ்நரகு ஜென்மாஜென்மம்
தீராதகன்மவினைத் தீராதப்பா
ஊரோதுப்பேரோது உற்றோது

ஒருவர் துணையில்லையப்பா உற்றுப்பாரு
போரேதுநின்றதத்வம் பொய்தான்பொய்யாய்
போகாதேஏமசிடம் பொறுப்பதேது
தோப்பாசிவமயத்தை தினமும்போற்றித்
தேர்ந்தடியாரடிசேர் திருவருளைநோக்கிச்
சாரப்பாசற்குருவின் வழித்தாய்ச்செல்ல
சாயுச்சபதமதுவுஞ் சாருந்தானே.

இதுவுமது.

பாப்பாபாரபரத்தா யென்னுளாச்சு
பதினெட்டுசித்தர்நட மென்னுளாச்சு
பேரப்பாவகத்தீச ரென்னுளாச்சு
பிரமனுமால்ருத்திரரு மென்னுளாச்சு
ஊரப்பாசகலவுயி ரென்னுளாச்சு
உணாகோடிமந்திரங்க ளென்னுளாச்சு
தேரப்பாவைஞ்செழுத்து மென்னுளாச்சு
சிவகயிலைசிதம்பரமு மென்னுளாச்சு
கூரப்பாகோடிமறை யென்னுளாச்சு
குருசீடன்மறைந்தவிட மென்னுளாச்சு
மேரப்பாபொதிகைகிரி யென்னுளாச்சு
மேருவலசூர்யசந்திர ரென்னுளாச்சு
சாரப்பாவருள்மயத்வந்த சார்ந்தகாலே
தாய்சிறுபெண்ணுளவரைக்கச் சார்ந்துக்கொண்டு
ஏரப்பாமேல்வீடு ஏறிநோக்க
இருந்ததெதுவந்து நியாயமெங்குக்காமே.

இதுவுமது.

சித்தனென்றபேர்யார்க்குத் தெளிந்திட்டோர்க்கு
ஜெகமாய்சைசித்தானேன் சித்தனாகும்
கர்த்தனென்றபேர்யார்க்கு கடந்தஞானி
கருவவானேன்காரணனே கர்த்தனாகும்
பித்தனென்றபேர்யார்க்கு பிரமானந்தன்
பேசாதயிடமறிந்தோன் பித்தனாகும்

முத்தனென்றபேர்யார்க்கு மவுனயோகி
முப்பாழுமொன்றானோன் மவுனியாகும்
சுத்தனென்றபேர்யார்க்கு சிவயோகிக்கு
சுருதிமுடித்தானோன் சுத்தன் சுத்தன்
சத்தனென்றப்பேர்யார்க்கு சர்வக்கியானி
சத்யமேதானானோன் சத்தனாகும்
நித்தனென்றபேர்யார்க்கு நிறைந்தஜோதி
நிர்விகற்பயந்தானோன் நித்தனாமே
இத்தனையுந்தானாகி யிருந்தலொன்றே
யெனையழியசின்மயந்தாம் யெங்குந்தாமே.

௨

காரணோபதேசவிளக்கம்.

பூரணாநந்தஸ்வரூபமே அறிவென்னு ஞானசூரியனாகவெழுந்தருளிய வெனது சற்குருவே நமசிவாயம்.

மோனாதீதவஸ்துவினது தாரதன்மியமும் பக்குவர்கள் தம்மையறியுமியல்புங் கூறுகின்றது.

ஸ்வரூப சாக்ஷாத்காரபலத்தையடைந்த ஞானிகளது நூல்கள், பஞ்சாக்ஷரவஸ்து வாக்கியசம்பிரதாயம், அதுபஞ்சமலத்தாற்மனோ வாக்குக்கெட்டாவருட்போதம், ஆதலால் அதனைவிசாலமாய்ப் பிரசங்கிப்பதல்ல அஃதெப்படியெனில் ஒருபக்குவன் தனு கரண புவன போகங்களாகிய ஊனாதிகளைவெறுத்து ஞானசிரியனையடுத்து பனிரண்டுவருடஞ் சிகிச்சைசெய்வானெனகினும அவனது பக்குவநியதிகளைந்து தற்போதமழிய சுகாநந்தத்தைப் பெறும்ரகசியார்த்தங்களில், ஒருநுட்பத்தைச் செவியினிடமோதுவது அபரூபம், அதுவிட்டகுறையாயிருக்கும அப் டிச்சொல்லியும் மற்றோரிடஞ்சொல்லாமலிருக்கவும் திருவடிக்கண்ணையிக்கியமாக்கி சிவத்தோடும் சேர்த்துக்கொள்வதேயொழிய அவனைவெளியிற்றிருப்பவு மவனதுதத்போதம ஜீவிக்கவும் விடுவதில்லை யாதலி னவற்றை விசாலமாய்ப் பிரசங்கிப்பதில்லவென்று முன்சொல்லியதுதான் அவ்வேதாந்தவாக்கியங்கள்

தேகாதியிந்திரிய பரியந்தம்பற்றி யெரிந்துநிற்கும் பக்குவர்கட்கேயன்றி மற்றயருக்கல்ல அப்பக்குவர்கள் திருவருளினால் வஸ்துவை யதார்த்தமாயறியும்படிக்கெனது ஞானாசாரியரது விழிநோக்காகிய திருவருட்போதத்தால் அவ்வஸ்துவைக்குறித்தே யொருநுட்பக்கருத்தைச்சொல்லுகின்றேன.

சிவம் என்பதென்ன என்னவெனில் தூரத்திலில்லாமல் இத்தேகத்துக்குள்ளிருக்குஞ் சீவனைதே சிவமென்பதாம். அஃதெப்படியெனில், இச்சீவன் பஞ்சாவத்தையையுற்றால் சீவனும் பஞ்சாவத்தையைபற்றால் சிவமாம்.

எப்படியெனில் இந்தபிரணவஸ்வரூபமான அத்வைதசீவனுடைய சன்னிதானமே தனமாத்திரைகளாம் இதே நானென்றெழுகின்ற அகம் என்னுந்தற்போதம் யீஞோகாரமாய் அந்தக்கரண விருத்தியாகி யிந்திரியவழிச்சென்று புவனபோகங்களைப் பொசிக்க சாக்கிரசொப்பன சுழுத்தி ஆகிய இம்மூன்றவஸ்தையிலுந்தோய்ந்து பஞ்சவன்னப் படிகம்போல் தத்துவமயமாய் சுகதுக்கங்களை கிரகிக்கிறபோதே ஜீவனும்.

இந்த சிவன் சிருட்டி, திதி, சம்ஹார மென்னும் பிரயோகமூன்று தொழிலும் தானேதானாய் தன்க்கேதுவாகிய இந்தசாக்கிரம் முதலிய பஞ்சாவத்தையினுந் தோய்ந்துபரிந்து நிழற்போலும் ஆகாய நிழற்போலும தோய்வற துரிய துரியாதீதமயமாய் நின்ற போது சிவமாம்.

தோய்ந்துஞ் சீவனாகி தோயாதுஞ்சிவமாகி தும்பிக்கைபோலும் நாவுபோலும் இந்தசிவமும் பரசீவனே காண்பானுங் காக்ஷியுமாய் சத்திசிவமென்றும குருசிடனென்றும் மிரண்டுமற மோனமென்றும் அத்வைதமென்ற போதமுமின்றி மோனாதீதமாக நின்றதே அந்தச் சிவாத்மஸ்வரூபசிவமாம்.

ஆதலால் இந்தசட்கரக்குள் பிரணவசொரூபமா ஆடி நிற்கும் சீவனைதே சிவமென்பதாம.

இந்த சீவனே சிவமாகில இஷ்டசித்தியைப்பெறலாமே அஃதெப்படியெனில், காந்தத்தினிடம் ஊசிபற்றுதல்போல சாந்தமென்

னுஞ் சிவசன்னிதானத்தில் அயமென்னுந் தத்துவங்கள் இந்த சிவமாகுஞ் சிவனையே தானு யபிமானித்து இஷ்டசித்தியை விரும்புவது இது தத்துவ தற்போதம் இந்த தத்துவ தற்போதம் நினைத்தபடி ஒரு அணுவை சிருட்டிக்கக் கூடுமா கூடாது வாக்குமனே அதீத அகோசரமாகியும் அரிபிரமற்குமெட்டாத அந்த சிவமாகிய சிவனே அணுவிற்கும் அணுவாகி அண்டகோடிகளுந் தானாய ஜலசந்திரனைப்போல மித்தையா ரூபங்களாய் விளங்கு இஷ்டசித்தியா யிருப்பதை அறிஞரறிவர் ஞானக்கண்ணினல் தனுவாதியாகிய பிரமவிஷ்ணுருத்திர மயேசுர சதாசிவமென்னுந் தத்துவகிரிகை மயமாய் துவித போதான்மாக்களின் ஊனக்கண்ணு லறியக்கூடுமோ கூடாது. அவ்வான்மாக்களையே ஜனன மரணமாகிய அந்த பூதியசக்கரத்திற்றினை பஞ்சவன்னப்படிகம்போல் மாறுமற் சுழற்றுந் திருக்கூத்தை யாவரறிவர் அறியவருந்தும் தற்போதமழிய ஞானசாரியனென்னு மருந்துகிடைத்தால் அரிய வருட்போதமுதயமாய் யிதுவே அதுவாய் இந்தசிவனே சிவமயமாய் நித்தியாநந்தமோக்ஷ மாகிய மோனத்தில் ரூடியாய் மோனநிதமே யாம்.

காரணோபதேச விளக்கம்.

முற்றிற்று.

விருத்தம்.

திருவான ஓரெழுத்தே சத்தியாகி
திகழ்சத்திதன்னில் சிவஞ்சனித்துமேவிக்
கருவாகுநாதவிந்தே சதாசிவனான்
கண்டுகொள்ள மண்ணும் விண்ணு மதுவேயாகி
உருவாகவாய்வங்கி மகேசன்மாயன்
உற்றநான்முகனும் ருத்ரர்பிரமம்
அருவாகுமைந்தருவு மொன்றாய்சத்தாய்
அண்டசராசரவருட் சித்தனந்தம்தானே.

இனி.

வஸ்துவிடுக்கம்.

சிவமே! இருக்கு எசுர்சாமம் அதர்வணம் எனக் கூறப்பட்ட சதுர்வேதமும் ஆறுசாத்திரமும் பதினெண்புராணமும் அறுபத்

துநான்கு கலைக்கியானமும் மனுஷிக்கியானமும் உபநிஷதமும் சிரவணம் மனனம் நிதித்தியாசனம் முதலிய வேதாந்தம் பிரக்ஞானம் ப்ரம்மம் அகம்ப்ரம்மாஸ்மி தத்தோம் அசி அயமாத்மா பிரமம் எனக்கூறும் இத்தவேதவேதாந்த சாரமாகிய ஆகமவாரண புராண இதிகாசங்கள் ஒன்றுக்குளொன்று யொடுங்கி ஒருவித்தாய்ச் சித்தானந்தமயமாய் நின்றதே அச்சீவனாகிய சிவமென்பது.

அனுபவத்தி லிகழ்ந்ததைச் சொல்ல நாவில்லை ஆதலின் பேசாமௌனமென்றுங் கூறப்பட்டதே அந்தவித்தாகிய சிவத்துக்குப்பெயராம். இது சத்து சித்து ஆனந்தம் என்றும் மூலாதாரமே ஓமென்றும்ஊமையென்றும் சத்ததன்மாத்திரை பிரம விஷ்ணு ருத்திர மயேஸ்வர சதாசிவமென்னும் அ[illegible]ரது அருட்டிரிகை ஐவரும் ஐம்பூதமும் சிவத்தினது சன்னிதானமானபடியால் ஐங்கரனென்றும் இதேமூலப்பிரகிருதி மாமாயைச் சத்தியென்றும் இவ்வைந்து பிரயோகத்துக்கும் காரணபீடமானபடியால் குண்டலியென்றும் இந்தஆறிடங்களையும் அதிட்டானசாக்ஷியாய் பார்க்கிறவரானபடியால்ஆறுமுகமென்றும் சிவத்தோடு கலந்திருக்கிறபடியால் பிராணவமென்றும் சீவனேவஸ்தானதால் சிவனென்றும் இந்த மூலாதாரவித்தாகிய சிவத்துக்குப் பெயராம். இன்னுஞ் சொல்லுமிடத்து மூலவித்தினது ஆகாமியதன்மாத்திரையே ஜீவதற்போதமே மனோகாரமாய் விஷ்ணுவென்றும் சத்தியென்றும்பேர்கொண்டு பேசவநியாமோனவஸ்துவை பேசுவிக்கவேண்டுமென்றும் வித்துக்குச் சித்தாய் மித்தையாரூபங்களாகிய எறும்புகடையானை முதற் பேதாபேதங்களாகி நால்வகையோனி யெழுவகைத்தோற்றம் எண்பத்துநான்குலக்ஷ பேதரூபங்களாய் வித்துவிளைய சித்துபற்பலவானது இடை யொடுக்கி சிவசத்தியானபடியால் சிவசத்தியென்றும் ஹரியென்றும் விஷ்ணுவென்றும் கூறப்பட்டதே. அந்த வித்தாகிய சச்சிதானந்த சிவத்துக்குப்பெயராம். தன் அகத்திருந்தும் ஞானிகளது ஆத்மதீபமாய் அறிவுக்கறிவாய் விளையாடிக்கொண்டு தன்னைவிட்டுப்பிரியாது ஸ்தூலதேகத்திலும் சூக்ஷுமதேகத்திலும் காரணதேகத்திலும் சாக்கிரமுதலிய ஐந்தாவத்தையிலும் தன்னைவேறாக்கி தான் தனிசாக்ஷியாய் விளையாடுமிந்த

சிவமே யாருக்குப்புலப்படும் அமைத்தபடி தத்தஞ் சுவாநுபவம் விளங்காமையின் மனவாக்காலும் ஹரிபிரமராலும் அறியப்படாத நிராமயமென்றும் நித்தியாநந்தஸ்வரூபமென்றும் இந்தசீவ சித்தாகிய சிவத்துக்குப் பெயராம்.

வஸ்துவிநோதகம்.

முற்றிற்று.

திருவெண்பா.

நானேநீயென்றதுவே நான்மறையெட்டாப்பொருளின்
மோனநிலையாய்முடிந்த முத்தியே - தானே நான்
ஆனவதீதமதா யண்டசராசரத்துந்
தானாயிருந்த நிதித்தான்.

பக்குவர்கள்
சென்றடையும்
முத்திவீடு.

உ

இனி.

இந்த சீவான்மஸ்வரூப சின்மயத்தை.

அடைவதெப்படி யெனில்.

பிறவித்துன்பமாகிய தனுபூதிப சக்கரத்தில் எண்பத்து நான்குநாறுயிர உடற்பேதத்திலும் மாறிமாறிச் சுழன்றவனுக்கு இப்போது சிவபுண்ணியமேலிட்டால் மலபரிபாக காலம்பிறந்து அதுவே இருவினைக் கூறொத்து ஒருருவாகி மந்தனென்றும் மந்தரனென்றும் தீவரனென்றும் அதிதீவரனென்றும் இநான்குபக்குவங்கட் குரிய சாதனசதுட்டய ஸம்பத்திகள் பெற்றும் இந்தபூமியின்கண் அவதரிப்பதாம் இருக்கு முதலியநான்குவேதமும் சொல்லுகிறது பிரபஞ்சத்தார்க்குமவேதாந்தஞ்சொல்லுகிறது பிபக்குவர்க்கேயன்றிவேறல்ல.

அஃதெப்படியெனில்.

ஆடானது தழையைத் தின்னுமன்றி கரும்பைத் தின்னுமோ யானைகரும்பைத்தின்பதுபோல் பக்குவர்கள் இதனைக்கேட்டுவாக்கு மௌனமாய் அகத்தெழுந்தற்போதத்தை சற்குருசிங்கையால் அவரது அருட்கே பதிகொடுத்து உள்ளபடி மௌனசித்தியைப்பெற்று வீடடைவர் பக்குவசாதன மிலாதவர்கள் சதாகாலம் வேதாந்தத்தைக்

கேட்டும் மலபரிபாகக்காலத்தாலன்றி பயனில்லையாம். அப்படியிந்த நான்கு பக்குவர்களாய்ப் பிறந்தகாலையில் வேதமுடிவாகிய சிரவணார்த்த மாவாக்கியமே சுருதி குருவாக்கின்படி சுவாநுபவமே யிப்பக்குவர்க்கோர்வினையாகி யுயிரைப்பிடிக்கும் யமனைப்போல் இப்பக்குவர்கள் புவனபோகங்களில் காணவிருத்தியாகின்ற பேர்தெல்லாம் இப்பக்குவவினையே ஞானம் புலப்படுகிற வீடாகிய விசாரஞானமென்னும் மெஞ்ஞானசாரியாது விழிநோக்காகிய ஞானக்கினியால் இவர்களது விஷய துவிதபோதத்தைச் சுட்டுசுட்டு இவர்களது சுகபோகங்களைக் கெடுத்துக்கெடுத்து ஈடேறவொட்டாது பழுப்பாகுந்தோறும் பொன்மாற்றுயர்வது போல் மெஞ்ஞானத்தை வெளிப்படுத்தும்பொருட்டு அந்தப்பக்குவ விசாரஞானமானது இடைவிடாதிவர்களைப் பாதுகாத்து விஷயங்களிற் செல்லவொட்டாம லிவர்களை யொருமிக்க விழுங்கவேண்டு மென்றும் இவர்களுடைய பஞ்சேந்திரியங்கள் ஒத்து வருவர்ன ஆகாமிய முளையாகும் அகவித்தைப் பதைப்பறவிழுங்கி சாகாமற் சாகவைத்து ஞானசாரியராகிய வஸ்துவினிடத்தில் கலந்துநிற்பதாம்.

நான்குவேதத்தையும் ஆராய்ந்து சென்றவன் யேதாவது கண்டானோ தன்னிழப்பே யென்னகற்று சாதிப்பானென்றும், என தாசிரியருளிச்செய்தது. [illegible]வமே விழுங்கிக்கொண்டமையால் யாதுங் காணவில்லையாம்.

இதுவே பக்குவர்கள் [illegible]த்துநான்[illegible]வத்தைகளையுங்தாண்டி தொம்பதார்த்[illegible]காயிக்கி[illegible]மும் தானன்றென்று நீங்கி அனந்தகோட்டியின் சஞ்சிதங்க[illegible]திப்பட்டொருங்கற்று போம். மலபரிபாக[illegible]நியதி யிஃதென்றும் இவ்விடம் விதியும் விட்ட குறையும் கூடுறுத்[illegible]டியால் இது தற்போதம் [illegible]ண்டவிடம் ஊசலற்றவன் வீழ்ந்தவி[illegible] மாதாரமானதுபோற் போதமிழந்தவனுக்குத் திருவருளாதாரமாய் விண்போகாது அரு[illegible] திருவுருக்கொண்ட ஞானசாரிய ரெதிர்த்தோன்றி யருட்போதனுப் இவனை யுயிர்ப்பித்து கைகாட்டுமுறையோடு திருவடிக்கைக்கியமாக்கி சிவத்

தோடுஞ்சேர்த்து ஈரேழுலகமும் ஒன்றாகித் ததும்பும் பரமானந்த வெள்ளத்தின் மூழ்கிக்கிடப்பதாம்.

பக்குவர்கள்.

சென்றடையு முத்திவீடு.

முற்றிற்று.

வாழிவிருத்தம்.

வாழ்கவேவள்ளல்பாதம் வையகமுழுதும்போற்ற
வாழ்கவேசாதனத்தின் வழிதனினிற்போர்வாழ்க
வாழ்கவேகுமரேசன்றா மாக்ஷிகண் ணுடையவள்ளல்
வாழ்கவேபூரணத்தின் வான்பொருளாகியெங்கும்
வாழ்கவேவடியர்க்காக வந்தெழுமவுனநாதன்
வாழ்கவேவிசாரஞான மரபதைப்ரயோகஞ்செய்க
வாழ்கவேயண்டகோடி மன்னுயிர்பலவுமென்றாழ்
வாழ்கவேபூரணாநந்தோதய மகிமைநூலே,

வாழிவிருத்தம் முற்றிற்று.

செய்யுள் அகராதி.

	பக்கம்.
அனுபவிக்	௭௧
அறிவாரொ	௭௭
அனுபவசு	௩
அமுதமுது	௧௭
அரும்பனு	௧௯
அண்டமுதல்	௨௭
அழியாதார்	௪௧
அன்றமா	௪௨
அ[illegible]வது	௪௫
அறிந்தாரொ	௯௦
அறிவிகிலே	௯௫
அண்டபகி	௯௭
ஆத்மதீபப்	௯௩
ஆனந்தம்	௮௪
ஆணப்பொ	௮௩
ஆரார்	௭௫
ஆயந்தி	௨௧
ஆமேபெரு	௮௯
இனிபொருக்	[illegible]
ஈதென்னமா	௪௦
உக்வென்	௭௯
உள்ளும்புர	௮௯
உறப்பால்	[illegible]
உள ஒன்றே	[illegible]
உள்ளட்டி	[illegible]
எறும்பு	௧௦௧
என்னதான்	௪௧
எக்காலம்	௧௩
எத்திசை கண்ணணிகள்	௫௮
எத்தாய்	௮௫
எத்தனையோ	௮௮
ஐயோவெ	௨௧
ஒன்று	௪௪
ஒன்றேபொ	௮௭
ஓற்ந்தா	௯௨
கட்டிமன	௯௫
கல்லாத	௧௪
கருணைநி	௯
கட்டிநீர்	௫௪
கண்ணுற்	௨௭
கருணும்	௮௯
க[illegible]ணை உபதேசம்	௧௦௪
கா[illegible]நீர்	௩௦
க[illegible]டிநய	௧௭
கருவாய் கண்ணணிகள்	௨௧
கூடங்க	௨௯
குறையேல்	௯௩
கெட்டார்	௭௮
கொள்ளுவீர்	௧௯
கோடானு	௧௩
சத்தியமாம்	௯௮
சகசோதி	௮
சத்திய	௯௪
சித்த[illegible]	௭௩
சிவ[illegible]யன்	௨௫
சிவனே	[illegible]
சிற்றை[illegible]	௫௫
சா[illegible]ன்	௧௦௩
சிரமணி	௭
சும்மாவி	௪௭
சுமக்கவரி	௨௫
சும்மாயிருந்த	௮௯
சென்மம்	௧௪
சேர்ந்தேனெவ	௮௮
சொல்லாது	௮௨
ஞானிமார்	௪௫

	பக்கம்.
தந்தைமதி	கூசா
தத்துவவி	சாஎ
தத்துவமு	அக
தனையேக	அஉ
தலமறிந்தார்	கூச
தாயாகி	சாசா
தானென்றும்	அ௩
தாநாகிஅண்	கூக
தில்லை	௩0
திருமால்	[illegible]ரு
தெறியாதுயி	[illegible]0
தேகத்தை	[illegible]
தேனுவடி	அக
நாடித்தி கண்ணிகள்	சசா
நானென்	௩க
நீயே	ருஎ
நின்றது	அரு
பதைபதை	உஅ
பட்டதொரு	ச0
பஞ்சைமெ	கஉ
பத்துநிரு	உ
பாரப்பாபக்	[illegible]0உ
பார்ப்பாபூ	[illegible]
பாசத்தி	உஎ
பாடவறி	[illegible]
பாராதிபூ	ருஎ
பாடவரு	எஉ
பார்ப்பாபரா	க0௩
பிறப்புமி	கூக
புலமை	ருசா
புண்யமெ	கக
புலமையாஞ்	எ௩
பூரணநந்த	கூ௩
பேரும்பொரு	[illegible]க

பேய்மன
பேறற்றூர்
பொல்லாத
போகுமே
போதும்போ
போதமொழி
மனமேமன
மனமெனும்
மயிர்கிசர்
மனமுருக
மடந்தாளெ
மாயாதி
மாண்டுரைத்தி
முத்தியெ
மூலப்பெறழு
யினிபொரு
யிருகண் கண்ணிகள்
யிதென்ன
வந்தோம்
வய[illegible]ரு
வஞ்ச[illegible]ன்
வழிவி[illegible]ா
வந்தால்
[illegible]னாரி
வ[illegible]ாது
வாசியை
வாழ்தல்
வள்ளலெ
விண்ணை
வினைக்கூரு
வீண்கவிகள்
வேதமுதல்
வேதாகமப்
வையும்விரத

பிழைத்திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உ	௩	நின்	தங்
௩	௧௭	முளையை	முளையாகியதற்போ தத்தை
௬	௩	கூயிக் கூயி	கூவிக் கூவி
௸	௫	தந்து	தந்த
௧௩	௩	மனக்கண்	உணர்கண்ண
௸	௧	வறியாவேனை	வறியேனுமை
௨௨	௧௭	விருளேன்	வருளென்றெய்தும
௸	௨௦	புகுத்தாய்	வகுத்தாய்
௨௩	௧௦	ஒழியாய்	ஒழிப்பாய்
௸	௨௧	வைபத்ர	வைத்தான்
௨௪	௮	நீ	மென்
௸	௧௨	தி	த
௨௮	௧௩	சொல	சொல்வ
௨௯	௧௫	முத்தர்தம்மினும்	முத்தர்களியாதினும்
௸	௮	வள்ளலே	வளலே
௩௪	௫	உந்திக்குமேல்	உந்திநடுமேலாகி
௩௯	௧௯	அடைந்தால்	அடைந்தார்
௸	௨௦	வாடி	வாட்
௸	௸	வேவா	விதியோ
௪௨	௧௧	மாதனை	மாத்தை
௮௦	௨௫	யிருப்ப	யிருப்பித்து